23 DEC 2014


# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 027 வள்ளுவர் ஆண்டு: 2045 மார்கழி 08, செவ்வாய்க்கிழமை 23.12.2014


**வானிலை**
மேகமூட்டமான வானிலை காணப்படும் மாலை வேளை மழை பெய்யக் கூடும்.

## இரணைமடு குளத்தின் 10 வான் கதவுகள் திறப்பு

கிளிநொச்சி, டிசெ.23
வடக்கு மாகாணத்தின் மிகப் பெரிய நீர்த்தேக்கமான இரணைமடுக் குளத்தின் 10 வான் கதவுகள் நேற்றுக் காலை திறக்கப்பட்டன.
கடந்த சில நாள்களாக கன மழையுடனான காலநிலை நிலவிவரும் நிலையில் குளத்தின் நீர் வரத்து அதிகரித்திருந்தது. அதன் நீர்மட்டம் நேற்றுக் காலை பக்.26



இரணைமடுக் குளத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டதை அடுத்து பொங்கிப்பிரவாகித்து நீர் பாயும் காட்சி.

## தேர்தல் விதிகளை மீறி நேற்று அரச நியமனம்

### வழங்கினார் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், டிசெ 23
ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூலவாக்களிப்பு இன்று இடம்பெறவுள்ள நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் சுகாதாரத் தொண்டர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று நிரந்தர நியமனக் கடிதங்களை வழங்கியுள்ளார்.
யாழ்.போதனா வைத்திய சாலையுடன் இணைந்துள்ள யாழ். தாதியர் கல்லூரியில் வைத்து நேற்று முற்பகல் இந்த நியமனக் கடிதங்களை அமைச்சர் வழங்கியுள்ளார். பக்.25

# மூன்றில் இரண்டை இழந்தார் மஹிந்த

## ரிசாத்தின் முடிவால் அரசுக்குச் சிக்கல்



யாழ்ப்பாணம், டிசெ. 23
ஜனாதிபதி மஹிந்த தலைமையிலான அரசு, ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் அமைச்சர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அடுத்தடுத்து இழந்து வருகின்றது. பக்.19



## "மஹிந்த ஆட்சியில் சிறுபான்மை மக்களுக்கு அச்சுறுத்தல்"

### கட்சி மாறிய காரணத்தை விளக்கினார் ரிசாத்

யாழ்ப்பாணம், டிசெ.23
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் சிறுபான்மைச் சமூகத்தினர் அச்சத்துடன் வாழ வேண்டிய நிலையில் உள்ளனர். அதனை மாற்றவே பொது எதிரணியுடன் இணைந்து கொண்டேன் – இவ்வாறு தெரிவித்தார் ஆளும் தரப்பில் இருந்து பொது எதிரணியுடன் இணைந்து கொண்டுள்ள அமைச்சர் ரிசாத் பதியுதீன்.
தமது கட்சியைச் சேர்ந்த 7 மாகாண சபை உறுப்பினர்களும், 69 உள்ளூராட்சி சபை உறுப்பினர்களும் இந்தப் புதிய அரசியல் பயணத்தில் இணைந்து கொண்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். பக்.26

## சீரற்ற காலநிலை; வடக்கு, கிழக்கில் மக்கள் இடம்பெயர்வு

தற்போது நாடு முழுவதும் காணப்படும் சீரற்ற காலநிலையால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். வடக்கு, கிழக்கின் பல பகுதிகளில் வெள்ள இடர் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். பக்.22

## நலிந்தது வடக்கு எதிரணி!

யாழ்ப்பாணம், டிசெ. 23
அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் பொது எதிரணியை ஆதரிக்கும் தீர்மானத்தை எடுத்ததை அடுத்து, வடக்கு மாகாண சபையின் எதிரணி உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மேலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதுவரையில் 8 ஆக இருந்த உறுப்பினர் எண்ணிக்கை, தற்போது ஆறாகக் குறைவடைந்துள்ளது.
அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் பொது பக்.25

## வடக்குக் கல்வியில் ராணுவத் தலையீடு

### இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், டிசெ 23
வடமாகாணத்தில் கல்விச் செயற்பாடுகளில் இராணுவத்தின் தலையீடுகள் உள்ளதால் சுதந்திரமாகக் கல்வியைக் கொண்டு போகமுடியாத நிலையிலும். கல்வி அதிகாரிகள் சுயமாக வேலை செய்யமுடியாத நிலையிலும் உள்ளனர். தேர்தல் முடிவடைந்து மாகாண சபை உருவாகியும் அதே சூழ்நிலையில் தான் வடக்கு மாகாணத்தின் கல்வி நிலைமை உள்ளது பக்.21

## வடக்கு படைகளை குறைக்க ரணில் - மைத்திரி ஒப்பந்தம்

### பொது எதிரணியின் மீது அமைச்சர் திஸ்ஸ அடுக்கடுக்காகக் குற்றச்சாட்டுக்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 23
அதி உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்குதல், வடக்கில் நிலை கொண்டுள்ள இராணுவத்தை 50 சதவீதத்தால் குறைத்தல், 13 ஆவது திருத்தத்தை தாண்டிய அதிகாரப் பகிர்வு, போர்க் குற்ற விசாரணையை முன்னெடுத்துச் செல்லுதல். – இவையே பொது எதிரணியின் வேலைத் திட்டம் என்று சாடியுள்ள அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க, இவற்றுக்கு இணங்கி பொது எதிரணி பக்.25

## தபால் மூல வாக்களிப்பு தீவிர கண்காணிப்பில்

யாழ்ப்பாணம், டிசெ. 23
ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நாடளாவியரீதியில் இன்று நடைபெறவுள்ளது. அதற்குரிய ஏற்பாடுகள் யாவும் தேர்தல்கள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வடக்கு மாகாணத்தில் தபால் மூல வாக்களிப்பு, அதிகூடிய கண்காணிப்பில் நடைபெறவுள்ளது. பக்.02

## மஹிந்த பரப்புரையில் இராணுவம் முழுவீச்சு

### 'டிரான்பரன்ஸி' அமைப்பு குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 23
இலங்கை இராணுவம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றமை தொடர்பிலான ஆதாரங்கள் கிடைத்துள்ளன என்று தெரிவித்துள்ள 'டிரான்பரன்ஷி' அமைப்பு, அந்த ஆதாரங்களைத் தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது. பக்.26

# செய்திகள்

## தபால் மூல வாக்களிப்பு தீவிர கண்காணிப்பில்

யாழ்ப்பாணம், டிசெ. 23
ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நாடளாவியரீதியில் இன்று நடைபெறவுள்ளது. அதற்குரிய ஏற்பாடுகள் யாவும் தேர்தல்கள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வடக்கு மாகாணத்தில் தபால்மூல வாக்களிப்பு, அதிகூடிய கண்காணிப்பில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், தேர்தல் கடமையில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்களுக்கான தபால்மூல வாக்களிப்பு இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது. இதன் பின்னர் எதிர்வரும் 26 ஆம் திகதி பொலிஸாருக்கு மாத்திரமும், 30 ஆம் திகதி வாக்களிக்கத் தவறியோருக்கும் இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் 25 ஆயிரத்து 930 அரச உத்தியோகத்தர்கள் தபால்மூல வாக்களிக்கவுள்ளனர். அத்துடன் வடக்கில் நிலை கொண்டுள்ள படையினர், சிவில் பாதுகாப்புப் படையினர் ஆகியோரும் வாக்களிக்கவுள்ளனர். அவர்களது வாக்களிப்பை கண்காணிப்பதற்காக விஷேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

# நிதி ஒதுக்கீட்டில் புறக்கணிக்கப்படும் வடக்கு

### கிராமத்துக்கு ஒரு மில்லியன் திட்டத்தில் 5 மாவட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடில்லை

யாழ்ப்பாணம், டிசெ. 23
வடக்கு மாகாணத்துக்கு அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டு வருவதாக கொழும்பு அரசு தெரிவித்து வருகின்றது. ஆனாலும், கிராமத்துக்கு ஒரு மில்லியன் வேலைத் திட்டத்துக்கு வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாகாணங்களுக்கே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கொழும்பு அரசின், பொருளாதார அபிவிருத்தி அமைச்சினது செயற்திறன் அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள், வடக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் மாத்திரம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமையும், இந்த செயற்திறன் அறிக்கை மூலம் அம்பலத்துக்கு வந்துள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் கிராமத்துக்கு ஒரு மில்லியன் செயற்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. அதில் ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு மில்லியன் ரூபா வழங்கி, அதனூடாக அந்தக் கிராமத்தை மேம்படுத்துவதே நோக்கமாகும்.

ஆனாலும் தென்பகுதியில் கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபாவுக்கு மேலதிகமாகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாகக் கொழும்பு மாவட்டத்தில் 557 கிராமங்கள் உள்ள போதும், 660 மில்லியன் ரூபாவும், அம்பாறை மாவட்டத்தில் 503 கிராமங்கள் உள்ள போதும் 529 மில்லியன் ரூபாவும், கண்டி மாவட்டத்தில் ஆயிரத்து 188 கிராமங்கள் உள்ள போதும், ஆயிரத்து 213 மில்லியன் ரூபாவும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 572 கிராமங்கள் உள்ள போதும் 576 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தென்பகுதியில் கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபாவுக்கு மேலதிகமாக ஒதுக்கப்பட்ட போதும், வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களுக்கும் நிதி எதுவும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. உண்மையான நிலைமை இவ்வாறுள்ள போதும், கொழும்பு அரசு வடபகுதிக்கு அதிகளவான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-5)

# இலங்கை மீனவர்கள் நாடு திரும்புகின்றனர்

இராமேஸ்வரம், டிசெ.23
இந்தியக்கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு, விடுவிக்கப்பட்ட இலங்கை மீனவர்கள் 38 பேர் இன்று இலங்கையை வந்தடையவுள்ளனர்.

நத்தார் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு இலங்கை மீனவர்களை விடுவிக்க இந்திய மத்திய அரசு உத்தரவிட்டிருந்த நிலையில் படகுகளைப் பறிமுதல் செய்து கொண்டு மீனவர்கள் மட்டும் விடுவிக்கப்பட்டுள்ளனர். நேற்று மீனவர்களும் படகுகளும் விடுவிக்கப்படுவர் என தமிழக முதல்வர் ஓ.பன்னீர்ச் செல்வத்தால் அறிவிப்பு வழங்கப்பட்டிருந்தது. எனினும் மீனவர்களை மட்டும் விடுவிப்பு செய்துள்ளனர். விடுவிப்புச் செய்யப்பட்டுள்ள மீனவர்கள் சென்னை கடலோரக்காவல் படையினரின் கப்பல் மூலம் நேற்றுக் காலை இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். மீனவர்கள் இன்று காலை கரை சேருவர். அத்துடன் அதே கப்பல் மூலம் இலங்கையில் விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் இந்தியாவுக்கு கொண்டு செல்லப்படவுள்ளனர். (ற-14)

# 66 இந்திய மீனவர் பதிலுக்கு விடுதலை

யாழ்ப்பாணம்.டிசெ.23
இலங்கை – இந்தியாவுக்கிடையில் நல்லிணக்கத்தைப் பேணும் வகையில் இலங்கைக் கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடித்தமைக்காகக் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 66 பேர் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஏனைய 15 மீனவர்களும் இந்த வாரம் விடுவிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக் கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கடந்த 9 ஆம் திகதி பருத்தித்துறை முனைக் கடற்பரப்பில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் 43 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட மீனவர்களுக்கு நேற்று வரை விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அவர்கள் நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்த கடிதத்தில் குறிக்கப்பட்டிருந்த விவரங்களின் அடிப்படையில் 28 மீனவர்களை விடுவிக்கவும், 15 மீனவர்களை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் பருத்தித்துறை நீதிமன்றின் பதில் நீதிவான் பொ.குமாரசுவாமி உத்தரவிட்டார்.

இந்திய மீனவர்களை விடுவிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து அறிவுறுத்தல் கடிதம் நேற்றுக் காலை பருத்தித்துறை மற்றும் ஊர்காவற்றுறை நீதிமன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தபோதும் மீனவர்களை விடுவிக்க வேண்டாம் என மீள இன்னொரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. பருத்தித்துறை நீதிமன்றில் மீனவர்கள் நேற்று முற்படுத்தப்பட்டிருந்த நிலையில் மீனவர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்ட கடிதத்துடன் மீனவர்களை விடுவிக்க மீளவும் அறிவுறுத்தல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் கடிதத்தில் குறிக்கப்பட்ட பெயர் விவரங்களை உடைய 28 மீனவர்களை மட்டும் பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று விடுவிப்பு செய்துள்ளது. ஏனைய 15 மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அதேவேளை ஊர்காவற்றுறை நீதிமன்றால் விளக்கமறியலில் நீடிக்கப்பட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 38 இந்திய மீனவர்களும் சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட மீனவர்கள் யாழ். இந்தியத் துணைத் தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் படகு மூலமாக இராமேஸ்வரத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர். (ற-14,109)

# வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளர் யாழில் தேர்தல் பரப்புரைகளில்

### அரச அலுவலருக்கான கட்டுப்பாடுகளை மீறி



யாழ்ப்பாணம், டிசெ. 23
தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளில் அரச அதிகாரிகள் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஈடுபடக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளபோதும், யாழ். மாட்ட வாழ்வின் எழுச்சித் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் ஆர்.ரகுநாதன், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் நேரடியாகத் தொடர்ச்சியாகப் பங்கெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரை யாழ். மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்றது. அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ மற்றும் சுசில் பிரேமஜயந்த ஆகியோர் தலைமையில் கடந்த ஒரு வாரமாக இந்தப் பரப்புரை நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

இந்தப் பரப்புரை நடவடிக்கைகளில் அரச அதிகாரிகள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பங்கெடுக்க முடியாது. ஆனாலும் அதனையும் மீறி யாழ். மாவட்ட செயலகத்தில் கடமையாற்றும் அரச அதிகாரி ஒருவர் பங்கெடுத்து வருகின்றார். அத்துடன் அவர் தனது அலுவலக வாகனத்தையும் பரப்புரை நடவடிக்கைகாகப் பயன்படுத்தி வருகின்றார்.

கடந்த 18 ஆம் திகதி, வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையிலான தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலும், அதன் பின்னர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பங்கெடுத்த கூட்டங்களிலும், மாவட்ட வாழ்வின் எழுச்சித் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் பங்கெடுத்துள்ளார்.

இது தொடர்பில் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

# தொண்டமான் இந்தியா பயணம்

கொழும்பு, டிசெ.23
இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் இந்தவாரம் இந்தியா பயணமாகவுள்ளார். அங்கிருந்து திரும்பியதும் விசேட செய்தியொன்றை அவர் வெளியிடவுள்ளார் என்று காங்கிரஸ் கட்சியின் நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, தமது கட்சி ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கே ஒத்துழைப்பை வழங்கும் என்று ஆறுமுகம் தொண்டமான் ஏற்கனவே அறிவித்துள்ளார். ஆயினும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் மாகாண சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் பெருமளவிலான உறுப்பினர்கள் எதிரணியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென்ற நிலைப்பாட்டில் உள்ளனர் என்று கூறப்படுகின்றது. (ற-22)

வலி. தெற்கு பிரதேச சபை
23 DEC 2014

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** தொழிலில் இருந்த போட்டிகள் குறையும். மறைமுக எதிர்ப்புகள் நீங்கும். மனதில் நம்பிக்கை உண்டாகும். காரியத்தடை தாமதம் ஏற்படலாம். வீண் அலைச்சல் இருக்கும். எதிலும் எச்சரிக்கை தேவை.

**இடபம்:** வீண் அலைச்சலுக்கு பிறகே எந்தவொரு காரியமும் நடந்து முடியும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரி சொல்லிய ஒரு வேலையை முடிக்க அலைந்து திரிய வேண்டி இருக்கும்.

**மிதுனம்:** வெளிவட்டார பழக்க வழக்கங்களை குறைத்துக் கொள்வது நல்லது. ஆயுதம், நெருப்பு இவற்றை கையாளும் போதும் வாகனங்களில் செல்லும் போதும் கவனம் தேவை.

**கடகம்:** எந்தக் காரியத்திலும் அவசர முடிவு எடுக்காமல் இருப்பதும் வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பதும் நல்லது. நிதானத்தைக் கடைப்பிடிப்பதும் நல்லது. மற்றவர்களுக்கு உதவும் போது கவனமாக இருப்பது நல்லது.

**சிங்கம்:** தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் கடின உழைப்புக்குப்பின் முனனேற்றம் அடைவார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாகச் செயற்பட்டு பாராட்டு பெறுவார்கள்.

**கன்னி:** மனதில் துணிச்சல் ஏற்படும். கடன்கள் இருக்கும். முக்கியமான வேலைகளில் தாமதம் உண்டாகும். வீண் பிரச்சினைகளை கண்டால் ஒதுங்கி சென்று விடுவது நல்லது.

**துலாம்:** புதிய முயற்சிகளை எடுப்பதற்கு முன் தகுந்த ஆலோசனைகள் பெறவும். கூட இருப்பவர்களிடம் கவனமாக இருப்பது நல்லது. ஒரு சில காரியங்களில் அவசரமாக முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நன்மை தரும்.

**விருச்சிகம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக வேலையாக முக்கிய நபர்களைச் சந்திக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். கவனமாகப் பேசுவது நல்லது.

**தனுசு:** சிலருக்கு இடமாற்றம் உண்டாகலாம். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அடுத்தவரை நம்பி பொறுப்புக்களை ஒப்படைப்பதைத் தவிர்ப்பது நல்லது.


**மகரம்:** அடுத்தவருக்கு உதவி செய்யும் போது கவனம் தேவை. வீண் மன சங்கடம் ஏற்படலாம். இயந்திரங்களை கையாளும் போது கவனம் தேவை.

**கும்பம்:** முயற்சிகள் சாதகமான பயன் தரும். எதிர்ப்புக்கள் விலகும். புதிய நண்பர்கள் கிடைப்பதுடன் அவர்களால் நன்மையும் உண்டாகும். மரியாதை கூடும். மனதில் துணிச்சல் அதிகரிக்கும். தன்னம்பிக்கையுடன் செயலாற்றுவீர்கள்.

**மீனம்:** குடும்பத்தில் இதமான சூழ்நிலை நிலவும். குடும்பத்தில் இருந்த கருத்து வேற்றுமை நீங்கி ஒற்றுமை உண்டாகும். உறவினர்கள் மூலம் நன்மை உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு காரிய வெற்றி காண்பீர்கள்.

## இன்றைய பேஸ்புக் தத்துவம்

திருமண மேடையில் மணமகனுக்கு கொடுக்கபடும் கடைசி *Warning* "பொண்ண கூப்பிடுங்க நல்ல நேரம் முடியப் போகுறது"....



# புஷ்ஷின் புதுவேசம்



அமெரிக்கா முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் நத்தார் தாத்தா வேடத்தில், சிறுவர் மருத்துவ நிலையத்துக்குச் சென்று அங்குள்ள சிறுவர்களுக்கு பரிசுகளை வழங்கியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியான அவர், இரகசிய பாதுகாப்பு சேவையின் ஆயுட்கால பாதுகாப்பை பெற்றுள்ளதால் நத்தார் தாத்தா வேடத்தில் சென்ற அவருடன் தேவ தூதர்கள் வேடத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர் சென்றுள்ளனர்.

அவ்வாறு சென்ற பாதுகாப்பு உத்தியோத்தர் ஒருவரே புஷ்ஷின் நத்தார் தாத்தா வேடம் தொடர்பான தகவலை வெளியிட்டுள்ளார்.

ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் ஒரு வாரத்துக்கு முன்னர் அமெரிக்க நியூயோர்க் நகரிலுள்ள செப்டெம்பர் 11 ஞாபகார்த்த அருங்காட்சியகத்துக்கு எதுவித முன்னறிவிப்புமின்றி பயணம் செய்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

# கல்யாணி கலக்கப் போகிறாரா?



ஆண்டாள் அழகர், தாயுமானவன் தொடர்களில் நடித்து வரும் கல்யாணி விரைவில் தயாரிப்பு நிறுவனத்தை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அண்மையில் திருமணமான இவர், தனது கணவருடன் சேர்ந்து சின்னத்திரை தயாரிப்பு நிறுவனத்தை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கேராளவைச் சேர்ந்தவர் கல்யாணி. இவரது அம்மா ஒரு நடனக்காரி. அப்பா விமானி. சினிமாவில்தான் கல்யாணி நடிக்க ஆரம்பித்தார். ஆனால் அவருக்கு சரியான படங்கள் அமையவில்லை. ஒன்றிரண்டு படங்களில் நடித்து விட்டு சின்னத்திரைக்கு வந்துவிட்டார். 'பீச் கேர்ள்' நிகழ்ச்சி அவருக்கு நல்ல பெயரைக் கொடுத்தது. அதன் பிறகு தொடர்களில் நடிக்க ஆரம்பித்தார்.


சின்னத்திரை தொடர்களில் நடித்தாலும் மீண்டும் சினிமாவில் நடிக்கும் ஆசையுடன் இருக்கின்றார் கல்யாணி. இதற்காக கதை கேட்க ஆரம்பித்திருக்கின்றார். கதாநாயகியாக இல்லாவிட்டாலும், நல்ல கனதியான கதாபாத்திரம் கிடைத்தால் நடிக்கத் தயாராக இருக்கின்றார்.

அவரது கணவரும், அவரது விருப்பத்துக்கு ஆதரவாக இருக்கின்றார். அத்தோடு சின்னத்திரையில் 'ரியாலிட்டிஷோ' அல்லது சின்னத்திரை தொடர் தயாரிக்கும் திட்டத்திலும் இருக்கின்றார். இதற்காக கணவருடன் சேர்ந்து விரைவில் தயாரிப்பு நிறுவனத்தை தொடங்க இருக்கின்றார்.

## கொஞ்சம் சிரிங்க பாஸ்...

பஸ் ஸ்ராண்டில் பஸ் நிற்கும். ஓட்டோ ஸ்ராண்டில் ஓட்டோ நிற்கும். சைக்கிள் ஸ்ராண்டில் சைக்கிள் நிற்கும். ஆனால், கொசுவத்தி ஸ்ராண்டில் கொசு நிற்குமா ??'

பில் கேட்ஸோட மகனாக இருந்தாலும், கழித்தல் கணக்கு போடும் போது, கடன் வாங்கித்தான் ஆகணும்.




அம்மாவும் நீயே, அப்பாவும் நீயே
அன்புடனே ஆதரிக்கும் தெய்வமும் நீயே!!!



# செய்திகள்

## பொலிஸ் பொறுப்பதிகாரி பதவி விலகல்

காலி, வதுரம்ப பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி (ஓ.ஐ.சி) பொலிஸ் அத்தியட்சகர் பி.எல். கீர்த்திசிங்க தனது பதவியில் இருந்து விலகியுள்ளார்.

அரசியல்வாதிகளினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற அழுத்தங்கள் காரணமாகவே தான் பதவி விலகுவதாக அவர் அறிவித்துள்ளார்.

அரசியல்வாதிகளினால் தனக்குக் கொடுக்கப்படும் அழுத்தங்கள் தொடர்பில் சில உயரதிகாரிகளுக்குத் தெரியாது என்றும், சுயாதீன பொலிஸ் சேவையொன்று ஏற்படுத்தப்படுமாயின் பொலிஸ் சேவையில் மீண்டும் இணைந்துகொள்வதாகவும் அவர், தனது பதவி விலகல் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவின் பிரசார மேடைக்குத் தீ வைத்தனர் என்ற குற்றச்சாட்டில் பிரதியமைச்சர் நிசாந்த முத்துஹெட்டிகமவின் ஆதரவாளர் மூவரை வதுரம்ப பொலிஸாரே கைது செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (த)



ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளில் வைக்கப்பட்டிருந்த ஜனாதிபதி மஹிந்தவின் கட்டவுட்டுகள் அனைத்தும் நேற்று மறைக்கப்பட்டுள்ளன. இவை கழற்றப்படாமல் ஏன் ஜனாதிபதியை மட்டும் மறைத்துள்ளார்கள் என்று பொதுமக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர். (த-21)

## கஞ்சாவுடன் இருவர் வவுனியாவில் கைது

வவுனியா பஸ் நிலையப் பகுதியில் கேரளக் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சியிலிருந்து கொழும்பு கொலன்னாவ நோக்கிச் செல்வதற்காக வவுனியா பஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் நின்ற இருவர் மீது சந்தேகம் அடைந்த பொலிஸார் அவர்களது பயணப் பொதியைச் சோதனையிட்டனர்.

இதன்போது 2 கிலோ 125 கிராம் கேரளக் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது என வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-402)

# விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம்

### ஏக்கருக்கு 2800 ரூபா

வவுனியா, டிசெ 23

வவுனியாவில் கடந்த வருடம் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணப் பணம் காசோலையாக வழங்கப்பட்டு வருகின்றது.

2013ஆம் ஆண்டு ஏற்பட்ட வறட்சியால் வவுனியாவில் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டன. இதனையடுத்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்குமாறு ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்ட நிலையில் தற்போது பிரதேச செயலகங்கள் ஊடாக அவை வழங்கப்பட்டு வருகின்றன.

விவசாயி ஒருவருக்கு ஏக்கருக்கு தலா 2ஆயிரத்து 800 ரூபா வீதம் வழங்கப்பட்டு வரும் நிலையில் ஒருவர் 5 ஏக்கருக்கு மாத்திரமே நிவாரணம் பெற்றுக் கொள்ளமுடியும்.

தற்போது பெரும்போக நெற்செய்கை மேற்கொண்டுள்ள விவசாயிகளுக்கு இந்த நிவாரணத்தின் முலம் உரம், களைநாசினி போன்றவற்றை பெற்றுக் கொள்வதற்கு உதவியாக உள்ளதாக அவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இந்தக் கொடுப்பனவுக்கான ஆரம்ப கட்ட நிகழ்வு வவுனியா மாவட்ட அரச அதிபர் தலைமையில் அண்மையில் மாவட்ட செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-421)

## குடும்பஸ்தரை தாக்கிவிட்டு தப்பிச் சென்ற கும்பல்

தென்மராட்சி,டிசெ.23

வீதியில் சென்ற குடும்பஸ்தரை வழி மறித்த கும்பல் மோசமாகத் தாக்கிவிட்டு தப்பியோடியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு நாவற்குழி தெற்கில் இடம்பெற்றது.

இருட்டான பகுதியில் ஆள்கள் நடமாட்டமில்லாத இடத்தில் பின்தொடர்ந்து வந்த கும்பல் மோசமாகத் தாக்கிவிட்டு இருளில் மறைந்து சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த தம்பு கருணலிங்கம் (வயது-49) என்பவர் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-9)

# சட்ட மருத்துவ அதிகாரியின் விடுமுறையால் அலைக்கழிவு

கிளிநொச்சி ,டிசெ. 23

கிளிநொச்சி பொது வைத்தியசாலையின் சட்ட மருத்துவ அதிகாரி விடுமுறையில் நின்றதால் அவர் வரும்வரை உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளாமல் பல மணி நேரம் சவச்சாலையில் காத்திருந்து அவர் வராததால் இரவு 8 மணிக்குப் பின்னர் வேறொரு மருத்துவர் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொண்ட பின் இரவு 10 மணிக்குப் பின்னர் சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு பளை சோரன்பற்றைச் சேர்ந்த 32 வயதுப் பெண்ணுக்கு நெஞ்சுவலி ஏற்படவே பளை மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டு உடனடியாகக் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பயனின்றி கடந்த சனிக்கிழமை அதிகாலை உயிரிழந்தார்.

சாவு தொடர்பாக பளைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு நீதிவானின் முன்னிலையில் அறிக்கை சமர்ப்பித்தனர். குறித்த பெண்ணின் சடலத்தைக் கிளிநொச்சி பொது வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்திய பின்னர் உறவினரிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். அதற்கான கடிதம் சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு மருத்துவமனை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.

அந்தவேளையில் சட்ட மருத்துவ அதிகாரி கொழும்பு சென்றுள்ளதாகவும், அவர் வந்து உடற்கூற்றுப் பரிசோதனை மேற் கொள்ளப்படுமெனவும் உறவினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

இரவு 8 மணி வரை குறித்த சட்ட மருத்துவ அதிகாரி வருகை தராததால் மற்றொரு மருத்துவர் உடற்கூற்றுப் பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி அடிக்கடி கொழும்பு செல்வதால் சடலங்களை உடற்கூற்றுப் பரிசோதனை செய்வது காலதாமதமடைவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# மனைவியை வாளால் வெட்டியவர் மறியலில்

### யாழ்.நகரில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 23

நீதிமன்றில் தாபரிப்பு வழக்கு நிலுவையிலுள்ள நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் பணி புரியும் மனைவியை வாளால் வெட்டிப் படுகாயம் ஏற்படுத்தியுள்ளார் அவரது கணவன். நேற்றுக் காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வெட்டப்பட்ட பெண்ணுக்கு உதவச் சென்றவர்களுக்கும் வாளைக் காட்டி அச்சுறுத்தியுள்ளார் அவர்.

யாழ்.பஸ் நிலையம் முன்பாக நேற்றுக் காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த நிசாந்தி (வயது-24) என்பவரே படுகாயமடைந்தார். அவர் திருமணமாகி 5 வருடங்களாகக் கணவனைப் பிரிந்து வாழ்கிறார். மனைவி நீதிமன்றில் தாபரிப்பு வழக்குத் தொடர்ந்துள்ளார். தாபரிப்புக்கு அவரது கணவன் சம்மதமில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. அதனால் நேரடியாகவே மனைவிக்கு அவர் அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று தனது மனைவியை வாளால் வெட்டியும் குத்தியும் காயமேற்படுத்தியுள்ளார். இதனையடுத்து வாள்வெட்டு மேற்கொண்டவர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

# மனிதக் கழிவகற்றல் மார்ச்சில் நடைமுறை

## யாழ்.மாநகர சபை எல்லைக்குள்

யாழ்ப்பாணம், டிசெ. 23

யாழ். குடாநாட்டில் மனிதக் கழிவுகளால் நிலக்கீழ் நீர் பெருமளவில் மாசடைந்துள்ளது. குறிப்பாகக் குடியடர்த்தி அதிகமுள்ள யாழ். மாநகர சபைப் பிரதேசத்தில் இந்த மாசடைதல் மிகவும் அதிகமாகவுள்ளது. இதனால், இப் பிரதேசங்களில் தரைக்கீழ் நீரை மனித பாவனைக்கு உபயோகிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் உள்ள வீடுகள், பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள், மருத்துவ மனைகள், விடுதிகள், நிர்வாக மையங்கள் போன்றவற்றில் உள்ள மலசல கூடங்கள், சமையல் அறை மற்றும் குளியல் அறை என்பவற்றிலிருந்து வெளியேறும் கழிவுகள் குழாய் வலைப் பின்னல் மூலமாக வெளியேற்றப்படவுள்ளன. அவை கல்லுண்டாய் வெளியில் அமையவுள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்படவுள்ளன. இவ்வாறு தெரிவித்தார் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையில் சமூக அணி திரட்டல் விசேடத்துவ நிபுணர் தெ.பாலசுப்பிரமணியம்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

சுமார் 85 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. கழிவுகளினால் நிலம், நீர், காற்று என்பன மாசடைகின்றன.

தற்பொழுது யாழ்.மாநகரப் பகுதிக்கு கோண்டாவில் பிரதேசத்திலிருந்து குழாய் மூலம் நீர் வழங்கப்படுகின்றபோதிலும் இவ்வாறு வழங்கப்படும் நீரிலும் நைத்திறேற் எனும் இரசாயனம் கலந்துள்ளமை கவலைக்குரியது. எனவே யாழ்.மாநகர சபைப் பிரதேசத்திற்கு இந்தத் திட்டம் அவசியமாகும்.

இந்தத் திட்டம், முதலில் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் மலசல கூடம், குளியலறை மற்றும் சமையல் அறை என்பவற்றிலிருந்து குழாய் இணைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு வீட்டின் முன்னால் அமையவுள்ள உள்ளகப் பரிசீலிப்புக் குழியுடன் இணைக்கப்படும். இத்தகைய பல உள்ளகப் பரிசீலிப்புக் குழிகள் பின்பு ஒன்றிணைக்கும் நீர்ப்பம்பி நிலையங்களுடன் இணைக்கப்படும். இவ்வாறு அமையவுள்ள 25 நீர்ப் பம்பி நிலையங்கள் பிரதான கழிவகற்றல் குழாயுடன் இணைக்கப்படும். இவ்விதமாக கழிவுகள், பிரதான குழாய் மூலமாக கல்லுண்டாய் வெளியில் அமையவுள்ள சுத்திகரிப்பு நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுச் சுத்திகரிக்கப்படும். அதன் மூலம் பெறப்படும் சுத்திகரிக்கப்பட்ட நீர் விவசாய நீர்ப்பாசனத்துக்குப் பயன்படுத்தப்படும். எஞ்சிய திண்மக் கழிவு கூட்டுப் பசளையாக மாற்றப்பட்டுப் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்படவுள்ளது.

கழிவுகளை உறிஞ்சித் தள்ளும் 25 பம்பி நிலையங்கள், கழிவகற்றல் திட்டப் பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ளன.

முதற் கட்டமாக 12 பம்பி நிலையங்களுடன் 8 ஆயிரத்து 600 அலகுகள் இணைக்கப்படும். இரண்டாம் கட்டமாக 13 பம்பி நிலையங்களுடன் 7 ஆயிரத்து 250 அலகுகள் இணைக்கப்படும். இவை அனைத்தும் பிரதான குழாயுடன் இணைக்கப்பட்டு, அதனூடாகச் சுத்திகரிப்பு நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுச் சுத்திகரிக்கப்படும்.

இந்தக் கழிவகற்றல் திட்டமானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது – என்றார். (த–4)



## சவுக்கு விற்பனை அமோகம்

நத்தார் திருநாளை முன்னிட்டு யாழ்.கரையோரப் பகுதிகளில் சவுக்கு விற்பனை களைகட்டிக் காணப்படுகின்றது. தூர இடங்களில் இருந்து வாகனம் மூலம் எடுத்து வரப்படும் சவுக்குக் கிளைகள் வீதியோரங்களில் வைத்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. கிறிஸ்மஸ் கொண்டாட்டத்துக்கென இவற்றை மக்கள் கொள்வனவு செய்து வருகின்றனர். (த–17)

## தாதியர் பயிற்சிக்கு செல்லாதோர் பதிவை மேற்கொள்ள அறிவுறுத்து

### விருப்பமில்லையெனில் அறிவிக்குக

யாழ்ப்பாணம், டிசெ. 23

யாழ்.மாவட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தாதியர்களுக்குப் பற்றாக்குறை நிலவும் நிலையில், தாதியர் பயிற்சிநெறிக்கு விண்ணப்பித்து நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டு அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்ட 46 பேரில் 15 பேர் நேற்றுத் தாதிய அனுமதிக்குச் செல்லவில்லை.

குறித்த 15 பேரும் 3 நாள்களுக்குள் யாழ்.தாதியர் கல்லூரிக்குச் சென்று பதிவை மேற்கொள்ளுமாறும், பயிற்சிநெறியை விரும்பாதவர்கள் 3 நாள்களுக்குள் அது தொடர்பில் கடிதம் மூலமாக அறிவிக்குமாறும், அதன் மூலம் ஏனையோருக்கு வாய்ப்பு வழங்கி தாதியர் பற்றாக்குறையை ஓரளவு நிவர்த்தி செய்ய முடியும் என்றும் யாழ். தாதியர் கல்லூரி அதிபர் செல்வி ரஜுலாதேவி வல்லிபுரநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

யாழ். மாவட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தாதியர்களுக்குத் தொடர்ந்து பற்றாக்குறை நிலவுகிறது. தாதியர் பயிற்சிநெறிக்கு விண்ணப்பம் கோரப்பட்டது. பலர் விண்ணப்பித்தனர். அவர்களுக்குக் கொழும்பிலிருந்து வந்திருந்தவர்களால் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. அவர்களில் முதல் அணியினராகத் தெரிவு செய்யப்பட்ட 23 பேருக்கு எதிர்வரும் பெப்ரவரி 9 ஆம் திகதியும் இரண்டாம் அணியாகத் தெரிவு செய்யப்பட்ட 23 பேருக்கு எதிர்வரும் ஜூன் முதலாம் திகதியும் பயிற்சி ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுவிட்டது. அவர்களுக்கான பதிவு நடவடிக்கைகள் யாழ்.தாதியர் கல்லூரியில் நேற்று இடம்பெற்றது. தெரிவுசெய்யப்பட்ட குறித்த 46 பேருக்கும் ஒரு மாதத்துக்கு முன்னமே அதற்கான கடிதங்கள் அனுப்பப்பட்டுவிட்டன. ஆனால் இரண்டு அணியினரும் சேர்ந்த 46 பேரில் 31 பேர் மாத்திரமே நேற்று பதிவு செய்ய வருகை தந்திருந்தனர். ஏனைய 15 பேரும் சமுகமளிக்கவில்லை.

தாதியர் பயிற்சிநெறிக்கு ஆண்கள் 5 வீதமே தெரிவு செய்யப்படுகின்றனர். அதனால் 46 பேரில் 2 பேர் மாத்திரமே ஆண்கள். இந்தப் பயிற்சிநெறிக்கு ஆண்களுக்கான 5 வீதத்தை அதிகரித்தால் தகுதியுடைய பலர் இந்தக் கற்கை நெறியை மேற்கொண்டு தாதியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யலாம். ஆனால் அதனை மத்திய சுகாதார அமைச்சே முன்னெடுக்க முடியும். எனவே தாதியருக்குப் பற்றாக்குறை நிலவும் நிலையில் இந்தப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்தவர்கள் பதிவை மேற்கொண்டு கற்கையை தொடர்ந்து தாதியர்களாக வெளியேறுவதன் மூலமாகவே நிவர்த்தி செய்யலாம். குறித்த 15 பேரும் அது தொடர்பில் கவனம் செலுத்துமாறு அதிபர் மேலும் கேட்டுள்ளார். (த–4)



நாளைமறுதினம் வியாழக்கிழமை கிறிஸ்மஸ் கொண்டாடப்படவிருக்கின்றது. கிறிஸ்மஸ் விழாவுக்கான அலங்காரப் பொருள்கள் விற்பனை யாழ்ப்பாணத்தில் சூடு பிடித்துள்ளது. நத்தார் தாத்தா, நத்தார் மரம், குடில் வெளிச்சக் கூடுகள், அலங்கார மின் விளக்குகள் பரவலாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. (த–20)

# வட மாகாண சபைக்கு அதிக நிதி என அரசு பொய்ப் பிரசாரம்

## சரவணபவன் எம்.பி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 23

வடக்கு மாகாண சபைக்கு 2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டதாகவும், அவர்கள் மக்களுக்கு எதுவும் செய்யவில்லை என்று அரசு பொய்ப் பிரசாரம் செய்துவருகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

வரவு – செலவுத் திட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து வலி.மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் பல்வேறு வேலைத் திட்டங்களுக்கு 6 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாவினை இன்று வழங்கிவைத்தார். குறித்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2014 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தில் வடக்கு மாகாண சபைக்கு அதிகளவு நிதி ஒதுக்கப்பட்டதாகவும், அவை மக்களுக்காகச் செலவு செய்யப்படாது திறைசேரிக்குத் திரும்பிச் செல்கின்றது என்றும் அரசு தெரிவித்துவருகின்றது. அவ்வாறான ஒரு செயற்பாடு அரசினால் மேற்கொள்ளப்படவில்லை. அவர்கள் பொய்ப் பிரசாரத்தையே மேற்கொண்டு வருகின்றனர்.

இதனை வடக்கு மக்களும் நன்கு அறிவார்கள். இவற்றை எல்லாம் பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தன்னுடைய கையில் தான் வைத்துக்கொண்டிருக்கின்றார். போரினால் முற்றுமுழுதாக பாதிக்கப்பட்டது எமது மாகாணம். அதனை ஏனைய மாகாணங்களைப்போல மாற்ற வேண்டியது அனைவரதும் கடமையாகும்.

அவ்வாறானதொரு நிலையில் அரசின் கூற்று எவ்வாறு பொருத்தப்பாடாக அமையும் என அனைவரும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எனினும் 2015 ஆம் ஆண்டு வரவு–செலவுத்திட்டத்தில் ஓரளவு நிதி வடக்கு மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஒருவர் ஆட்சியில் இருந்து எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்தார் என நாம் நன்றாக அறிந்துவிட்டோம். எதிர்காலத்திலும் அவரை நம்புவதற்கு நாம் தயாராக இல்லை. தற்போது எங்களுக்கு மாற்றம் ஒன்றே அவசியம் – என்றார். (த)



# செய்திகள்

## மனிதக் கழிவுகள் மூலம் மாசடையும் கிணற்று நீர்

யாழ்ப்பாணம்,டிசெ. 23

யாழ். மாநகர சபைப் பகுதியில் நெருக்கமாகக் காணப்படும் குடியிருப்புக்கள் காரணமாக மலக்குழிகள் – கிணறுகளுக்கான இடைத்தூரம் உரிய அளவை விடக் குறைவாகவே உள்ளது. இதனால் மனிதக்கழிவுகள் மூலம் நிலத்தடி நீர் மாசடைகின்றது என்று இரணைமடு குடிதண்ணீர்த் திட்டத்தின் சுகாதாரத் திட்டம் குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கில் நீர் வடிகாலமைப்புச் சபை உத்தியோகத்தர் ரி.பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.



நல்லூர்ப் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் செயலக மண்டபத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் அவர் மேலும் கூறியதாவது:

"இந்தத்திட்டத்தின் மூலம் மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் மலக் கழிவுகளை அகற்ற 85 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அந்தப் பிரதேசத்தில் உள்ள 30 கிராம அலுவலர் பிரிவுகளில் 16 ஆயிரம் மலசலகூடங்கள், சமையலறை, குளியலறைக்கான கழிவுகளை குழாய் மூலம் இணைத்து நீர்ப்பம்பி நிலையங்களூடாக பிரதான குழாய் மூலம் கல்லுண்டாய் வெளியில் அமையவுள்ள சுத்தி கரிப்பு நிலையத்தில் சேர்க்கப்படும்.

இந்தத் திட்டத்தின் முதல் கட்டத்தில் 14 கிராம அலுவலர் பிரிவுகளும் இரண்டாம் கட்டத்தில் 16 கிராம அலுவலர் பிரிவுகளும் சேர்க்கப்படும். அந்தக் கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு விவசாய நீர்ப்பாசனத்துக்குப் பயன்படுத்தப்படும்"–என்றும் குறிப்பிட்டார்.

நல்லூர் உதவித் திட்டமிடல் அதிகாரி இ.சுரேந்திரநாதன், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கிராம அலுவலர்கள், பொதுமக்கள் எனப் பலர் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த விழிப்புணர்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (வ–7)

## வறட்சியால் ஏற்பட்ட பயிரழிவு இழப்பீட்டுத்தொகை வழங்கல்



தென்மராட்சி ,டிசெ. 23

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த வருடம் வறட்சி காரணமாக பயிரழிவு ஏற்பட்ட நெற்செய்கையாளர்களுக்கான விதை நெல்லுக்குரிய இழப்பீட்டுத் தொகை வங்கி மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

அந்தந்த கமக்கார அமைப்புக்களால் வழங்கப்பட்ட இழப் பீட்டுப் படிவங்களை சரிபார்க் கும் பணிகள்துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு பாதிக்கப்பட்ட நெற்செய்கையாளரிடம் உரிய உறுதிச் சீட்டில் கையொப்பம் பெறப்பட்டு வருகிறது.

கடந்த வருடம் பயிரிடப்பட்ட வயல்களின் பரப்பளவுக்கேற்ற வகையில் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை தனங்கிளப்பு கமக்கார அமைப்புக்கு உட்பட்ட நெற் செய்கையாளர்களின் விண்ணப்பப் படிவங்கள் உரிய அதிகாரிகளால் சரி பார்க்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டதாகத்தெரிவிக்கப்பட்டது. (வ–9)

## நல்லூர் பிரதேச சபையின் 'பட்ஜெட்' மக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.23

நல்லூர் பிரதேச சபையின் 2015 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இந்த வரவு – செலவுத்திட்டத்தை மக்கள் நாளை மறுதினம் 25ஆம் திகதி வரை பார்வையிடலாம் என்று சபையின் தலைவர் ப.வசந்த குமார் தெரிவித்தார்.

சபையின் கொக்குவிலில் உள்ள தலைமை அலுவலகம், நல்லூர் உப அலுவலகம், கொக்குவில் உப அலுவலகம் கோண்டாவிலில் உள்ள பொது நூலகம், கொக்குவில் மற்றும் நல்லூர் பிரதேச பொது நூலகங்களிலும் இந்த வரவு– செலவுத் திட்ட நகலைப் பார்வையிட முடியும். (வ–17)



யாழ். பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்கம் தனது பிரிவில் உள்ள 288 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அண்மையில் போஷாக்கு உணவுப் பொருள்களை வழங்கியது. (வ–7)

## ஆன்மிகச் சஞ்சிகை 'சனாதனி' வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ.23

'சனாதனி' என்ற பெயரில் ஆன்மிகச் சஞ்சிகை ஒன்று நீர்வேலியில் இருந்து வெளிவரத் தொடங்கியிருக்கிறது. நீர்வை தி.மயூரகிரி சர்மாவை ஆசிரியராகக் கொண்டு சனாதன சேவா பீடத்தினரால் இது வெளியீடு செய்யப்படுகின்றது.

காலாண்டு இதழாக மலரத் தொடங்கியிருக்கும் இந்தச் சஞ்சிகையின் முதலாவது இதழ் ஐயப்பன் வழிபாடு குறித்த சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. இதன் வெளியீட்டு நிகழ்வு கடந்த சனிக்கிழமை நீர்வேலி செல்லக் கதிர்காம ஆலயத்தில் இடம்பெற்றது. நீர்வைமணி குகதியாகராசக் குருக்கள் சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார். (வ)



## பூநகரியில் நடைபெற்ற சிறுவர் தின விழா

பூநகரி ,டிசெ. 23

பூநகரி பிரதேச செயலகத்தின் சர்வதேச சிறுவர் ,முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு கடந்த வெள்ளிக் கிழமை பூநகரி மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. இதன் போது விருந்தினர்களாகக் கலந்து கொண்டகிளிநொச்சி மாவட்ட உதவி அரச அதிபர் எஸ். கிருஷ்னேந்திரன், பூநகரி பங்குத்தந்தை வண. பிதா பிறையன் அடிகள் பூநகரி கோட்டக் கல்விஅலுவலர்சதர்மரத்தினம் ஆகியோர் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினர். அருகில் பிரதேச செயலர் சீசத்தியசீலன் நிற்பதையும்காணலாம். (வ–9)



## ஸ்ரீதுர்க்கா சன சமூக நிலைய முன்பள்ளிக்குத் தளபாடங்கள்

வலி.வடக்கு, டிசெ.23

புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஸ்ரீதுர்க்கா சனசமூக நிலைய முன்பள்ளிக்கு புளொட் தலைவரும், முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினரும், வடக்கு மாகாண சபை உறுப்பினருமாகிய தர்மலிங்கம் சித்தார்த்தனால் ஒரு தொகுதிதளபாடங்கள்கடந்தவெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.



வட மாகாணசபையின் பன்முகப்படுத்திய நிதியிலிருந்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய தளபாடங்களே இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன.

ஸ்ரீதுர்க்கா சனசமூக நிலையத் தலைவர் ரஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் போதுநலன்விரும்பிகள்சிலரால் அன்பளிப்புச் செய்யப் பட்ட கற்றல் உபகரணங்களும் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த பாடசாலைப் பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டன. எஸ். கெங்கா ஏற்பாட்டில் இதற்கான நிதி சேகரிக்கப் பட்டிருந்தது. அத்துடன் விடுமுறை நிறைவடைந்து மீண்டும் பாடசாலை ஆரம்பமாவதற்கு முன்பதாக பிள்ளைகளுக்குத் தேவையான மேலும் பல உபகரணங்களையும் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள் கலந்து கொண்டனர். (வ–86)

# அம்மாடியோவ்!

## இவ்வளவு போட்டிகளும் பரிசுகளும் எமக்கா?

| இல | போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு ரூ. | 2 ஆம் பரிசு ரூ. | 3 ஆம் பரிசு ரூ. | மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 02 | கவிதை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 10,000 | 7,000 | 5,000 | மாகாணம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 7,000 | 5,000 | 4,000 | மாகாணம் |
| | | C | தரம் 3, 4, 5 | 5,000 | 4,000 | 3,000 | மாகாணம் |
| 01 | சிறுகதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 02 | கவிதை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 03 | கட்டுரை | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 6, 7, 8, 9 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| 04 | ஓவியம் | A | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | B | தரம் 10, 11, 12, 13 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |
| | | C | தரம் 3, 4, 5 | 3,000 | 2,000 | 1,000 | மாவட்டம் |

# 30 அகவையில் உதயன்

**தமிழ் வளர்ப்போம் தமிழால் இணைவோம்!**

## *கவிதை! கவிதை!!*

### *வெற்றியிலும் பரிசு மழையிலும் திளைத்திடுங்கள்*

# உங்களால் முடியும் மாணவர்களே!

**தமிழ்க் கவிதை மேம்பாட்டில் தீவிர கரிசனைகாட்டிவரும் உதயனின் உதயன் 30ஆவது ஆண்டு மாபெரும் கவிதைப் போட்டி**

**தரம் 10, 11, 12, 13 இல் கற்கும் மாணவர்களே!**
**கவிதைத் தேர்வில் கலந்துகொண்டு பரிசில்களை வெல்லுங்கள்**

### கவிதைக்கான தலைப்புக்கள் இதோ!

- ❖'ஒழுக்கமே கல்விக்கு உன்னதமாம்'
- ❖'கற்றதன் வழி உயர்வு காண்போம்'

கவிதை ஒவ்வொன்றும் 40 வரிகளுக்குக் குறையாமலும் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். கவிதைகள் மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ அமையலாம்.

அனுப்பப்படும் கவிதைகள் முன் எப்பொழுதும் வெளியிடப்படாதது என்பதனையும், சொந்த ஆக்கம் என்பதனையும் ஆசிரியர்/ அதிபர் உறுதி செய்தல் வேண்டும்.

தாளின் ஒரு பக்கத்தில் மாத்திரம், அழகிய கையெழுத்தில் அல்லது கணினியில் அச்சிடப்பட்டதாக கவிதை அமைதல் வேண்டும்.

**கவிதையை 2015.02.28 இற்கு முன்னர்**

**30 அகவையில் உதயன்,**
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் ஆற்றல்களை வெளிப்படுத்தி கவிதைகளை ஆக்குங்கள்.
உடன் உதயனுக்கு அனுப்பி வையுங்கள்.
உதயன் விண்ணப்பப் படிவத்தில் வேறாக உங்கள் விவரங்களை இணைக்க மறந்து விடாதீர்கள்.

### உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)

பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ........................................
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
........................................
கற்கும் பாடசாலை: ........................................
தரம்: ...............

பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ........................................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்:........................................
ஆசிரியரின் பாடத்துறை: ........................................

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் ........ ..இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி ........................................ அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

உதயன் பத்திரிகையுடன் நாளாந்தம் இணைந்திருங்கள்!

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மக்கள் எதிர்பார்க்கும் கூட்டமைப்பின் முடிவு

அரசின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றாக இருந்து வந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு எதிரணியில் இணைவதற்கு முடிவெடுத்திருப்பதாக நம்பகமான ஒரு செய்தி வெளியாகியிருப்பது அரசியல் மட்டத்தில் பெரும் பரபரப்புக்குரிய விடயமாகியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஓரங்கட்டி - அதனை தீண்டத்தகாத ஒரு குழுவைப்போல் பரப்புரை செய்து அப்படியான ஓர் அமைப்புடன் எதிரணி வேட்பாளர் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார் என்று ஒரு தோற்றப்பாட்டையும் சிங்கள அடிமட்ட மக்கள் மனங்களில் பதிய வைப்பதில் தீவிரமாக இறங்கியிருந்த அரசு தரப்பு அமைச்சர்களுக்கும் தலைவர்களுக்கும் எதிர்த்தரப்பிலிருந்து அரசுபக்கம் பாய்ந்து பற்றிக்கொண்டவர்களுக்கும் மு.கா.வின் இந்த முடிவு - அப்படி ஒரு முடிவு எடுக்கப்பட்டது உண்மையானால் நிச்சயம் வயிற்றில் புளியைக் கரைப்பதாகவே இருக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கூட அப்படி ஒரு தீர்மானத்தில் இறங்கலாம் - அதுவும் சாத்தியமாகவே தென்படுகின்றது. அவர்களின் முடிவை மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

நாட்டில் ஆங்காங்கே எதிரணியினரின் கூட்டங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களும், தேர்தல் பரப்புரை மேடைகளை அவர்கள் பயன்படுத்தாதவாறு முட்டுக்கட்டை போடப்படும் சம்பவங்களும் எதிரணித் தலைவர்கள் தனிப்பட்ட வகையில் விமர்சிக்கப்படுவதும், அரசுத் தரப்பினருக்கு ஏற்பட்டுள்ள தளர்ச்சியை, தடுமாற்றத்தைக் காட்டுவதாக உள்ளது.

இருதரப்பினருமே வெற்றி தங்களுக்கே என்று அறிவித்துக்கொள்வது அவர்களின் விருப்பத்தை வெளிப்படுத்துவதாக இருப்பது ஒரு புறமிருக்க, அதுவே அவர்களது வெகுஜன உளவியல் தந்திரமுமாகும். நிலைமைகள் கடைசி நேரத்திலும் தடுமாறிப் போகலாம் - எல்லாம் வாக்காளர் கைகளிலேயே உள்ளது.

எதுவானாலும், எதிரணியில் இணைந்து கொண்டவர்களும் ஏற்கனவே இருப்பவர்களும் அரசுக்கும், அரச தலைவருக்கும் எதிராக முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களுக்கு இன்னமும் ஆணித்தரமான பதிலை அரசு தரப்பினர் முன்வைக்கவில்லை. பல்வேறு விடயங்கள் இருந்தாலும் குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி;குடும்ப ஆட்சியாகவே செயற்படுகின்றது என்பதை அவர்கள் மறுக்கவும் முடியாமல், மறைக்கவும் முடியாமல் இருப்பது ஒரு புறமிருக்க, எதிர்காலத்தில் என்றாலும் அதற்கு பரிகாரம் செய்யப்படும் என்பதாக கருத்தொன்றைத் தானும் முன்வைக்கக் காணோம்.

இரண்டு தடவைகள் பதவியிலிருந்து விட்ட ஜனாதிபதி ராஜபக்ஷ, தமிழ்த் தரப்புக்கு அதாவது தமிழ்பேசும் தரப்புக்கு இனியாகுதல் - நீதியாக - நம்பக்கூடியதாக - தமிழ் மக்களால் மதிக்கப்படும் தலைவர்களுக்கு வழங்கக்கூடிய உறுதிமொழியைப் பொறுத்துத் தான் அவர்கள் அவரை ஆதரிப்பார்களா, இல்லையா என்பது தங்கியிருக்கும் என்று சொல்லத் தேவையில்லை

# நில அபகரிப்பு குற்றவாளிகள் யார்?

*த சண்டே லீடர் (The Sunday Leader) ஊடகத்தில் (கமேலியா நதானியல் Camelia Nathaniel) எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி*

இலங்கையில் போர் முடிவடைந்ததிலிருந்து வடக்கில் நிலவும் காணிப் பிரச்சினையானது பல ஆண்டுகளாகப் பேசப்படும் பிரதான விடயமாகக் காணப்படுகிறது. இலங்கைப் படைகளே வடக்கில் பெருமளவான நிலப்பரப்பைக் கையகப்படுத்தி வைத்திருக்கும் அதேவேளையில், இது தொடர்பாக நிலவும் பிறிதொரு பிரச்சினை இதுவரையில் பேசப்படவில்லை.

அதாவது இலங்கையில் போர் தீவிரமடைந்திருந்த காலப்பகுதியில் நாட்டை விட்டு வெளியேறிய தமிழ் மக்களின் நிலங்கள் வேறு தரப்பினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளமை தற்போது தெரியவந்துள்ளது. வீட்டின் உரிமையாளர்கள் நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்த நிலையில் அதனைத் தமது பொறுப்புக்களில் வைத்திருந்த மூன்றாம் தரப்பினர் இந்த வீடுகளையும் காணிகளையும் தற்போது உரிமையாளர்களிடம் மீளவும் வழங்க மறுக்கின்றனர்.

போர் முடிவடைந்ததன் பின்னர் தற்போது சிறிலங்காவுக்குத் திரும்பி வரும் புலம்பெயர் தமிழர்கள் தமது சொந்த நிலங்கள் மற்றும் வீடுகளைப் பார்க்கச் செல்லும் போது அதனை வேறொரு தரப்பினர் கையகப்படுத்தியுள்ளமை வேதனையை உண்டுபண்ணுகின்றது. இது தொடர்பாகப் பல்வேறு வழக்குகள் நீதிமன்றில் பதிவு செய்யப்பட்டு நிலுவையிலேயே காணப்படுகின்றன.

இலங்கைப் படைகளால் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங்களை விட சட்ட ரீதியற்றவர்களால் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலங்கள் மற்றும் வீடுகளின் அளவு மிகவும் அதிகமாகக் காணப்படுவதாக வீட்டு உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில், உயர் பாதுகாப்பு வலயத்தின் கீழ் இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் தனியார்களுக்குச் சொந்தமான 6700 ஏக்கர் நிலப்பரப்பு கையகப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளையில், வன்னியில் 80 சதவீதமான நிலப்பரப்புக்கள் அரசுக்குச் சொந்தமானவையாகும். இவற்றை அரச அனுமதியுடன் தனியார் கையகப்படுத்தியுள்ளனர். அதாவது அரசுக்குச் சொந்தமான 80 சதவீதமான நிலப்பரப்பையும் பாதுகாப்புப் படையினரோ அல்லது அரசோ எடுக்கவில்லை. ஆனால் அரச அனு மதியுடன் இந்தக் காணிகளைப் பயன்படுத்தும் தனி யார் இவற்றைத் தமக்குச் சொந்தமாக்கி விட முடியாது. ஆகவே போரின்போது நாட்டை விட்டுப் புலம்பெயர்ந்த தமிழர்கள் தற்போது தமது காணிகளுக்கு உரிமை கொண்டாடும்போது அது ஏற்கனவே வேறொருவரால் உரிமை கொண்டாடப்படுவதாகக் கூறப்படுகிறது.

இந்தப் பிரச்சினை தொடர்பாக சண்டே லீடர் பத்திரிகை வீ.ஆனந்தசங்கரி, எஸ்.தவராசா, கலாநிதி முத்துக்கிருஷ்ணா சரவணந்தன், பொன்னம்பலம் மற்றும் நேரு ஆகியோருடன் கலந்துரையாடியுள்ளது.

எஸ்.நேரு: (பிரித்தானியாவுக்கு புலம்பெயர்ந்து சென்ற, காவல்துறை அதிகாரி தற்போது யாழ்ப்பாணத்திற்கு திரும்பி வந்துள்ளார்)

நான் நீண்ட காலமாக பிரித்தானியாவில் வாழ்ந்த பின்னர் எனது சொந்த இடமான யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிச் சென்றேன். ஆனால் தனியார் ஒருவரால் எனது நிலம் அபகரிக்கப்பட்டிருந்தது. எனது நிலத்தில் குடியிருந்ததற்கான எவ்வித வாடகையும் அவர் என்னிடம் தரவில்லை. நான் நீதிமன்றில் வழக்குத் தொடுத்தேன். இரண்டு ஆண்டுகளாகியும் இது தொடர்பாக எவ்வித தீர்ப்பும் வழங்கப்படவில்லை. இந்த வழக்குத் தொடர்பாக நீதிமன்றில் விவாதிக்கப்படுகின்றபோது, எனது எதிராளியின் சார்பாக வாதிடும் சட்டவாளர் இதனை ஒத்திவைக்குமாறு கோருகிறார். யாழ்ப்பாண நீதிமன்றில் இவ்வாறான நில அபகரிப்பு வழக்குகள் மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றன

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பொதுமக்களின் நிலங்களைப் பாதுகாப்புப் படையினர் கையகப்படுத்தியுள்ளனர் எனக் கூறுகின்றனர். ஆனால் உள்நாட்டில் வாழும் தமிழ் மக்கள் பாதுகாப்புப் படையினரை விட பொதுமக்களுக்குச் சொந்தமான நிலங்களை அதிகளவில் அபகரித்துள்ளனர்.

இவ்வாறான வழக்குகளைத் தீர்மானிப்பதற்கான எவ்வித வழிகாட்டல்களையும் நீதிமன்றம் கொண்டிருக்கவில்லை. இந்த வழக்குகளை ஆறு மாதங்களுக்கு மேல் இழுத்தடிக்கக் கூடாது என நீதிபதிகளிடம் கூறவேண்டும். வழக்குகளை விவாதிப்பதற்குத் தேவையான நீதிமன்றங்கள் இல்லாவிட்டால் சிறிலங்கா அரசு மேலதிக நீதிமன்றங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நிலத்துக் குச் சொந்தமான உறுதி மற்றும் பத்திரங்களை வைத்திருப்பவர்களிடம் நிலத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். ஒரு சில நிமிடங்களில் முடிவெடுக்கக் கூடிய மிகச் சாதாரணமான விவகாரமாக இது காணப்படுகின்ற போதிலும் இந்த வழக்குகளுக்குத் தீர்வு காண்பதற்கு நீண்டகாலம் எடுக்கின்றன.

நில உறுதியை அல்லது பத்திரத்தைக் கொண்டிருக்காத எவருக்கும் சிறிலங்கா மின்சார சபை மின்வழங்கலை வழங்கக்கூடாது. வாடகைக்கு குடியிருப்பவராயின் வாடகையை உறுதிப்படுத்தும் பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ வேறெந்த அரசியற் கட்சிகளோ இந்த விவகாரம் தொடர்பான கருத்துக்களை முன்வைப்பதில்லை.

காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயத்தில் 6700 ஏக்கர் நிலப்பரப்புக்கள் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

வீ.ஆனந்தசங்கரி (தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் கிளிநொச்சி வாசியும்)

வன்னியின் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் 80–90 சதவீத நிலங்கள் அரசிற்குச் சொந்தமானதாகும். இதில் தனியார், அரசின் அனுமதியுடன் வாழ்கின்றனர். அரசின் அனுமதியின்றி இவ்வாறான நிலங்களை நில அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் ஒருவர் கைமாற்றம் செய்ய முடியாது.


போரின் இறுதியில் இவ்வாறான நில அனுமதிப்பத்தி ரங்கள் வைத்திருந்தவர்களின் நிலங்கள் மீண்டும் அவர்களிடம் வழங்கப்பட்டன. ஆனால் இதற்கென காலவரையறை உள்ளது. அரச நிலத்தை வைத்திருக்கும் ஒருவர் பத்து ஆண்டு களுக்குள் இதனைத் தமதாக்கிக் கொள்வதற் கான விண்ணப்பத்தை மேற்கொள்ள வேண்டும். ஆனால் பதினொரு ஆண்டுகளின் பின்னர் இதற் கான உரிமையை நாம் கோர முடியாது. இது சட்ட ரீதியற்றது.

கலாநிதி முத்துக்கிருஷ்ணா சரவணந்தன் (பொருத்தித்துறை அபிவிருத்தி நிலையத்தின் பிரதான ஆய்வாளர்)

ஒருவர் ஒழுங்காக வாடகை கொடுக்கும் போது மட்டுமே குறித்த சொத்தைத் தனது உடைமையாக்க முடியும் என சட்டம் கூறுகிறது. ஆனால் பல வழக்குகளில் வாடகை வழங்கப்படவில்லை. வேறுவிதமாகக் கூறினால் நிலத்தை அபகரித்து வைத்திருப்பவருக்கு எதிராக சட்டம் மூலம் அணுகும் போது அவர் அதனை உரிமையாளரிடம் கையளிக்க வேண்டும். நில உரிமையாளரும் நிலத்தை அபகரித்து வைத்திருப்பவரும் சமரசப் பேச்சுக்களின் மூலம் இந்தப் பிரச்சினையை அணுகமுடியும்.

# அமைதிக்காக ஏங்கும் இந்திய பாகிஸ்தான் மக்கள்

சேரலாதன்



உலகிலேயே அதிகளவு முஸ்லிம் மக்கள் வாழும் நாடுகளில் இரண்டாவது இடத்தை பாகிஸ்தானும் மூன்றாவது இடத்தை இந்தியாவும் வகிக்கின்றன. இந்தியாவில் இந்து முஸ்லிம் கலவரம் ஏற்படுவது வழக்கமான தொன்றாகவே மாறி விட்டது.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் பயங்கரவாத அச்சமின்றி மக்கள் அமைதியாக வாழ்வதற்கான சூழ்நிலை எங்கோ வெகு தொலைவில் கூடத் தென்படவில்லை. பயங்கரவாத இயக்கங்கள் பாகிஸ்தானில் காலூன்றி நிற்கும் வரையில் இது தொடரவே செய்யும்.

அண்மையில் பாகிஸ்தானிலுள்ள பெஷாவர் நகரில் 132 பாடசாலைக் குழந்தைகள் உட்பட 145பேரை பயங்கரவாத இயக்கமொன்று படுகொலை செய்த சம்பவம் உலகையே உலுக்கிவிட்டது.

இதனைத் தொடர்ந்து பயங்கரவாதிகளைப் பூண்டோடு அழிக்கப்போவதாக பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பும் இராணுவமும் சூளுரைத்துள்ளதுடன் அது தொடர்பான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பான பயங்கரவாத அமைப்பின் தலைவர் மௌலானா பஸ்லுல்லா பாகிஸ்தானும், அமெரிக்காவும் இணைந்து நடத்திய விமானத் தாக்குதலில் கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. அத் துடன் பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் இணைந்து பயங் கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ள தாகப் பிறிதொரு செய்தி தெரிவிக்கின்றது. ஆனால் இந்தப் பிராந்தியத்தில் புரையோடிப் போய்க் காணப்படும் பயங்கரவாதப் பிரச்சினைக் குத்தீர்வு காண்பது இலகுவான தொன்றாக அமையப்போவதில்லை என்பதுதான் உண்மை நிலையாகும்.

இந்தியாவிலும் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடும் தீவிரவாத இயக்கங்கள் இல்லாமலில்லை. ஆந்திரப் பிரதேசத்தில் நிலைகொண்டு செயற்படும் நக்ஸலைட்டுக்கள், பீகார், ஜார்க்கண்ட், சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களில் செயற்படும் மாவோயிஸ்ட்டுகள், அசாம் மாநிலத்தின் போடோ தீவிரவாத இயக்கம், மணிப்பூர், நாகாலாந்து ஆகிய வடகிழக்கு மாநிலங்களில் செயற்படும் தீவிரவாத இயக்கங்கள் எனப் பலவற்றைக் கூறமுடியும். ஆனால் பாகிஸ்தானில் இயங்கிவரும் தீவிரவாத இயக்கங்களே இந்தியாவின் நிம்மதியைப் பெருமளவில் குலைத்து வருகின்றன.

இந்தியா அந்நியரின் ஆட்சியில் இருந்த போது அங்கு வாழ்ந்த இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே கடுமையான மோதல்கள் இடம்பெற்று வந்தன. இந்தியாவின் பல பகுதிகளும் முஸ்லிம் மன்னர்களின் ஆட்சியில் பல ஆண்டுகள் இருந்ததால் அதிகளவு முஸ்லிம் மக்கள் அந்த நாட்டில் வசிப்பதற்கு ஏதுவான நிலையொன்று உருவானது. ஆனால் அங்கு வாழ்ந்த பெரும் பான்மை அந்தஸ்தைக் கொண்ட இந்துக்கள் இவர்களுக்கான அங்கீகாரத்தை வழங்குவதில் பின்னடித்தனர். இதுவே மோதல்களுக்குக் காரணமாயிற்று. இதனைச் சாட்டாகக் கொண்டு அப்போது முஸ்லிம் மக்களின் தலைவராகவிருந்த முகம்மதலி ஜின்னா இந்தியா அந்நியரிடமிருந்து சுதந்திரம் அடைவதற்கு முன்னரே முஸ்லிம் களுக்கெனத் தனிநாடு ஒன்றைக் கேட்டுப் பெற்றார். அதுவே பாகிஸ்தான் என்ற பெயரில் உருவானது.

அந்த நாடு உருவான நாளிலிருந்து இராணுவத்தின் தலையீடு அதிகரித்துக் காணப்படுகின்றது. பயங்கரவாத இயக்கங்கள் தோன்றுவதற்கு இதுவுமொரு முக்கிய காரணமாகும். பாகிஸ்தானின் வரலாற்றில் ஜன நாயக முறை யில் மக்களால் தெரிவு செய்யப் பட்ட அரசுகள் நாட்டை நிர்வகித்ததைவிட இராணுவ ஆட்சியாளர்களின் ஆட்சிக் காலமேஅதிகமெனக்கூறமுடியும். அயூப்கான், யாஹியாகான், ஸியாவுல் ஹக், பர்வேஸ் முஷாரப் என இராணுவ ஆட்சியாளர்களின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது. தற்போது அந்த நாட்டின் பிரதமராகப் பதவி வகிக்கும் நவாஸ் ஷெரீப்கூட அப்போதைய இராணுவத் தளபதியான பர்வேஸ் முஷாரப்பினால் அதிரடியாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டு சிறையில் அடைத்து வைக்கப் பட்டவர்தான். முன்னாள் பிரதமர் பூட்டோ தூக்கில் தொங்கியதற்கும், அவரது மகளும் பிரதமர் பதவியை வகித்தவருமான பெனாஸிர் பூட்டோ கொல்லப்பட்டதற்கும் இராணுவத்தினரே பிரதான பங்கை வகித்திருக்கின்றனர். இந்த நிலையில் பூரணமான ஜனநாயகத்தை நாம் பாகிஸ்தானில் எதிர்பார்க்க முடியாது.

> இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பான பயங்கரவாத அமைப்பின் தலைவர் மௌலானா பஸ்லுல்லா பாகிஸ்தானும், அமெரிக்காவும் இணைந்து நடத்திய விமானத் தாக்குதலில் கொல்லப் பட்டதாக பாகிஸ்தான் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. அத்துடன் பாகிஸ்தானும் ஆப்கானிஸ்தானும் இணைந்து பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாகப் பிறிதொரு செய்தி தெரிவிக்கின்றது.

உலகிலேயே அதிகளவு முஸ்லிம் மக்கள் வாழும் நாடுகளில் இரண்டாவது இடத்தை பாகிஸ்தானும் மூன்றாவது இடத்தை இந்தியாவும் வகிக்கின்றன. இந்தியாவில் இந்து முஸ்லிம் கலவரம் ஏற்படுவது வழக்கமான தொன்றாகவே மாறிவிட்டது. காஷ்மீர் பிரச்சினை, பாபர் மசூதி இடித்தழிப்பினால் தோன்றிய கொந்தளிப்பு, குஜராத் ரயில் எரிப்புச் சம்பவம், மும்பை தொடர் குண்டு வெடிப்பு, காஷ்மீர் எல்லையில் இந்திய இராணுவத்தினர் மீதான தாக்குதல் சம்பவங்கள் என இவ்வாறு பல சம்பவங்கள் முஸ்லிம்கள் மீதான வெறுப்புக்கு இந்தியாவில் வித்திட்டுள்ளன. மேலும் இந்தியாவில் தாக்குதல்கள் மேற்கொள்ளும் பயங்கரவாதிகளுக்குப் பாகிஸ்தான் அடைக்கலம் வழங்குவதும் இந்திய பாகிஸ்தான் உறவில் விரிசல்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் கடும்போக்கு இந்துத்துவவாதியான நரேந்திர மோடி இந்தியாவின் தலைமைப் பொறுப்பில் அமர்ந்துள்ளமை இந்த இரு நாடுகளின் உறவில் மேலும் பிளவுகள் தோன்றுவதற்கு வழிவகுக்குமெனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இந்தியாவும் பாகிஸ்தானும் அணு ஆயுதங்களைக் கொண்டுள்ள நிலையில் மீண்டுமொரு மோதல் ஏற்படுமாயின் பயங்கர விளைவுகளே ஏற்படும். இது இந்தப் பிராந்தியத்தின் அமைதிக்கே வேட்டு வைத்துவிடும்.

ஏதாவது அதிசயம் நிகழ்ந்து இந்த நாடுகள் சமாதானப் பாதையில் பயணிக்கும் போதுதான், பயங்கரவாதமும் ஒழிந்து அங்கு வாழும் மக்கள் நிம்மதிப் பெருமூச்சை விட முடியும்.



# கருத்து

## வாசகர் திருமுகம்

### மக்களின் குறைகள் தீர்க்கப்படுமா?

எமது கிராம வீதிகள் நீண்ட காலமாக (40 வருடங்களுக்கும் மேலாக) குண்டும் குழியுமாக மோசமாக சேதமுற்றுக் காணப்படுகின்றன. இவ்வீதிகள் குறுகிய தூரம் கொண்டதால் அன்றாடம் இக்கிராம மற்றும் அயல் கிராம பாடசாலை செல்லும் மாணவர்களும், உத்தியோகத்தர்களும், விவசாயிகளும் மற்றும் பொதுமக்களும் இவ்வீதிகளையே அதிகளவில் பயன்படுத்துகிறார்கள்.

இவ் வீதிகளில் மழை காலத்தில் வெள்ளம் தேங்கி நிற்பதால் மக்களின் அன்றாடப் போக்குவரத்து சீர்குலைந்து பெரும் துன்பத்தை மக்கள் அனுபவிக்கிறார்கள். இவற்றை புனரமைப்புச்செய்து மக்கள் பாவனைக்கு சீராக்கித் தருமாறு தாழ்மையுடன் வலிமேற்குப்பிரதேச சபை மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறோம்.

ஞானசம்பந்தர் முதலி கோவில் வீதி, அற்கின்சன் – மூளாய் றோட் வீதி, அரசடி வீதி, தம்பப்பனை– மூளாய் றோட் வீதி, கொத்துத்துறை இந்து மயான வீதி ஆகிய வீதிகளே உடனடியாகப் புனரமைக்கப்பட வேண்டியுள் ளது.

பிரதான வீதிகளான சங்கரத்தை – நவாலி வீதி, வட்டுக்கோட்டை– தெல்லிப்பழை வீதி மற்றும் மூளாய்–மாவடி வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள சில மின்குமிழ்கள் ஒளிராது காணப்படுகின்றன. மழை காலம் என்பதால் வீதிகள் இருளாக இருப்பதனால் போக்குவரத்துக்கு மக்கள் சிரமப்படுகின்றனர். எனவே ஒளிராதிருக்கும் வீதி விளக்குகளை ஒளிரச்செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் எமது கிராம வீதிகள் பலவும் மழையால் புதர்கள் மற்றும் பற்றைச்செடிகள் வளர்ந்து மக்களின் போக்குவரத்துக்கு இடைஞ்சலாகவுள்ளன. எனவே இவற்றை வெட்டித் துப்புரவாக்கி போக்குவரத்துக்கு இலகுபடுத்தித்தருமாறு கேட்டுக்கொள்கிறோம். முன்னைய காலங்களில் இவை சிறப்பான முறையில் காலத்துக்குக் காலம் சீராக துப்புரவு செய்யப்பட்டு வந்தன. கடந்த இரு ஆண்டுகளாக இவை கவனிக்கப்படவில்லை என்பதனை தங்களின் கவனத்துக்குக் கொண்டுவருகிறோம். இவை தொடர்பாக வலிமேற்குப் பிரதேச சபை மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து சாதகமான பதிலை எதிர்பார்க்கின்றோம். அத்துடன், எமது கிராமத்திலுள்ள கேணிகள் பல கவனிப்பாரின்றி அழிவடைந்து செல்கின்றன. விவசாயிகளுக்கும் கால்நடைகளுக்கும் கோடை காலத்தில் பெரும் பங்காற்றுவன இந்த விவசாயக் கேணிகள் ஆகும். அத்துடன் பிதிர்க் கடன்களை ஆற்றுவதற்கும் இவை பயன்படுத்தப்பட்டு வந்தன. ஆனால் தற்போது இவை கவனிப்பாரற்று புனரமைப்புச்செய்யாது தூர்ந்து அழிவடைந்து செல்கின்றன. அழிவடைந்து செல்லும் எமது விழுமியங்களை பேணிப் பாதுகாக்க இவற்றை புனரமைப்புச் செய்து மக்கள் பாவனைக்குத் தருமாறு வலிமேற்குப் பிரதேச சபை மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தச்சன்கேணி, மடத்தடிக் கேணி, திமிங்க கேணி, சுடலை முடக்குக் கேணி ஆகிய கேணிகளே புனரமைக்கப்படவேண்டிய நிலையிலுள்ளன.

*தென்மேற்கு*
*வட்டுக்கோட்டை*
*கிராம அபிவிருத்தி சங்கம்*

### அநீதியாகச் செயற்படும் உணவகங்கள்

யாழ். நகரிலுள்ள நீண்டகாலமாக இயங்கி வரும் சைவ உணவகமொன்றில் பழுதடைந்த உணவுகளை வழங்கி வருகின்றனர்.

நான் அங்கு உணவருந்தச் சென்றபோது எனக்கும் பழுதான உணவுகளையே வழங்கினார்கள்.

இது தொடர்பாக அங்கு இருந்த உணவகத்தின் உரிமையாளரிடம் தெரிவித்தபோது அவர் அதனை ஏற்காது என்னுடன் முரண்பட்டார்.

இதுபோன்ற சம்பவங்கள் அங்கு தொடர்ந்து இடம்பெறுவதை அவதானிக்க முடிகின்றது.

அந்த உணவகத்தில் இலவசமாக எவருக்கும் உணவுகள் வழங்கப்படுவதில்லை. அங்கு செல்லும் சகலரும் தாம் உண்ணும் உணவுக்குப் பணம் செலுத்தத் தவறுவதில்லை. இந்த நிலையில் பழுதடைந்த உணவுகளை வழங்குவதும் இது தொடர்பாக முறையிடுபவர்களிடம் அடாவடித்தனமாக நடந்து கொள்வதும் எந்த வகையில் நியாயமானது என்பது தெரியவில்லை.

இதேவேளை சில உணவகங்களில் உணவுப் பொருள்களின் அளவைச் சிறிதாக்கி அதிக விலையில் விற்பதையும் காணமுடிகின்றது. வடைகளின் அளவு கூட உணவகங்களுக்கிடையில் வேறுபட்டுக் காணப்படுகின்றது. ஆனால் விலையில் மாற்றமில்லை.

இந்த அநியாயங்கள் தட்டிக் கேட்கப்படுமா என்பதே எம்போன்றவர்களின் எதிர்பார்ப்பாகும்.

*பாதிக்கப்பட்டவன்*
*கொக்குவில்*

### மாற்றம் நடக்குமா?

அண்மையில் சமூக வலைதளங்களில் காணொலியொன்று வெளியாகியிருந்தது. தென்பகுதியில் மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தும் பொதுமக்கள் இராணுவத்தினரால் அடித்துவிரட்டப்படுகின்றனர். அதில் இராணுவத்தினரிடம் சிக்கிக்கொண்ட ஒருவரின் ஆடைகளைக் களைந்து நிர்வாணமாக வைத்துத் தாக்குகின்றனர் ஆயுதம் தரித்தோர். இந்தக் காட்சிகள் அடங்கிய காணொலி தேர்தல் பரப்புரைகளுக்கு மத்தியிலும் சமூக வலைத் தளங்களில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

ராஜபக்ஷ அரசினால் சிங்கள மக்கள் தாக்கப்படுவது முதல்தடவையல்ல. போர் முடிந்தவுடன் வெற்றியைக் கொண்டாட சிங்கள மக்கள் அனுமதிக்கப்பட்டிருந்தாலும், போர் வெற்றியின் சாயம் மங்கத் தொடங்கவே, தம்மை நோக்கிப் பரவும் சர்வாதிகாரத்துக்கு எதிராகவும் குரல் கொடுக்க முனைந்தனர். கடந்த வருடத்துக்கு முன் கட்டுநாயக்கா பகுதியிலும், அதே காலப்பகுதியில் வெலிக்கடை சிறைச்சாலைக்குள்ளும், வெலிவேரிய பகுதியிலும் இவ்வாறான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. எந்த அரசியல் பின்னணியும் இல்லாமல் மக்கள் தமது பிரச்சினைக்குத் தாமாக முன்வந்து போராடினர்.

வெலிக்கடை சிறைக் கைதிகள், தமது விடுதலை உள்ளிட்ட அடிப்படை உரிமைகளைக் கேட்டே கூரைகளில் ஏறிப் போராட்டம் நடத்தினர். ஆனால் அதையும் தமிழர்களை அடக்குவது போன்று ஆயுதமுனையில் தன் காட்டுமிராண்டித்தனத்தைக் காட்டியது இராணுவம். மோதல்கள் துப்பாக்கிச் சூட்டில் முடிந்தன.

அதேபோல் குடிதண்ணீர் கேட்டுப் போராடிய கம்பஹா– வெலிவேரிய மக்களுக்கும் இந்தக் கதிதான் ஏற்பட்டது. சிங்கள மக்கள் ஜனநாயக விதிமுறைகளுக்கு உட்பட்டே மனிதனின் அடிப்படை உரிமைகளுள் ஒன்றான தண்ணீரைக் கேட்டனர். ஆனால் அதுவும் ஆயுதமுனையில்தான் அடக்கப்பட்டது. அந்த அடக்குமுறையோடு சிங்களவர்கள் அரசின் கோர முகத்தை விளங்கிக் கொண்டதாலோ என்னவோ அமைதிகாக்கத் தொடங்கிவிட்டனர். இவர்களோடு போராடிப் பயனில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டனர். இப்போது தேர்தல் காலமானபடியாலும், துணிவான எதிரணியொன்று இலங்கை அரசியல் வானில் தென்படுவதனாலும் தமக்கான உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காகக் களத்தில் இறங்கினர் மக்கள். ஆனால் இந்த பரபரப்பான வேளையிலும் சிங்கள மக்களையே கொன்றுபோடவும் தயாராக இருக்கிறது தற்போதைய அரசு. அதன் வெளிப்பாடே காணொலியில் போராட்டக்காரரை நிர்வாணப்படுத்தி, அடித்து இழுத்துச் செல்லும் காட்சி.


இவ்வாறு சிங்கள மக்களாலே உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியாதளவுக்கு இந்த அரசு தன் சர்வாதிகாரத்தைப் பிரயோகித்து வருகின்றது. சிங்களவர்களுக்கு இந்தக் கதியெனில், நில உரிமை கேட்கும் தமிழரை இந்த அரசு என்ன பாடுபடுத்தி அடக்கியிருக்கும் என்ற கற்றலை இதுபோன்ற சம்பவங்கள் இலங்கையில் வாழும் சகல இனங்களுக்கும் வழங்கும். இவ்வாறு தன் இனத்தையே அடக்கி, ஒடுக்கும் அரசு ஒன்றை வளர்த்துவிட்டதும் இதே சிங்கள மக்கள்தான் என்பதையும், இப்போது அவர்களை ஆட்சியிலிருந்து அகற்ற அணி திரள்வதும் இதே சிங்கள மக்கள்தான் என்பதையும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

எனவே சிங்கள மக்களுக்கும் விரோதியாக மாறிவருகின்ற ராஜபக்ஷ தலைமையிலான அரசு விடைபெறும் காலம் நெருங்கி விட்டதோ என சந்தேகப்படத்தோன்றுகின்றது.

இந்த முறை வலி சிங்கள மக்களிடமிருந்து வருவதால் மாற்றம் உறுதியாகலாம்.

**பத்தி எழுத்து**

### கேலிச் சித்திரம்



# சிறுவர் / தொழில்நுட்பம்

## தகவல் பெட்டி

- அமெரிக்காவை கண்டுபிடிக்க கடல்வழியை கொலம்பஸ் பயன்படுத்தினார். அவர் பயணம் செய்த கப்பலின் பெயர் சாண்டாமரியா. அவருடன் பயணம் செய்த மற்ற இரு கப்பல்களின் பெயர்கள் நினா மற்றும் பின்டா.
- முதன் முதலில் குளோனிங் முறையில் டாலி என்ற ஆட்டை உருவாக்கியவர் இயன் வில்முத்.
- புவியின் சுற்றுப் பாதையில் செலுத்தப்பட்டிருக்கும் இந்திய செயற்கைக்கோளுக்கு மறைந்த விண்வெளி வீரர் கல்பனா சவ்லாவின் நினைவாக கல்பனா–1 என்று பெயரிடப்பட்டுள்ளது.
- சுமார் 500 கதாபாத்திரங்கள் கொண்ட போரும் அமைதியும் என்ற புத்தகத்தை எழுதியவர் லியோடால் ஸ்டாய்.
- சனிக் கிரகத்தைச் சுற்றிவரும் நிலவுகளின் எண்ணிக்கை 30.
- பொருளாதாரத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர் கிரேக்க நாட்டைச் சேர்ந்த அடம்ஸ்மித் ஆவார்.
- உலகின் மிக வேகமாக உயரும் மலை ஹிமாலய மலைத்தொடரில் உள்ள நங்கபர்வதம். (26,000 அடி உயரம்)
- டேபிள் ரென்னிஸ் விளையாட்டின் இன்னொரு பெயர் 'பிங்–பாங்'
- ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள மிகபெரிய மலைச் சிகரம் பிரான்ஸில் உள்ள மாண்ட்பிளாங்க்.
- ஏனைய நான்கு கால் விலங்குகளைப் போல் கங்காருக்களால் பின்புறமாக நடக்க முடியாது.
- உலகின் உயர்ந்த இரட்டைக் கோபுரமான பெட்ரோனஸ் கோபுரத்தை வடிவமைத்தவர் சேஸர் பெல்லி.
- தந்தைகளின் நாடு என அழைக்கப்படுவது ஜேர்மன்.
- திரையரங்கு இல்லாத நாடு சவூதி அரேபியா ஆகும்.

## காதறுந்த ஊசி




ஊசி ஒன்று தனது ஒரு முனை கூர்மையாக இருப்பதில் பெருமையடைந்தது. ஆனால் தனது மறுமுனை ஓட்டையாக இருப்பதால் அதை அவமானமாகவும் நினைத்தது. ஒரு நாள் அதன் மறுமுனை உடைந்து போனது. காதறுந்த நிலையில் அந்த ஊசியைப் பயன்படுத்தியவர் தூக்கியெறிந்தார். அப்போதுதான் அந்த ஊசிக்குத் தான் அவமானமாக நினைத்த மறுமுனையின் முக்கியத்துவம் தெரிந்தது. ஒருவர் கூர்மையான புத்தியுள்ளவராக இருந்தால் மட்டும் எதையும் சாதித்து விட முடியாது. கூர்மையான ஊசி தன்னுள் நூலை நுழைத்துக் கொள்ள காது இருப்பதால் தான் அது பயன்படுத்துவதற்கு உதவியாக இருக்கிறது. காதறுந்த ஊசியால் பயன் இல்லை. அது போல் பிறரைத் தன்னுள் ஏற்றுக் கொள்ளும் அன்பு இருந்தால் மட்டுமே சிறந்தவனாகத் திகழ முடியும்.








ச.சேயோன், தரம்–3,
யாழ்ப்பாணக் கல்லூரி



தர்சன்

## புத்தம் புதிய கைப்பேசி

குறைந்த விலையில் ஸ்மார்ட் கைப்பேசிகளை அறிமுகம் செய்துவரும் நிறுவனமான Micromax ஆனது Micromax Canvas Selfie எனும் புதிய ஸ்மார்ட் கைப்பேசியைக் அறிமுகம் செய்யவுள்ளது.
ஜனவரி மாதம் அறிமுகமாகும் இந்தக்கைப்பேசியானது 4.7 அங்குல அளவு, 1280 X 720 Pixel Resolution உடைய தொடுதிரையைக் கொண்டுள்ளது. மேலும் 1.7GHz வேகத்தில் செயல்படக்கூடிய Processor பிரதான நினைவகமாக 2GB RAM மற்றும் 16GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினையும் உள்ளடக்கியுள்ளது. இவை தவிர 13 மெகாபிக்சல்களை உடையதும் LED Flash உடன் கூடிய பிரதான கமெரா, 13மெகாபிக்ஸ்ல்களை உடைய வீடியோ அழைப்பை ஏற்படுத்துவதற்கான கமெரா, இரட்டை சிம் வசதி என்பனவும் தரப்பட்டுள்ளன.






## SAMSUNG
### சி5, சி7 ஸ்மார்ட் கைப்பேசிகள்

சம்சுங் நிறுவனம் தற்போது சி –தொடர்களைக் கொண்ட ஸ்மார்ட் கைப்பேசி வடிவமைப்பில் ஈடுபட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் சி5, சி7 ஆகிய இரு கைப்பேசிகள் வடிவமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றின் சிறப்பம்சங்கள் ஏறத்தாழ ஒரே மாதிரியாக அமைந்துள்ளன. Android 5.0 Lollipop இயங்குதளத்தில் செயற்படக்கூடிய இவை 5.5 அங்குல அளவுடையதும், 1280 X 720 Pixel Resolution உடைய தொடுதிரை, 1.2GHz வேகத்தில் செயற்படக்கூடிய QuaddCore Snapdragon 41.0 Processor, பிரதான நினைவகமாக 2GB RAM, 16GB சேமிப்பு நிலைவகம் என்பவற்றைக் கொண்டுள்ளன. இவை தவிர 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 5 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா, 2,950 mAh மின்கலம் என்பனவும் தரப்புட்டுள்ளன.




## WINDOWS 10 அறிமுகம்

மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் புதிய இயங்கு தளமான Windows10 இனை அறிமுகம் செய்யும் தினம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது.
இந்த இயங்குதளத்தின் Technical Preview வெளியிடப்பட்டுள்ள நிலையில் முழுமையான பதிப்பு 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அறிமுகம் செய்யப்படும் என தகவல்கள் வெளியாகியிருந்தது.
இந்த நிலையிலேயே ஜனவரி மாதம் 21ஆம் திகதி அறிமுகம் செய்யப்படவுள்ளதாக மைக்ரோசொப்ட் நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது.
இந்த நிகழ்வில் சில ஸ்மார்ட் கைப்பேசிகள் மற்றும் டேப்லட்கள் தொடர்பான தகவல்களும் வெளியிடப் படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஆக்கம்

# PK - ஓர் உயிரோட்டமான திரை அனுபவம்

சினிமாப் பித்தன்

இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு செல்பவர்கள் உறவினர்கள், நண்பர்கள், காதல், உணவு, ஆலயம் இப்படி எத்தனையோ விஷயங்களை மிஸ் செய்கிறார்கள். என்னைப் பொறுத்தவரை இப்பட்டியலில் முக்கியமாக இடம் பெற வேண்டிய மற்றொரு முக்கிய அம்சம் சினிமா.

ஹொலிவூட்டின் தலைவாசலாகிய அமெரிக்காவிலிருந்து சினிமாவை மிஸ் செய்கிறேன் என்று நான்கூறுவதை வேடிக்கையாக உணரலாம். ஒரு திரைப்படத்தைத் தனி அறையில் அமர்ந்து கொண்டுபார்த்தால், எமது ஊரில் வீட்டில் பார்ப்பதற்கும் இங்கே திரையரங்கில் பார்ப்பதற்கும் பெரிய வித்தியாசங்களை உணர முடியாது. திரையரங்கம் இருக்கும், 70mm திரை இருக்கும், கனரகமான ஒலிப்பெருக்கிகள் இருக்கும். இருந்தும் திரையரங்கில் படம் பார்க்கிற உணர்வு பெரிதாகஏற்படுவதில்லை. எமது ஊரில் கிடைக்கின்ற உயிரோட்டம் மிக்க அனுபவம் வெளிநாட்டில் எங்கு போனாலும் கிடைக்காது என்றே நினைக்கிறேன்.

எப்போது போனாலும் திரையரங்கத்தில்பத்துப் பேருக்குமேல் அமர்ந்திருப்பதைக் காணமுடியாத ஒரு நிலை சில நாட்கள் என்னைதிரையரங்கத்திடமிருந்து விலக்கி வைத்தது. இங்கே சினிமாவில் பின்னணி இசை பின்னணியில் தான் ஒலிக்கிறது. காட்சிகளை உசத்திக் காட்டும் இரைச்சல் பிறந்திட வழியில்லை, அரங்கத்தை அலங்கரிக்கும் கைதட்டல் இல்லை, விசில் பாய்ச்சல் இல்லை. கண்ணீரோ, புன்னகையோ, ஆர்ப்பரிப்போ, கோபமோ இதுயாவும் தனி மனிதன் தனது மனதுக்குள் உணர்ந்திடும் வகையில் தான் அமைந் துள்ளது.

PK படம் பார்க்க சென்றேன். எப்போதும் போல் இல்லாமல் திரையரங்கில் நாற்பது பேர் கூடி இருந்தார்கள், நெஞ்சார்ந்த உவகையுடன் மக்கள் சிரிக்கின்ற சிரிப்புச் சத்தத்தை முதன் முறையாக இங்கே உணர்கிறேன். வெகு நாள்கள் கழித்து ஓர் உயிரோட்டமிக்க திரை அனுபவத்தை PK தான் எனக்கு அளித்தது.

வசூல் வேலை செய்யும் தாதா, உயிர்களின் மகத்துவத்தை அறிந்து அன்பு பயக்கும் Munna Bhai MBBS, அதே தாதா வன்முறையை முழுவதுமாக விட்டு விட்டு காந்தியின் பாதையை நாடிச் செல்லும் Lage raho Munna Bhai, மதிப்பெண் அறிவல்ல என்று கூறி சமுதாயத்தில் வர்த்தகம் ஈட்டும் நோக்கத்தில் புகட்டப்படுகின்றகல்விமுறையை எள்ளி நகையாடிய Three Idiots இப்படிப்பட்ட அற்புதமான படங்களை இயக்கியவர் ராஜ்குமார் ஹிரானி'. வாய்ப்புக் கிடைப்பதற்கு அரிதான பூனே திரைக் கல்லூரியில் எடிட்டிங் பயின்றவர் இவர். இவர் இயக்கிய படங்கள் எல்லாவற்றிலும் புதுமையான கதைக்களமும், ஹிந்தி படங்களுக்கே உரித்தான மூலாம் பூசிய டிராமாக்கள் கலந்திருப்பதையும் உணரலாம். மொழி என்ற வரையறையைக் கடந்து உணர்வுகளால் நம்மை தொடும் தன்மையுடையன இவரது படைப்புகள்.

வசூல் ராஜாவும், நண்பனும் இவருடைய படங்களின் ரீமேக்களே. இவரது படம் பார்த்த பிறகு நம்முள் சில கேள்விகள் பிறப்பதையும், நெஞ்சார்ந்த உவகை பிறப்பதையும் தவிர்க்க முடியாது. இப்போது இவர் இயக்கத்தில் அமீர்கான் நடித்து வெளிவந்துள்ள PK–வும் இந்த வட்டத்தில் தான் விழு கிறது.

புதிதாக ஒரு மனிதன் எமது உலகத்திற்கு வந்தால் எமது வாழ்வு முறையையும், வழிமுறைகளையும்பார்த்துஅவனுள்என்னென்ன குழப்பங்கள் பிறக்கும் என்ற கேள்வியின் அடிப்படையிலே PK படத்தின்திரைக்கதைஅமைக்கப்பட்டுள்ளது.

வேற்று மண்டலத்திலிருந்து நமது பூமி எப்படி இருக்கிறது, இங்குள்ள உயிர்கள் எப்படி இருக்கிறார்கள் என்கிற வியப்புகளோடு ஒரு. வேற்றுகிரக விண்வெளி வீரர் எமது கண்டத்திற்கு வருகிறார். அவர் திரும்பிச் செல்வதற்கான கருவியின் சாவி இறங்கிய முதல் நாளிலே களவாடப்படுகிறது. தான் இழந்தவற்றை நமது ஹீரோ அமீர்கான்' கண்டறிந்தரா இல்லையா என்பது தான் படத்தின் அடித்தளம்.

அமீர்கான் தான் தேடும் பாதையில் மனிதர்களை பற்றியும், கடவுளைப்பற்றியும்அறிந்ததென்ன? அமீர்கானால் அவர் சூழ்ந்துள்ள சமூகம் பெற்றதென்ன? என்பது தான் படத்தின் கரு.

ஒரு குழந்தை எப்படி உலகத்தில் பிறக்கிறதோ அதைப்போல எமது உலகத்திற்கு வருகிறார் அமீர். எமது கண்டத்தில்மனிதர்கள்உடை அணிந்திருப்பதைப்பார்த்துஇவர் வியக்கின்ற விதம், தனது குழப்பங்களைப்பற்றியும் தான் பெற்ற தெளிவுகளை பற்றியும் அமீர் விளக்குகின்ற விதம் நம்மை வியக்க வைக்கிறது. உடைகளில் தொடங்கி மொழிக்குள் புகுந்து இவரது குழப்பங்கள் கடவுளுக்குள் சரணாகதி அடைகிறது.

நம்மைப் படைத்த கடவுள் ஒருவன், நாம் படைக்கின்ற கடவுள்கள் ஆயிரம். அனைவரும் கடவுளின் குழந்தைகள் என்றால் அவரைச் சென்றடைய தூதர்கள் எதற்கு, கடவுளின் பெயரில் நம்முள் பேதங்கள் எதற்கு? கொலைகள் எதற்கு? மேனேஜர் எதற்கு? என்பன போன்ற எக்கச்சக்கமான சிந்தனைகளை ஊணலு' எடுத்து வைக்கிறான்.

மேலும், ஒவ்வொரு மதங்களின் வழிமுறைகளினாலும், கோட்பாடுகளாலும் தன்னுள் எழுகின்ற குழப்பங்களை எடுத்து வைக்கிறான்.

கடவுளே உன்னை எல்லா மத அடிப்படையிலும் பிரார்த்திக்கிறேன்.. நான்முட்டிபோடவேண்டுமா.. சலாம் போட வேண்டுமா.. நமஸ்காரம் செய்ய வேண்டுமா? எல்லாவற்றையும் செய்கிறேன். மாலையில் விரதம் இருக்கிறேன், காலையில் விரதம் இருக்கிறேன், உடம்பைச் சாட்டையால் அடித்துக் கொள்கிறேன் இத்தனை செய்தும் ஏன் எனது கோரிக்கையை கேட்க மறுக்கிறாய்? வாழ வழியின்றித் தவிக்கிறேன். நண்பர்கள் இல்லை. நான் எந்த வகையில் தொழவேண்டும், யாரைத் தொழவேண்டும் என்று நீ தான் கூற வேண்டும்' என்று வெள்ளேந்தியாக அமீர்கான் கதறும் போது அவர் கதாபாத் திரம் மனதோடு ஒன்றிப் போகிறது.

தனி மனித பார்வைகளை கடந்ததும் PK அனைத்து மதத்தவர் மனதிலும் வெறுப்பை ஈட்டிடாத காரணம் அமீர் கானின் 'PK' கதாபாத்திரத்தில் அமைந்திருந்த நேர்மையே. உலகத்தை புரிந்து கொள்ள ஒரு குழந்தை கேட்கின்ற கேள்வியைப் போலத் தான் PK படமும். நிறைய முறை குழந்தைகளின் கேள்விகளிலிருந்து நமக்குப் பல தெளிவுகள் பிறக்கிறது அல்லவா! அப்படித் தான் படம் பார்த்த பின் கிடைக்கின்ற அனுபவமும்.

புகுத்தப்படாத பாடல்கள், அப்பழுக்கற்ற நகைச்சுவை, நிறைவான இயக்கம் அனைத்தும் இணைந்து PK–வை ஓர் இதமான அனுபவமாக உணரவைக்கிறது. ஏதோ வசனங்களோ, அபத்தமான காட்சிகளோ இல்லாமல் யதார்த்தமாக மனதுக்குள் இழைந்து காட்சிகள் புன்னகை பிறக்கச் செய்கின்றன.

இந்த இடத்தில் படம் சர்ச்சையாக மாறிடக் கூடுமோ? என்று நாம் நினைக்கும் போது ராஜ்குமார் ஹிரானி தனக்கே உரித்தான மாற்றுப் பாதையில் அழைத்துச்சென்று யார் மனதையும் நோக்கத்துக்காக பார்த்துக் கொண்டிருக்கிறார். இவரது படங்களில் யதார்த்தமாககாணப்படுகின்ற ஒரு நாடகத் தன்மை PK–'விலும் அமைந்திருக்கிறது. இருப்பினும், கதாபாத்திரங்களின் கண்ணியம் அதை திகட்டிடச் செய்யாமல் காத்திருக்கிறது.

உலகத்தில் நடக்கும் நிகழ்வுகளை வியந்து வியந்து அதை விசித்திரமாக கண் சிமிட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கும் PK அமீர் கானின்' நடிப்பும், அவருடைய முகபாவங்களும் அப்படியே கண்ணுக்குள் நிற்கிறது. அவருக்கு தேசிய விருது கிடைத்தாலும் ஆச்சர்யம் இல்லை. PK ஒரு நெஞ்சார்ந்த அனுபவம்.

## வணிகம்



# உலகளாவிய வெளிச்சத்தின் பாதையை இலங்கையில் வெளிக்காட்டும் ஓரெல்

ஓரேன்ஜ் இலெக்ரிக் வர்த்தகக் குறியின்உரிமையாளரானஓரெல் கோர்பரேஷன், அண்மையில் லைட் ஆட் எனும் மன்றத்திற்கு அழைப்பு விடுத்திருந்தது.

இந்த மன்றத்தில்கலந்து கொண்ட நான்கு சர்வதேச நிறுவனங்கள் தங்களது உற்பத்திகளை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியதுடன், அதனூடாக சிறந்ததொரு அனுபவத்தையும் அந்த நிறுவனங்களால் பெற்றுக் ஓரெல் கோர்பரேஷன்நிறுவனத்தின்முகாமைத்துவப்பணிப்பாளர் குஷான் கொடிதுவக்கு கூறுகையில்,

இந்த மன்றத்தின் லைட் ஆட் என்ற தொனிப்பொருளானது ஒரு கலையாகும்.

இந்த விடயமானது உண்மையிலேயே மிகக் கடினமான ஒரு விடயமாகும். நாங்கள் எமது மின்குமிழ் துறையை மேம்படுத்தும். முகமாக கூட்டு அபிவிருத்தியொன்றை மேற்கொள்வதே எமது முக்கிய நோக்கமாகும், எனக் கூறினார்.

மன்றத்தில் கலந்துகொண்ட பல்வேறு நிறுவனங்கள் தங்களது விசேட மின்குமிழ் உற்பத்திப் பொருள்களை காட்சிப்படுத்தியிருந்ததோடு, பெல்ஜியத்தில் இருந்து கீபஸ், அமெரிக்காவில் இருந்து ஜெனரல் எல்.ஈ.டி மற்றும் இத்தாலி நிறுவனங்களில் இருந்து ஆர்க்லூஸ் மற்றும் அக்ஸோ மின்குமிழ்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

கீயூபஸ் நிறுவனம் மூலம் முன்வைத்த மின் குமிழ்கள் எவ்வாறு இலகுவாக பொருத்தலாம் என்பதும் காட்டப்பட்டதோடு, சக்தியைச் சேமித்தல், சௌகரியம் மற்றும் நெகிழ்வுத் தன்மை கொண்டவையாகும்.

ஒரேன்ஜ் இலெக்ரிக், உற்பத்திப் பொருள்கள்உயர்மட்டத்திலுள்ளவர்களதும் மத்திய தரத்திலுள்ளவர்களதும்வீட்டுஉபகரணநாமத்தைக் கொண்ட இலெக்ரிக் உற்பத்திகள், இலங்கையில் மட்டுமன்றி சர்வதேசத் துறையிலும் கூட்டிணைந்து தங்கள் திறன்களை வெளிப்படுத்தும் ஆற்றலைக் கொண்டவையாகும்.(த)

# எஸ்.எல்.ஐ.ஐ.ரி யின் மாஸ்டர்ஸ் கற்கைகள்




இலங்கையின் முன்னணி பட்டப்படிப்பு கற்கைகளை வழங்கும் கல்வியகமான எஸ்.எல்.ஐ.ஐ.ரி, பிரித்தானியாவின் ஷெஃபீல்ட் ஹலாம் பல்கலைக்கழ்கத்துடன் இணைந்து சரக்கு மற்றும் விநியோக தொடர் முகாமைத்துவ மாஸ்ட்டர்ஸ் கற்கைகளை வழங்க முன்வந்துள்ளது.

தகவல் தொழில்நுட்பம், வணிகம் மற்றும் பொறியியல் ஆகிய பிரிவுகளில்கற்கைகளை வழங்கி வரும் நிலையில், இந்த புதிய கற்கை அறிமுகத்தின் மூலமாக மாணவர்களுக்கு சரக்கு மற்றும்விநியோகதொடர்முகாமைத்துவத் துறையில்நிபுணத்துவத்தை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இந்த புதிய கற்கை அறிமுகம் தொடர்பில் எஸ்.எல்.ஐ.ஐ.ரி இன் தலைவரும், பிரதமநிறைவேற்று அதிகாரியுமானபேராசிரியர்லலித் கமகேகருத்து தெரிவிக்கையில், உயர் கல்வி துறையில் முன்னோடியாகத் திகழும் எஸ்.எல்.ஐ.ஐ.ரி எப்போதும் தொழிற்துறையில் அவசியமானகற்கைகளைவழங்கி வருகிறது. சரக்கு மற்றும் விநியோக தொடர் முகாமைத்துவ மாஸ்ட்டர்ஸ்கற்கையை தொடர்வதன் மூலம் மாணவர்களுக்கு தொழிற்துறையில் உயர் அனுபவத்தை வழங்குவதுடன், எம்மிடம் காணப்படும் உயர் மட்ட விரிவுரையாளர்களின் மூலமாக மாணவர்களுக்கு, சரக்கு கையாள்கை தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ளவும், ஆளுமையை விருத்தி செய்து கொள்ளவும் உதவியாக அமைந்திருப்பார்கள் என்றார். (த)

# நத்தார் திருப்பலிகள்

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் நாளை புதன்கிழமை நள்ளிரவு 11.30 மணிக்கு நத்தார் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும் என இந்த ஆலயத்தின் பங்குத் தந்தை வண.பிதா.றோ.நேச ராஜா அடிகளார் அறிவித்துள்ளார்.
வியாழக்கிழமை காலை 5.30 மணிக்கும் குருநகர் புதுமை மாதா ஆலயத்தில் அன்று காலை 7 மணிக்கும் மேலும் திருப்பலிகள் இடம்பெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

★★★

நாவாந்துறை புனித பரலோக மாதா ஆலயத்தில் நாளை புதன்கிழமை நள்ளிரவு 11.45 மணிக்கு நத்தார் நள்ளிரவுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. மறுநாள் வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்திலும் காலை 6.30 மணிக்கு அஞ்சனந்தாழ்வு வேளாங்கண்ணி ஆலயத்திலும் திருப்பலிகள் இடம்பெறும்.

★★★

கொழும்புத்துறை புனித செபமாலை மாதா ஆலயத்தில் நத்தார் தினப்பூசை நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறும் என ஆலயத்தின் பங்குத்தந்தை அறிவித்திருக்கிறார்.

★★★

பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயத்தில் நாளை புதன்கிழமை நள்ளிரவு 11.30 மணிக்கு நத்தார் தின நள்ளிரவுத்திருப்பலி நடைபெறும். மறுநாள் காலை 6.30மணிக்கு மேலும் ஒரு திருப்பலி இடம்பெறும் என்று ஆலயப் பங்குத் தந்தை அறிவித்துள்ளார்.

★★★

அல்வாய் சக்கோட்டை புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் நாளை புதன் கிழமை நள்ளிரவு 11.45 மணிக்கும் மறு நாள் காலை 7.30மணிக்கும் நத்தார் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளன என்று பங்குத்தந்தை அறிவித்துள்ளார். (ஒ–51)

# கிறிஸ்து பிறப்பு ஆராதனை

பருத்தித்துறை,டிசெ.23
பருத்தித்தித்துறை கட்டைவேலிச் சேகர மெதடிஸ்த தேவாலயங்களிலும் கிறிஸ்து பிறப்பு ஆராதனை நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும்.
தும்பளை நேசகம் மெதடிஸ்த ஆலயத்தில் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆழிப் பேரலை நினைவு வழிபாடு நடைபெறும்.
மந்திகை சிற்றாலயத்தின் 19ஆம் ஆண்டு விழாவும் கிறிஸ்மஸ் ஒளிவிழாவும் 27ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை சேகர முகாமைக்குழு தலைமையில் நடைபெறும் சிறப்பு அருளுரையாளராக அங்கிலிங்கன் திருச்சபையைச் சேர்ந்த அருட்திரு ஸ்டீபன் சகல நிகழ்வுகளிலும் பங்குபற்றுவார். (ஒ)

# மூன்றாவது ஏழிசை மாலை

தென்மராட்சி ,டிசெ. 23
தென்மராட்சி இசை ஆசிரியர் சங்கத்தின் மூன்றாவது ஏழிசை மாலை இசை நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம் பெறும்.
சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக ஓய்வு நிலை சங்கீத பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் சு.கணபதிப்பிள்ளை கலந்து கொள்வார்.
சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.முத்துலிங்கம்,முன்பள்ளி பிரிவு உதவிக் கல்விப் பணிப் பாளர் சு.பாக்கியராசா ஆகியோர் கலந்து கொள்வர்.
நிகழ்வில் சங்கீத வித்துவான் பொன். ஸ்ரீவாமதேவனின் இசைக்கச்சேரியும், கலாவித்தகர் செல்வி ரஞ்சனா நவரத்தினத்தின் இசைப் பாடல்களும், செல்வன் அ.அமிர்தலோஜனின் பாட்டும் இடம் பெறும். (வ–9)


## அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை விசேட பொதுச்சபைக்கூட்டம்

த்லைவர் சீனியர் குணநாயகம் அவர்களின் தலைமையில்14.12.2014ஆம் திகதியில் நடைபெற்றது. இதில் 2015ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி இடம் பெறும் ஜனாதிபதித் தேர்தலில் எமது மக்களுக்கே உரித்தான பிரத்தியேகமான பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுத்தரக்கூடிய வேட்பாளருக்கே எமது ஆதரவை வழங்குவதாக ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

(55152) கௌரவ பொதுச் செயலாளர் (P.J. அன்ரனி)

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம், போதனா வைத்தியசாலை முன்பாக யாஸீன் மொஹமட் மர்ஸீன் என்ற பெயரையும், இல.24/D2 மொஸ்க்லேன், போர்த்தோட்டை, கொச்சிக்கடை, நீர்கொழும்பு என்ற முகவரியையும் கொண்ட சாரதி அனுமதிப் பத்திரம் (லைசன்ஸ்) தவறவிடப்பட்டுள்ளது.
தொடர்பு:077 465 6246, 071 483 0714
T.M.இர்பான், இல.299, முஸ்லிம் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
(55166)(4.3.7)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

அல்லாரை வீதி, கச்சாயில் புதிதாக அமைக்கப்பட்ட சகல வசதிகளையும் கொண்ட (4 அறைகள்) அழகான வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 355 7237
(55173)(4.3.6)

## வீடு விற்பனை

கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியில் இறயில் 'மகுதன் சீமா' நிலப்பரப்பு 3 குழி 7 உம் மேல் வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 408 3958 (55160)(4.3.6)

## பிரத்தியேக வகுப்புக்கள்

பொருளியல்A/L, குடியுரிமைக்கல்வி தரம் 10, 11, கணக்கீடுA/L, வணிகக் கல்வி தரம் 10, 11 தனியாகவும், குழுவாகவும் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு:077 832 1677
(55159)(4.3.7)

## மருந்தாளர் தேவை

பல வருடங்களாக இயங்கும் மருந்தகத்திற்கு மருந்தாளர் தேவை.
கடந்த முறை பரீட்சையில் சித்தியடைந்து சான்றிதழ் கிடைக்காதவர்களும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு:077 899 9769
(சி/18293)(4.3.7)

## செல்லா சினிமா யாழ்ப்பாணம்

விஜய், சமந்தா நடிப்பில்




எமது செல்லா சினி திரையரங்கில் உங்களது விளம்பரங்களை காட்சிப்படுத்த அழையுங்கள்: 077 326 6949

## கடை வாடகைக்கு

11, வெள்ளாந்தெருவில் (வைத்தீஸ்வராச் சந்திக்கு அருகில்) உள்ள (தம்பி ஸ்ரோர்ஸ்) கடை ஒன்று வாடகைக்குண்டு.
தொடர்பு:077 645 8556, 077 247 8782
(55167)(4.3.7)

## கணினி அறிவுள்ள விற்பனையாளர் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு கணினி அறிவுள்ள விற்பனையாளர் உடன் தேவை. மாத வேதனமாக ரூபா 12000/= வழங்கப்படும்.
ஆண்கள் மட்டும்.
வயது 18-22 வரை.
தொடர்பு:கிங்ஸ் எலெற்ரோனிக்ஸ்
11-A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3857
(55170) (4.3.7)

## வேலையாள்கள் தேவை

கொழும்பு- யாழ்ப்பாணம் பேருந்து ஆசன பதிவகத்துக்கு கொழும்பில் தங்கி நின்று ஆசனப்பதிவுகளை மேற்கொள்வதற்கு ஆள்கள் உடன் தேவை.
தொடர்பு:077 386 6250 (55170)(4.3.7)
குறிப்பு: தங்கும் இடம் இலவசம்.


# வடமராட்சி சுருக்கெழுத்து கழக ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம்,டிசெ23
வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 29 ஆவது ஆண்டுநிறைவுதின நிகழ்வும் சான்றிதழ் வழங்கலும் நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல்2மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில்கழகத்தலைவர் வ.சிவச்சந்திரதேவன் தலைமையில் நடைபெறும். நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமராட்சிவலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமாரும் சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சிவசிறீ, பருத்தித்துறைபிரதேச செயலர் த.ஜெயசீலன் ஆகியோரும்கலந்து கொள்வர். (வ)


## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.12.2013 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் -14.02.2015 தொடக்கம் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | - |
| நெல்லியடி | - |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| | கைதடி |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ் கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/18291)(4.3.6)

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)

## பதவி வெற்றிடம்

விண்ணப்பம் கோரல் - வெளிவாரி

## பதவி - பொதுமுகாமையாளர் 101/05

01. சம்பள அளவுத்திட்டம்:-
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 04/2012 சுற்று நிருபத்திற்கமைய 101/05 ஆவது சம்பளக் குறியீட்டின் படி சம்பளத்திட்டம்.
12,450 – 16,450
190 x 10 – 210 x 10
இதர படிகள் , விசேட படிகளும் வழங்கப்படும்.

02. வயதெல்லை:- 18 தொடக்கம் 45 வரை
(சங்கப்பணியாளருக்கு வயதெல்லை பொருந்தாது. சங்கத்தினூடாக விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.)

03. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:-
அ). கூட்டுறவு ஊழியர் 6 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 07 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக்குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ). அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமொன்றுடன் அல்லது அதற்கு சமமான தகைமையொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக்குறைந்தது 10 ஆண்டு கால அனுபவம். இதில் உயர் தர முகாமை. மட்டத்திலான பதவியில் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால கட்டாய அனுபவம்.

அல்லது

இ). கூட்டுறவு ஊழியர் உயர்தரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 08 வருட கால அனுபவம். இதில் சிரேஷ்ட முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக்குறைந்தது 03 வருட கால அனுபவம் கட்டாயமாகும். / க.பொ.த உயர்தரப்பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக்குறைந்தது 12 வருட சேவையாற்றிய அனுபவம். இதில் உயர்தர முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால கட்டாய அனுபவம்.
விண்ணப்ப முடிவுத் திகதி:- 06.01.2015

04. விண்ணப்பிக்கும் முறை:-
மேற்படி பதவிக்கான விண்ணப்பப் படிவத்தினை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் ரூபா. 10.00 இனை செலுத்திப் பெற்று, பூரணப்படுத்தப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளும் இணைத்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், "பொதுமுகாமையாளர் 101/05 பதவிக்கான விண்ணப்பம்" எனக்குறிப்பிட்டு "தலைவர், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறச் சங்கம் (வ-து), இல. 127, கே.கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்." என்னும் முகவரிக்கு 2015.01.06 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மு.ஜெ.சுஜீந்திரன்
தலைவர்,
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து).
(சி18292)(12.3.7)

# உலகச் செய்திகள்

## பெஷாவர் படுகொலைக்கு வருத்தப்படும் அல்குவைதா

இஸ்லாமபாத், டிசெ. 23
பாகிஸ்தானின் பெஷாவர் இராணுவ ப்பாடசாலைத் தாக்குதல் குறித்து தெற்காசிய அல்குவைதாவின் செய்தித் தொடர்பாளர் வருத்தம் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் பெஷாவர் பகுதியில் உள்ள இராணுவப் பாடசாலை ஒன்றில் புகுந்த 6 தலிபான் தீவிரவாதிகள் சரமாரியாக நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 132 குழந்தைகள் உட்பட 145 பேர் சாவடைந்தனர். இந்தத் தாக்குதலுக்கு தெஹ்ரிக் இ பாகிஸ்தான் எனப்படும் பாகிஸ்தான் தலிபான்கள் பொறுப்பேற்றுள்ளனர். இந்நிலையில் இவர்களின் தாக்குதல் தொடர்பாக தெற்காசியாவுக்கான அல்குவைதா பிரிவின் செய்தித் தொடர்பாளர் ஒசாமா முகமது அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், பெஷாவர் சம்பவத்தால் எங்களது இதயங்கள் வலியால் துடிக்கின்றன. இந்தச் சம்பவம் எங்களைப் பெரும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

பாகிஸ்தான் இராணுவத்தின் குற்றங்களும், கொடுமைகளும் எல்லை கடந்து விட்டன என்பதில் சந்தேகம் இல்லை. மேலும் அமெரிக்காவின் அடிமையாக பாகிஸ்தான் இராணுவம் மாறியுள்ளது மட்டுமின்றி இஸ்லாமிய இனப்படுகொலையும் நடந்து வருகிறது.

அல்லாவின் எதிரியான அமெரிக்காவுக்கு எதிராக ஆயுதம் ஏந்தியிருக்கும் நாங்கள் அப்பாவிக் குழந்தைகள், பெண்கள் மற்றும் இஸ்லாமியர்களுக்கு எதிரிகள் அல்ல என்றும் அவர்களைப் பழிவாங்கக்கூடாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ஒ–ரி)

## கட்டாய மதமாற்ற தடைச் சட்டம் மத்திய அரசு கொண்டுவரத் தயார்

### அமைச்சர் வெங்கய்ய நாயுடு தெரிவிப்பு



சென்னை, டிசெ. 23
எதிர்க்கட்சிகள் ஒத்துழைத்தால் கட்டாய மதமாற்ற தடைச் சட்டம் கொண்டு வர இந்திய மத்திய அரசு தயாராக இருப்பதாக நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் வெங்கய்ய நாயுடு தெரிவித்தார். அனைவரதும் ஒருமித்த கருத்து உடன்பாடு ஏற்பட்டால், கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் கொண்டு வர அரசு தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது: நாட்டில் நிலவும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டே, கட்டாய மதமாற்றத்துக்கு எதிராக சட்டம் கொண்டு வருவோம் என பா.ஜ.க அறிவித்திருந்தது. ஆனால், அதுவும் ஒருமித்த கருத்து உடன்பாடு ஏற்பட்டால் மட்டுமே சாத்தியமாகும். ஒருமித்த கருத்து உடன்பாடு ஏற்படாத வரை, அதுபோன்ற சட்டம் எதையும் மத்திய அரசு கொண்டு வராது. மாநில அரசுகளின் சட்டங்கள் உறுதியானதாக இல்லை என்றால், அகில இந்திய அளவில் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும். நாடாளுமன்றத்தில், அது தொடர்பாக மத்திய அரசு சில அறிவிப்புகளை வெளியிட்டது. ஆனால், அது குறித்து எதிர்க்கட்சிகள் சாதகமான பதிலைத் தெரிவிக்கவில்லை. மதமாற்ற நடவடிக்கைகள் கட்டாயப்படுத்தி மேற்கொள்ளப்பட்டால் அது தவறான ஒன்றாகும். அதன் போது மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டின் மதச்சார்பின்மைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக எதிர்க்கட்சிகள் தெரிவிப்பது தவறு. காங்கிரஸ் கட்சி உருவாக்கி வைத்துள்ள வாக்கு வங்கி அரசியலுக்குதான் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. நாடு தற்போது அமைதியாக உள்ளது. எந்த இடத்திலும் வகுப்புவாத மோதல்கள் இடம் பெறவில்லை. வளர்ச்சி மீதே கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்றும் காப்பீட்டுப் பிரேரணை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் என்றும் தெரிவித்தார். (ஒ–ரி)

## பா.ஜ.கவில் இணைந்தார் நடிகர் நெப்போலியன்



சென்னை, டிசெ. 23
தி.மு.கவில் செல்வாக்குடன் இருந்த நடிகர் நெப்போலியன் நேற்று பா.ஜ.க, தேசிய தலைவர் அமித்ஷா முன்னிலையில், பா.ஜ.கவில் இணைந்தார்.

தமிழக பா.ஜ..க, தலைவர் தமிழிசை சவுந்தரராஜனும் அவருடன் இருந்தார். நெப்போலியனுடன் அவரது ரசிகர் மன்ற மாநில தலைவர் கவுரிசங்கர், செயலாளர் மாந்துறை ஜெயராமன், பொருளாளர் சீதாராமன், துணைத் தலைவர் ஜெராதாகிருஷ்ணன் ஆகியோரும் பா.ஜ.கவில் இணைந்துள்ளனர். (ஒ–ரி)

## இந்திய மாநிலங்களவையில் பாகிஸ்தானுக்கு எதிராக தீர்மானம்

சென்னை டிசெ 23
மும்பைத் தாக்குதலில் தொடர்புடையவர்களை இந்தியாவிடம் பாகிஸ்தான் ஒப்படைக்க வேண்டும் என்று மாநிலங்களவையில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மும்பைத் தாக்குதலில் தொடர்புடைய பயங்கரவாதிகளை பாகிஸ்தான் அரசு இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று மாநிலங்களவையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டு, அது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ஒ–ரி)



## அமெரிக்க கடற்படைப் பிரிவில் சுறா ரோபோ அறிமுகம்

மனிதர்களால் செல்லமுடியாத மிகவும் ஆழமான கடல்பகுதியில் சுறா ரோபோவை பயன்படுத்த அமெரிக்கக் கடற்படை திட்டமிட்டுள்ளது.


அந்த ரோபோவை முழுமையான சோதனைகளுக்கு உட்படுத்திய பின்னர் அமெரிக்க கடற்படை பயன்படுத்தவுள்ளது. இதன் மூலம் ஆழ் கடல் பகுதிகளில் கண்காணிப்பு உள்ளிட்ட பல்வேறு பணிகளுக்கு இந்த ரோபோவை ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ரோபோ சுறா ஐந்து அடி நீளமும் 100 பவுண்ஸ் நிறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. உயிருள்ள நிஜ சுறா போன்று முன்னும் பின்னுமாக அதன் வால் துடுப்பு ஊசலாடும் வகையில் அசைந்து நீந்தி செல்லும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. (ஒ–ரி)

## தங்கத்தாலான சைக்கிள்

ஆடம்பர பொருள்களைத் தயாரித்து விற்கும் கோல்ட்ஜெனி நிறுவனம் தங்கத்தால் சைக்கிளொன்றை உருவாக்கி உள்ளது. இந்தச் சைக்கிள் 2.5 கோடி ருபாவுக்கு விற்கப்படுகிறது. 24 கரட் சுத்தமான தங்கத்தால் இந்தச் சைக்கிள் செய்யப்பட்டுள்ளது.

இது வெறும் மாதிரி சைக்கிள் அல்ல. மனிதர்கள் பயன்படுத்தும் முழு அளவு சைக்கிள்தான். இதில் கியருடன் பந்தய வாகனங்களில் பயன்படுத்தப்படும் டயர்களும் இணைக்கப்பட்டு உள்ளன. மேலும் இரவில் ஒளிரும் வகையில், சைக்கிளில் சில வைரங்களும் பதிக்கப்பட்டுள்ளன. இந்த சைக்கிளை ஓட்டுபவருக்கு களைப்பு ஏற் படாமல் இருக்க, தோலினால் செய்யப்பட்ட கால்மிதிகள் இணைக்கப்பட்டு உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ–ரி)





ஸ்பெயின் நாட்டில் பாதுகாப்பு பிரிவின் சிறப்பு அதிரடி படையினருக்கான வான்பயிற்சி நடைபெற்று வருகிறது. இந்தப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள மோப்ப நாய் மற்றும் அதன் பயிற்சியாளரும் 10 ஆயிரம் அடி உயரத்திலிருந்து பாரசூட் மூலம் குதித்து பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். உலகில் வானிலிருந்து குதித்து நாய் பயிற்சி பெறுவது இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது

## புதுப்பொலிவுடன் இஸ்ரோ இணையத்தளம்


டில்லி, டிசெ. 23
இந்த ஆண்டில் நிகழ்த்தப்பட்ட இந்திய விண்வெளி சாதனைகளுக்கு முக்கியத்துவம் தரும் வகையில் இஸ்ரோ இணையத்தளம் புதுப்பொலிவுடன் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

ஜி.எஸ்.எல்.வி. மார்க்–3 சோதனை ரொக்கெட் மூலம் செலுத்தப்பட்ட ஆளில்லா விண்கலம், செவ்வாய்க் கிரகத்துக்கு அனுப்பப்பட்ட மங்கள்யான் விண்கலம், வெற்றிகரமாக செலுத்தப்பட்ட ஜி.எஸ்.எல்.வி.–டி 5 ரொக்கெட், இந்திய பிராந்திய வழிகாட்டி அமைப்புக்கான ஐ.ஆர்.என்.எஸ்.எஸ். செயற்கைக்கோள்கள் என இந்த ஆண்டில் நிகழ்த்தப்பட்ட விண்வெளி சாதனைகள் தொடர்பான படங்களும், தகவல்களும் இணையத்தளத்தில் பிரதான இடத்தைப் பெற்றுள்ளன. விண்வெளி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி செயற்படுத்தப்படும் வளர்ச்சித்திட்டங்கள், இஸ்ரோவின் விண்வெளித் திட்டங்கள் தொடர்பாக திகதி வாரியான விவரங்கள், அண்மையில் ஏவப்பட்ட ஜிசாட்–16 செயற்கைக் கோள் குறித்த விவரங்கள் உள்ளிட்ட விவரங்களும் முதல் பக்கத்தில் வழங்கப்பட்டுள்ளன.

இந்திய அரசின் இலச்சினையுடன், இஸ்ரோவின் பெயரும் இணையதளப் பக்கத்தின் முகப்பில் இடம்பெற்றுள்ளன. இது இந்தியாவின் விண்வெளியின் உச்ச சாதனைகளை வெளிப்படுத்தும் வகையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஒ–ரி)



# உலகச் செய்திகள்



ஜேர்மனி நாட்டிலுள்ள மியூனிக் நகரில் உள்ள வணிக நிறுவனமான கேபிஎம்ஜியின் அலுவலகக் கட்டடத்தில் அமைந்துள்ள 9 மீற்றர் உயரம் கொண்ட சுருள் வடிவ மாடிப் படிகள் எல்லோரையும் கவர்பவை. இதை வடிவமைத்தவர் ஒலாஃபர் எலியாஸ்ஸன் என்பவராவார்.

## 300 தீவிரவாதிகள் பாகிஸ்தானில் கைது

இஸ்லாமபாத், டிசெ. 23

பாகிஸ்தானில் 300க்கும் மேற்பட்ட தீவிரவாதிகளை அந்த நாட்டின் இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.



பாகிஸ்தானில் பெஷாவர் இராணுவ பள்ளிக்கூடத்தில் 6 தலிபான் தீவிரவாதிகள் கடந்த 16ஆம் திகதி புகுந்து, 132 குழந்தைகள் உட்பட 148 பேரை சுட்டுக்கொலை செய்தமை, உலகமெங்கும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இதனையடுத்து தீவிரவாதிகளை கைது செய்யும் நோக்கில் இராணுவத்தினர் நடத்திய தீவிர தேடுதல்வேட்டையில் 300க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் அணியணியாக கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் பாகிஸ்தானின் புதிய சாவுத்தண்டனை அறிவிப்பை அடுத்து சில தீவிரவாதிகள் கழுத்தில் சுருக்கி ட்டு கொல்லப்பட்டனர். இது குறித்து பாகிஸ்தான் இராணுவ அதிகாரியொருவர் கூறுகையில்,

தீவிரவாதிக ள் கழுத்தில் சுருக்கிட்டு கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, புதிதாக தீவிர வாத தாக்குதல் அச்சுறுத்தல்கள் வந்துள்ளன என்றும் அதை கருத்தில் கொண்டு, உளவுத்தகவல்களின் அடிப்படையில் தீவிரவாதிகள் மீது தேடுதல் வேட்டை நடத்தப்படுகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து ஏராளமான ஆயுதங்கள், வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் கல்வி நிறுவனங்கலை தீவிரவாதிகள் தாக்குதல் இலக்குகளாக கருதுவதாலும், அது குறித்த அச்சுறுத்தல்கள் உள்ளதாலும் இஸ்லாமாபாத்தில் அனைத்து பாடசாலைகளும், கல்லூரிகளும் மூடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ–ரி)

## ஆப்கனில் குண்டு வெடித்து 7 பேர் சாவு

ஆப்கானிஸ்தானின் கிழக்கு எல்லைப் பகுதியில் உள்ள குனார் மாகாணம், நாரி நகரில் வீதியோரம் வைக்கப்பட்ட வெடி குண்டு வெடித்ததில் இரு சிறுமிகள் உட்பட 7 பேர் கொல்லப்பட்டனர். சனிக்கிழமை நடைபெற்ற இந்தச்சம்பவத்தில் மேலும் மூவர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதல் தலிபான்களால் மேற்கொள்ளப்பட்ட செயல் என்று அவர் தெரிவித்தார். இந்த ஆண்டில் நவம்பர் மாத இறுதி வரை, பயங்கரவாதிகளின் தாக்குதல்களுக்கு பொதுமக்கள் 3,188 பேர் சாவடைந்துள்ளனர். 6,429 பேர் காயமடைந்தனர் என ஐ.நா. அறிக்கையொன்று தெரிவிக்கிறது. (ஓ–ரி)

## செவ்வாய்க்குச் செல்வதற்கு முண்டியடிக்கும் அமெரிக்கர்

நியூ யோர்க், டிசெ. 23

வான்வெளியில் பயணித்து மனிதர்களை செவ்வாய் கிரகத்துக்கு அழைத்துச் சென்று, மீண்டும் பூமிக்குத் திருப்பி அழைத்து வரும் நோக்கில் அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு மையமான நாசா ஓரியன் என்ற விண்கலத்தைத் தயாரித்துள்ளது.

முதல்கட்டமாக, மனிதர்கள் எவரையும் ஏற்றிச் செல்லாமல் நான்கு பேர் அமர்ந்து செல்லும் வகையில் வடிவமைக்கப்பட்ட இந்த ஓரியன் விண்கலம், சோதனை முயற்சியாக அமெரிக்காவின் புளோரிடா நகரின் கடற்பகுதியில் இருந்து கடந்த 4ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்டது.

செவ்வாய்க் கிரகத்திற்கு சென்று வர விருப்பம் தெரிவித்து உலகில் உள்ள 230 நாடுகளை சேர்ந்த 13 லட்சத்து 79 ஆயிரத்து 961 பேர்கள் தங்களது பெயர்களை பதிவு செய்திருந்தனர். இந்தப் பெயர்கள் எல்லாம் ஓரியனில் உள்ள ஒரு சிப்பில் பதிவு செய்யப்பட்டிருந்தன.

இந்தநிலையில், ஓரியனில் இருந்த சிப்பில் பதிவு செய்யப்பட்டிருந்த பெயர்களில் 4,63,669 பேர் அமெரிக்க மக்கள் என தெரிய வந்துள்ளது. அதற்கு அடுத்தபடியாக 1,78,144 இந்தியர்கள் செவ்வாய்க்குச் செல்லும் தங்களது விருப்பத்தை தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ–ரி)

## சிஞ்ஞார் மலையை மீட்ட குர்து போராளிகள்



ஈராக்கின் வடபகுதியில், சிஞ்ஞார் மலையில் ஒரு மாத காலமாக இஸ்லாமிய தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்டிருந்த முற்றுகையை தகர்த்ததற்காக தமது போராளிகளுக்கு வாழ்த்துக் கூற ஈராக்கிய குர்து இனத் தலைவர் மசூத் பர்ஷானி அங்கு சென்றிருக்கிறார். அந்த மலையில் தஞ்சம் அடைந்திருந்த ஆயிரக்கணக்கான யஸ்டி சிறுபான்மையினரை மீட்பதற்கான அந்தத் தாக்குதலை குர்து பெஷ் மேர்கா போராளிகள் கடந்த வாரம் ஆரம்பித்திருந்தனர். அந்த யஸ்டி இன மக்களுக்கான முதலாவது உதவி வாகனத் தொடரணி தற்போது அங்கு சென்றடைந்திருக்கிறது. கடந்த கோடை காலத்தில் இஸ்லாமிய அரசுத் தீவிரவாதிகளால் கைப்பற்றப்பட்ட அந்த மலையின் கீழ் இருக்கும் சிஞ்ஞார் நகரை மீட்பதற்கான நடவடிக்கைகளை தமது போராளிகள் தற்போது தீவிரப்படுத்தியுள்ளதாக பர்ஷானி தெரிவித்துள்ளார். (ஓ–ரி)

## பயங்கரவாதப் பட்டியலில் மீண்டும் வடகொரியா

### பரிசீலிக்கிறது அமெரிக்க அரசு

வொஷிங்டன், டிசெ. 23

பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் நாடுகளென அமெரிக்கா தயாரித்துள்ள பட்டியலில் வடகொரியாவை மீண்டும் சேர்ப்பது பற்றி தனது நிர்வாகம் மறுபரிசீலனை செய்துவருவதாக அமெரிக்க அதிபர் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் சொனி திரைப்பட தயாரிப்பு நிறுவனத்தின் மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டதன் பின்னணியில் வடகொரிய அரசு உள்ளது என அமெரிக்கா குற்றம் சாட்டியிருந்தது. சொனி நிறுவனத்தின் மீது நடத்தப்பட்ட ஹேக்கிங், மிகப் பெரிய பாதிப்புகளை உண்டாக்கிய இணைய வழி அடாவடித்தனம் என அதிபர் ஒபாமா தெரிவித்துள்ளார்.

இது குறித்த மறுபரிசீலனை முடிந்தவுடன் உரிய பதில் நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டார். ஆனால் தம் மீதான குற்றச்சாட்டு ஆதார மற்ற வீண் குற்றச்சாட்டு என வடகொரியா கூறுகிறது.

அமெரிக்காவில் பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் நாடுகளின் பட்டியலில் இருபது ஆண்டுகள் காலம் வடகொரியா உள்ளடக்கப்பட்டிருந்த நிலையில் 2008ஆம் ஆண்டில் அப்போதைய புஷ் நிர்வாகம் வடகொரியாவின் பெயரை அந்தப்பட்டியலில் இருந்து நீக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ–ரி)

## ஸ்னோடனை காதல் வலையில் சிக்க வைக்க முயற்சி

### ரஷ்ய உளவுத்துறையின் புதிய வியூகம்

மொஸ்கோ, டிசெ. 23

அமெரிக்க உளவுத்துறை குறித்த பல்வேறு ரகசியங்களை வெளியிட்ட எட்வர்ட் ஸ்னோடன் என்பவரை மொடலிங் அழகியின் காதல் வலையில் சிக்க வைக்கும் முயற்சியில் ரஷ்ய உளவுத்துறை செயற்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

எட்வர்ட் ஸ்னோடன் அமெரிக்காவின் கோபத்துக்கு ஆளாகி, அங்கிருந்து வெளியேறி ரஷ்யாவில் தற்காலிகமாக தஞ்சமடைந்துள்ளார்.



அவரிடமிருந்து தகவல்களைப் பெறுவதற்காக ரஷ்ய உளவுத்துறை அதிகாரிகள் ரகசிய நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டமை தற்போது தெரியவந்துள்ளது.

அதன்படி ரஷ்யாவின் செக்ஸ் பாம் உளவாளி என வர்ணிக்கப்படும் அன்னா சாப்மன் என்ற மொடலிங் பெண் ஒருவரை ஸ்னோடனுடன் நெருக்கமாக பழக விட்டு, அவரிடம் இருந்து உண்மைகளை வெளிக்கொணர ரஷ்ய உளவுத்துறையினர் திட்டமிட்டிருந்தனர்

இதனை உறுதி செய்யும் விதமாக, ஸ்னோடனை திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன் என்ற தகவலை ரஷ்ய உளவுத்துறை அதிகாரிகளின் உத்தரவுப்படி அன்னா டுவிட்டரில் வெளியிட்டிருந்தார்.

அவரை திருமணம் செய்ய ஸ்னோடன் சம்மதித்தால் அவர் ரஷ்ய அரசின் அனுமதி இல்லாமல் நாட்டை விட்டு வெளியேற முடியாத நிலை ஏற்படும். ஆனால் அந்த அழகியை மணக்க ஸ்னோடன் மறுத்துவிட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ–ரி)

# பல்சுவை

**நாளை**

**மார்கழி-09 புதன்கிழமை**
**24.12.2014**
திதி: திருதியை பி.இ.02.29 வரை
நட்சத்திரம்: உத்தராடம் மா.06.28 வரை
சுபநேரம்: 04.56-06.26 வரை
இராகுகாலம்: 12.26-01.56 வரை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | | | | 8 | | 1 |
| 5 | | 2 | | | 9 | 6 | 7 | |
| 8 | | 1 | 3 | | | 2 | | |
| | 1 | | | | 8 | | | 7 |
| 3 | 9 | 8 | | | | 1 | 2 | 5 |
| 7 | | | 9 | | | | 8 | |
| | | 4 | | | 2 | 5 | | 6 |
| | 5 | 3 | 4 | | | 7 | | 8 |
| 9 | | 7 | | | | | 1 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 2 | 7 | 1 | 8 | 5 | 4 | 6 | 3 |
| 3 | 1 | 5 | 6 | 4 | 2 | 9 | 7 | 8 |
| 8 | 6 | 4 | 7 | 3 | 9 | 5 | 2 | 1 |
| 5 | 4 | 2 | 3 | 7 | 8 | 1 | 9 | 6 |
| 1 | 3 | 8 | 4 | 9 | 6 | 2 | 5 | 7 |
| 6 | 7 | 9 | 5 | 2 | 1 | 8 | 3 | 4 |
| 4 | 8 | 6 | 9 | 5 | 3 | 7 | 1 | 2 |
| 7 | 9 | 1 | 2 | 6 | 4 | 3 | 8 | 5 |
| 2 | 5 | 3 | 8 | 1 | 7 | 6 | 4 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என் றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப் பப்படு கையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்க னவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்புதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மனிதர்கள் சுதந்திரத்தையே நாடிச்செல்கிறார்கள்

உலகம் முழுவதிலும் நடைமுறையில் உள்ள பல்வேறு வழி பாடுகளை ஆராய்ந்தால், பண்படாத மக்கள், ஆவிகளை, பேய்களை தங்கள் முன்னோர்களின் ஆவிகளை வழிபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிய வரும். மக்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு தெரியாத ஒரு வழியில் இவை தங்களைவிட உயர்ந்தவை; அதிக சக்தி வாய்ந்தவை; தங்கள் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தக்கூடியவை என்று உணர்கிறார்கள். ஆகவே தாம் தெய்வங்களாக வழிபடுபவைகள் தங்களுக்கு எந்தக் கெடுதியும் ஏற்படுத்தாத வண்ணம் அவற்றைத் திருப்தி செய்ய முயல்கிறார்கள்.அதாவது ஒவ்வொருவரும் அதிக சுதந்திரம் அடைய விரும்புகிறார்கள். உயர்ந்தனவாக வழிபடுவனவற்றின் தயவைச் சம்பாதித்து தாங்கள் உழைத்துப் பெற வேண்டியதைக் கடவுள்களின் அன்பளிப்பாக பெற விரும்புகிறார்கள்.உலகம் அற்புதத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதை இது காட்டுகிறது. நாம் ஆச்சரியமானதையும் அசாதாரணமானதையும், பின் தொடர்ந்து ஓடிக்கொண்டு தான் இருக்கிறோம். இந்தச் சுதந்திர ஆசை,

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



முழுச் சுதந்திரமாக இருக்கும் பரம் பொருளைப்பற்றிய எண்ணம் எமக்கு உதிக்கும்படி செய்கிறது. இயற்கை முழுவதும் கடவுளின் வழிபாடுதான். உயிர் இருக்கும் இடமெல்லாம் சுதந்திரத்தை நாடும் முயற்சியும் காணப்படுகிறது. இந்தச் சுதந்திரம் கடவுளைத் தவிர வேறில்லை. அனைத்து இயற்கை மீதும் ஆணை செலுத்தும் ஆற்றலை இது அளிக்கிறது. ஆனால் அறிவின்றி இதைச் செய்ய முடியாது. அறிவு முதிர முதிர நாம் இயற்கையை ஆள்பவர்களாகத் திகழ்கிறோம். இந்த வெற்றியே எம்மை வலிவுள்ளவர்களாக்குகிறது. முழுச்சுதந்திரமுள்ளவனாகவும் இயற்கையை வென்றவனாகவும் ஒருவன் இருப்பானானால், அவன் இயற்கையைப் பற்றிய ஞானம் அனைத்தையும் பெற்றிருக்கவேண்டும். அவன் எங்கும்நிறைந்தவனாகவும், எல்லா அறிவுமுள்ளவனாகவும் இருக்க வேண்டும். இவற்றுடன் சுதந்திரமும் கைகோர்த்துச் செல்ல வேண்டும் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சுன்னாகம் | சாவகச்சேரி | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | முல்லைத் தீவு | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கத்தரி | 220 | 220 | 200 | 240 | 180 | 240 | 140 | 240 | 160 |
| கரட் | 100 | 200 | 170 | 200 | 180 | 220 | 240 | 240 | 200 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 50 | 40 | 60 | 80 | 60 | 20 |
| பயிற்றை | 180 | 240 | 200 | 300 | 200 | 220 | 180 | 280 | 260 |
| பாகல் | 300 | 350 | 400 | 320 | 300 | 240 | 160 | 280 | 200 |
| கருணைக்கிழங்கு | 40 | 50 | 50 | 60 | 50 | 40 | 240 | 120 | 45 |
| பெ.வெங்காயம் | 100 | 130 | 110 | 120 | 120 | 120 | 100 | 160 | 100 |
| சி.வெங்காயம் | 60 | 70 | 100 | 100 | 100 | 120 | 140 | 160 | 70 |
| பூசணி | 30 | 40 | 40 | 50 | 30 | 60 | 60 | 70 | 25 |
| தக்காளி | 220 | 180 | 170 | 200 | 200 | 240 | 200 | 240 | 170 |
| வாழைக்காய் | 80 | 50 | 70 | 80 | 70 | 120 | 80 | 120 | 80 |
| கீரை | 50 | 50 | 40 | 20 | 40 | 50 | 30 | 50 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | – | 30 | 40 | 30 | 20 | 15 |
| மிளகாய் | 500 | 400 | 400 | 500 | 600 | 600 | 500 | 800 | 500 |
| புடோல் | 140 | 140 | 130 | 140 | 130 | 120 | 120 | 160 | 80 |
| கோவா | 130 | 120 | 130 | 160 | 120 | 200 | 200 | 180 | 100 |
| வெண்டி | 120 | 140 | 120 | 140 | 140 | 140 | 180 | 140 | 80 |
| போஞ்சி | 200 | 180 | 180 | 180 | 200 | 140 | 180 | 240 | 140 |
| லீக்ஸ் | 280 | 240 | 260 | 300 | 280 | 400 | 220 | 260 | 200 |
| தேங்காய் | 40 | 50 | 40 | 35 | 30 | 45 | 45 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 70 | 80 | 90 | 80 | 140 | 100 | 70 |
| தேசிக்காய் | 100 | 100 | 80 | 80 | 80 | 60 | 150 | 100 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | – | 30 | 10 | 20 | 20 | 15 |

# கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | முல்லைத் தீவு | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 650 | 500 | 800 | 1000 | 650 | - |
| நண்டு | 300 | 300 | 300 | 400 | 250 | 600 |
| கணவாய் | 500 | 600 | 500 | 800 | 600 | – |
| பாரை | 500 | 600 | 450 | 600 | 600 | – |
| சுறா | 600 | 500 | 600 | 400 | 800 | – |
| சீலா | 300 | 400 | 400 | 400 | 400 | – |
| விளை | 500 | 450 | 400 | 400 | 600 | 400 |
| முரல் | 270 | 250 | 350 | 400 | 400 | – |
| கும்பிளா | 450 | 300 | 300 | 400 | 350 | – |
| கிழாக்கன் | 230 | 500 | 400 | 250 | – | – |
| ஒரா | 280 | 200 | 400 | 300 | – | 200 |
| திரளி | 200 | 250 | 160 | 200 | 200 | – |
| நகரை | 200 | 250 | 200 | 200 | – | – |
| ஆடை | 120 | 100 | 120 | – | 200 | 120 |
| கெழுறு | 150 | 100 | 200 | – | – | 150 |
| திருக்கை | 100 | 350 | 200 | 300 | – | – |

# புதிய கோணத்தில் ஆண், பெண் உறவுகள்

ஆண் பெண் நட்பு புதிய கோணத்தில் சென்று கொண்டிருக்கிறது. வேலைக்குச் செல்லும் பெண்கள் பணியிடங்களில் நட்புப் பாராட்ட வேண்டிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த நட்பு, பெண்ணுக்கு திருமணம் ஆவதற்குமுன்பு ஒருமாதிரியாகவும், திருமணமானபின்பு இன்னொரு மாதிரியாகவும் பார்க்கப்படுகிறது.



பழைய காலத்திலும் ஒன்றாக வேலை செய்யும் ஆண், பெண்களிடம் அந்த நட்பு இருக்கத்தான் செய்தது. ஆனால் அதைப் பற்றி வெளிப்படையாக பேசிக்கொள்ள மாட்டார்கள். இப்போது வெளிப்படையாகப் பேசும் சுதந்திரம் பெண்களுக்கு இருக்கிறது. வேலைக்காக வெளியே செல்லும் பெண்களுக்கு, உடன் வேலை செய்பவர்களுடன் நட்பு இருந்தே ஆகவேண்டும். வேலை பார்க்கும் இடத்துக்குச் சென்று விட்டாலே ஆண்கள் மத்தியில்தான் இருந்தாக வேண்டும். பெரும்பகுதி நேரத்தை அங்குதான் செலவிடுகிறோம். சுக துக்கம் அனைத்தையும் அங்கே அவர்களோடு பங்கிட்டுத்தான் ஆகவேண்டியதாய் இருக்கிறது. திருமணம் என்பது ஆண் நட்பிற்கு தடையில்லை. நல்ல ஆண் நண்பர்கள் கிடைத்தால், அவர்கள் ஆலோசனைப்படி கல்யாண வாழ்க்கையையும் சிறப்பாக அமைத்துக் கொள்ளலாம்'. ஆண் பெண் நட்புப் பற்றி நான் மற்றவர்களைப்போல் மேலோட்டமாக மட்டும் பேச விரும்புவதில்லை. ஒருவேளை அதுபோல் எதிர்த் தரப்பில் அந்த ஆணுக்கும் ஏற்படும். அப்போதுதான் இருவருக்குள்ளும் சொல்லக்கூடிய, சொல்லமுடியாத சில மாற்றங்கள் ஏற்படும். காதல்வசப்படுவார்கள். இது இருவருக்கும் திருமணமாகவில்லை என்றால் சாதாரணமானதுதான். யாராவது ஒருவருக்கு திருமணமாகி இருந்தாலோ அசாதாரணமாகிவிடுகிறது.

பெண்கள், தோழிகளிடம் என்ன வேண்டும் என்றாலும் பேசலாம். ஆண் நண்பர்களிடம் அவ்வாறெல்லாம் பேச முடியாது. ஆண் நண்பர்களில் நிறையப் பேர் அவசியமில்லை. அப்படியே ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருந்தாலும், ஒருவருக்குத் தெரியாமல் இன்னொருவரிடம் நட்புவைத்திருக்க வேண்டியுள்ளது.




## உங்களுக்கு எப்படி?

பிறந்த எண்ணிலும், கூட்டு எண்ணிலும் சூரியன் ஆதிக்கம் வருவதால் நல்ல உயரமான, ஒல்லியானஉடல்,சிவப்பானநிறத்திலிருக்கும். கண்களும் சிவந்து காணப்படும். முடி சுருள் சுருளாகநீண்டிருக்கும்.பேச்சில் துடுக்குத்தனமும் உண்டாகியிருக்கும்.

### 1 கூட்டெண் பலன்கள் 1-1

மானத்தை உயிர் என மதிப்பவர். வாக்குத் தவறமாட்டார், கருணையுடனும், பெருந்தன்மையுடன் நடந்துகொள்ளும் குணம் கொண்டவர். பகைக்குப் பணிய மாட்டார். பிறரைக் கெடுக்கும் எண்ணம் இவருக்கு இருக்காது. எந்தக் காரியத்தையும் சுறுசுறுப்புடனும் திட்டமிட்டும் செய்யும் ஆற்றல் கொண்டவர். நன்கு நிர்வகிக்கும் சாமர்த்தியமும், கலை ஈடுபாடும் கொண்டவராக இருப்பார்.

காதலில் ஈடுபாடு கொண்டவராக இருப்பார். எதற்கும் அஞ்சாமல் காரியத்தைச் செய்து முடிப்பார். இவர் நண்பர்களை அதிகம் விரும்புபவராகவும் எல்லோரும் அதிசயிக்கும்படி தனிப்பட்ட வாழ்க்கை நடத்துபவராகவும் இருப்பார். இவருக்கு நல்ல மனைவி அமைவார், பெண்களுக்கு கணவர் சரிவர அமைவது சற்று கடினமே.

இந்த எண்ணில் இருப்பவர்கள் அரச பதவிகளில் இருப்பர். உழைப்பால் உயரும் எண்ணம் கொண்டவர்கள். நகை, இரத்தினம், வியாபாரம், இயந்திரப் பொறியியலாளர், தலைவர் என எதிலிருந்தாலும் பெரிய பதவியில் இருப்பவர். வெப்பம் உள்ள உடல் என்பதால் குருதி அமுத்தம், நீரிழிவு, தலைவலி, கண் கோளாறு என வந்தால் எளிதில் நீங்காது.

சூரியனில் சந்திராதிக்கம் கொண்ட இவர், சூரியன் போல் தோற்றமும், சந்திரன்போல் மனமும் முன்னேறும் எண்ணமும் கொண்டவர். நடுத்தரமான உயரமும், உறுதியான உடலும் உள்ள இவர்கள் சஞ்சலம் கொள்ளும் மனமுள்ளவர்கள். உடல் தோற்றம் அழகாகவும் தலைமுடி அதிகமாகவும் இருக்கும்.

பிறரைக் கவரக்கூடிய வகையில் பேசுவார். பிறருக்கு யோசனை சொல்லும் இவர் சமயத்தில் தாமே குழம்பித் தவிப்பார். நன்றாகப் படித்து பட்டம் பெறும்திறமைஉள்ளவர். பேச்சில் தன்னை மிஞ்ச ஆள் இல்லை என்று நினைப்பவர். பெண்களை அதிகம் கவரவேண்டும்என்று நினைத்து அதற்காக அதிக சிரமப்படுபவர். தாமும் குழம்பி பிறரையும் குழப்பும் குணம் கொண்டவர்.

இவர்களுக்கு பெற்றவர்கள் ஆதரவு பூரணமாக அமையாது, அல்லது யாரேனும் உறவினரிடம் வளர்ந்தவராக இருப்பார். வறுமையிலும், வளமையிலும் மாறி மாறி வளர வேண்டிய சூழ்நிலை ஏற்படும். கல்வித் தடை ஏற்படும். குடும்பத்தில் ஒற்றுமை நிலையாக ஏற்படாது. சூரியன் ஆதிக்கம் பலமாக இருப்பதால் அச்சுவேலை கிடைக்கும். புகைப்படத் தொழில், டிசைனிங், தையல், மதுபானக் கடை ஆகியவை சுயமாக நடத்தலாம். பிறருடன் அனுசரித்துப் போக முடியாதென்பதால் தொழிலில் பிரச்சினை ஏற்படும்.

### 1 கூட்டெண் பலன்கள் 1-2

நரம்பு மண்டலப் பலவீனத்தால் தலை சுற்றல் இருக்கும், வயிறு வலி, பல் கோளாறு, மூட்டு வலி, முதுகு வலி போன்ற கோளாறுகள் உண்டாகும்.

# அலுவலகத்திலும் தொல்லையா?

பி.விபிஷனா



பணி இடத்தில் அனைவரும் பெண்களிடம் கண்ணியமாக நடந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. சில சபலபுத்தி கொண்டவர்களும் இருக்கத்தான் செய்வார்கள். அவர்களிடம் இருந்து தப்பிக்கும் கலையை பெண்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அவர் மேலதிகாரியாக இருந்தால் அதிக சங்கடம், என்றாலும்கூட சில உத்திகளைக் கடைப் பிடித்தால், இதுபோன்ற தொல்லை களைத் தவிர்த்துவிடலாம். சக ஆண் ஊழி யர்கள் தொடக்கத்தில் நல்ல மாதிரி பட்டால் கூட அளவுக்கு அதிகமாக அவர்களிடம் பேச வேண்டாம். யாரைப் பற்றியுமே சரியான முடிவுக்கு வர சிறிது காலம் தேவை. அதுவரை பொறுத்திருந்து, பிறகு நட்பு பாராட்டுவது நல்லது. உங்களுக்கு உங்கள் வேலை மிகவும் தேவையானதாக இருக்கலாம். அந்த வருமானத்தை நம்பித்தான் உங்கள் குடும்பமும், வருங்காலமும் இருக்கிறது என்கிற நிலைகூட இருக்கலாம். ஆனால் இதையெல்லாம் உங்கள் மேலதிகாரியிடம் சொல்லாதீர்கள். 'நாம் கொஞ்சம் அத்துமீறினாலும் இந்த வேலை இவளுக்கு மிக முக்கியம் என்பதால் ஒத்துப் போகக் கூடும் (அல்லது குறைந்தது தன்னைக் காட்டிக் கொடுக்கமாட்டாள்)' என்கிற எண்ணத்தை அவர் மனதில் பதிய வைப்பானேன்? சொந்தச் சோகங்களை அதிகமாக வெளிப்படுத்தினால் 'நான் இருக்கிறேன் உனக்கு. கவலைப் படாதே' என்கிற போர்வையில் மேலதிகாரி எல்லைமீறப் பார்க்கலாம். உடை விடயத்தில் சுயசிந்தனை இருப்பதில் தவறில்லை என்றாலும் பொதுவாக ஆடை குறித்த ஆண்களின் எண்ணம் கொஞ்சம் பிற்போககுத்தனமானதுதான். அதனால் ஆடை விடயத்தில் கவனம் தேவை. துணிச்சலான பெண்களிடம் வாலாட்டுவதைவிட பயந்து நடுங்கும் பெண்களிடம் எல்லைமீறப் பார்ப்பது சபலக்காரர்களுக்கு எளிது. சக பெண் ஊழியர்களிடம் நட்பை வளர்த்துக் கொள்ளுங்கள். சபல ஆண் பணியாளர்களை எதிர்க்க இது உதவும். உங்கள் முழு நம்பிக்கையைப் பெற்ற சக ஊழியர்களும் உங்களுக்கு உதவ முன்வருவர். உங்கள் வேலையில் நீங்கள் மிகச் சிறப்பானவராக இருந்துவிட்டால், எந்த மேலதிகாரியும் உங்களை அலட்சியப்படுத்திவிடவோ, தவறான கண்ணோட்டத்தில் அணுகவோ முயற்சிக்க மாட்டார்கள். 'ஏடாகூடமாக நடந்து கொண்டால், ஒரு மிக நல்ல பெண் ஊழியரை இழந்து விடுவோம்' என்ற எண்ணமேகூட சில தவறான நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தக்கூடும்.





# பெண்கள் தான் மாற வேண்டும்

சு.சாரங்கி

பெரும்பாலான பெண்களின் உலகம் மிகவும் குறுகியது. செல்லமாக வீட்டில் வளர்க்கப்பட்டு, ஒரு சிறிய வட்டத்துக்குள் வாழ்ந்தே பழகியவர்கள். அவர்களது வாழ்க்கையில் வேண்டத்தகாத சம்பவங்கள் நடக்கும்போது, என்ன செய்வதென்று தெரியாமல், அதிலிருந்து வெளியே வர அவர்களால் முடிவதில்லை. விளைவு? தற்கொலைதான் பல பெண்களின் முடிவு.

உடல் உறுப்புக்களில் மட்டுமே ஆணும் பெண்ணும் வித்தியாசமாக இருக்கிறார்கள். மற்றப்படி ஆணுக்குப் பெண் எந்த விதத்திலும் சளைத்தவள் இல்லை. ஆணும் பெண்ணும் சமம் என்பதைப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதுடன் நின்றுவிடாமல், அதை வாழ்க்கையிலும் கடைபிடிக்க வேண்டும்.

பெண்களே! நமக்கு எல்லாமே கிடைக்கிறது, மகிழ்ச்சியாக வாழ்கிறோம்... பிறகு என்ன என்று இருந்துவிடாதீர்கள். ஆண்களைப் போல பெண்களுக்கு வாழ உரிமை இல்லையா? நம்மைப் போன்றே பல கனவுகளைச் சுமந்தவர்கள்தானே அவர்கள்? அதனால் எல்லோரும் வேலைகளைப் போட்டுவிட்டு வீதிக்கு வந்து உடனே போராட்டம் நடத்த வேண்டாம். மாற்றத்துக்கு எமது வீட்டிலிருந்து தொடக்கப் புள்ளி வைக்கலாமே?



## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 29.06.2014 ஞாயிற்றுக்கிழமை
சிவபதமடைந்த எங்கள் குலவிளக்கு

**அமரர் சோதிலிங்கம் சுதாகரன்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (24.12.2014) புதன்கிழமை அதிகாலை 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற வுள்ளதால் அத்தருணம் தாங்கள் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மூச்சம்பலம்,**
**புலோலி தெற்கு, புலோலி.**

**குடும்பத்தினர்.**

(55174)(4.6.3)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்





மலேசியாவைப் பிறப்பிடமாகவும்
யாழ்.திருநெல்வேலி
மற்றும் மாவிட்டபுரத்தில்
வசித்தவரும் தற்போது
சம்பியன் லேன்,
கொக்குவிலில் வசித்தவருமான

**திருமதி**

**லீலாவதி சுந்தரராசா**

கடந்த 23.11.2014 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (23.12.2014) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மதிய போசனம் வளர்மதி முன்னேற்றக்கழக மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வந்து கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது தாயார் நோயுற்றவேளை இரவு பகல் பாராது வைத்தியம் செய்த வைத்திய தம்பதியருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிபுரிந்தவர்களுக்கும் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து உதவிய வர்களுக்கும் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ் சலி பிரசுரித்தும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எமது நன்றிகள்.

குடும்பத்தினர்,

சம்பியன் லேன்,
கொக்குவில்

தகவல்: கே.எஸ்.சூரியகுமார் (கிராம அலுவலர்)

## ஆறாம் மாத நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**அமரர் வீரகத்தி சிவபாதம்**

அன்னை மடியில்
03 . 07 . 1943



இறைவன் அடியில்
24 . 06 . 2014

கடந்த 24.06.2014 சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (24.12.2014) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ளதால் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போச்ன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**4 ஆம் வட்டாரம்,**
**கோம்பாவில்,**
**புதுக்குடியிருப்பு,**
**முல்லைத்தீவு.**

**குடும்பத்தினர்.**
T.P: 077 216 1510

(54969)(4.3.6)

# நாவற்குழி-கேரதீவு வீதியில் மூன்று வாகனங்கள் விபத்து

தென்மராட்சி,டிசெ.23

நாவற்குழி–கேரதீவு வீதியில் மூன்று வாகனங்கள் ஒரே இடத்தில் மோதிக் கொண்டதில் லான்ட் மாஸ்டர் சாரதி காய மடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு மறவன்புலோ ஆலடிச் சந்தியில் இடம் பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரிக்குச் சென்ற லான்ட் மாஸ்டர் அதே திசையில் வேகமாகச் சென்ற ஹைஏஸ் வாகனம் மோதியதுடன் எதிர்த் திசையில் வந்த இ.போ.ச. பஸ்ஸையும் மோதி விட்டு வயலுக்குள் குடை சாய்ந்தது. ஹைஏஸ் வாகனம் மோதியதில் லான்ட் மாஸ்டர் வாகனப் பெட்டி பலத்த சேதமடைந்தது டன் அதன் எஞ்சின் தூக்கி வீசப்பட்டது. அதன் சாரதியும் மறுகரையில் இருந்த வயலுக்குள் தூக்கி வீசப்பட்டார்.

சம்பவத்தில் காயங்களுக்கு இலக்கான யாழ்ப்பாணம் பாஷையூரைச் சேர்ந்த அருளப்பு மெண்டிஸ் (வயது–42) என் பவரை பொது மக்கள் சாவகச்சேரி ஆதார மருத் துவமனையில் சேர்த்தனர். அவருக்கு அவசர சிகிச்சையளிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப் பட்டார். விபத்து தொடர்பாக சாவகச் சேரி பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

பஸ் மற்றும் ஹைஏஸ் ஆகியவற்றின் முன்பகுதி சேதமடைந்துள்ளதாகத் தெரி விக்கப்பட்டது. இது தொடர்பாக சாவகச் சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இ.போ.ச.பஸ் சாரதியும் ஹைஏஸ் வாகன சாரதியும் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

குறித்த இருவரையும் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை உத்தரவிட்டார். (வ–9)

# நடமாடும் பொலிஸ் நிலையமும் இறுதி நாள் நிகழ்வுகளும்

### கும்பழாவளை பிள்ளையார் ஆலய முன்றிலில் நாளை

தெல்லிப்பழை,டிசெ.23

தெல்லிப்பழை பிரதேச பொலிஸாரி னால் கடந்த மாதம் 24ஆம் திகதி தொடக் கம் அளவெட்டி பாரதி சனமூக நிலை யத்தில் நடமாடும் பொலிஸ் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு ஒரு மாத கால மும் பாடசாலை மாணவர்களுக்கு கல்வி கருத்தரங்குகள், இரத்ததான நிகழ்வுகள், இலவச வைத்திய முகாம் எனப் பல்வேறு சமூக கலாசார நிகழ்வுகள் நடைபெற்று வந்தன. இந்த நிகழ்வில் பங்குபற்றி பல பொதுமக்கள் நன்மையடைந்துள்ளார் கள்.

இந்த நிகழ்வு நாளை 24ஆம் திகதி புதன் கிழமையுடன் முடிவடைகின்றது. இறுதி நாள் நிகழ்வு அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் கோயில் முன்றிலில் மாலை 5 மணியளவில் நடைபெறவுள்ளன. மேலும் நடமாடும் பொலிஸ் நிலையத்தினால் நடத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்றவர்களுக்கு இறுதி நிகழ் வில் வைத்து பரிசில்களும் மற்றும் வைத் திய முகாமில் தெரிவு செய்யப்பட்ட 100 கண் பார்வைக் குறைபாடுள்ள நோயா ளிகளுக்கு இலவச கண்ணாடிகளும் இந்த நிகழ்வில் வைத்து வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் பாட்டுப்போட்டி, கலாசார நடனப்போட்டி என்பவையும் இடம் பெறும். விசேட நிகழ்வாக சண்டிலிப்பாய் சுப்பர் ஆனந்த குழுவினரின் இன்னிசை கானங்கள் இடம்பெறவுள்ளது. இதில் பொதுமக்களை கலந்து சிறப்பிக்குமாறு தெல்லிப்பழை பொலிஸார் கேட்டுள் ளனர். (ஒ)

## கலைஞர்கள் கௌரவிப்பு

கலாசார அலுவல்கள் திணைக்களமும் இந்து சமய கலாசார அலுவல் கள் திணைக்களமும் இணைந்து வழங்கும் கலாபூ ஷணம் விருது பெற்ற கலைஞர்க ளைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று செவ் வாய்க்கிழமை முற் பகல் 10 மணிக்கு பருத் தித்துறை பிரதேச செய லக மாநாட்டு மண்ட பத்தில் பிரதேச செய லர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடை பெறவுள்ளது. (வ)

# விவசாயிகளுக்கு உபகரணங்கள்

### சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தால்

வரணி,டிசெ. 23


சாவகச்சேரி பிரதேச விவ சாயிகளுக்கு சாவகச்சேரி கம நல சேவை நிலையத்தின் ஊடாக விவசாய உபகரணங் கள் வழங்கப்பட உள்ளன.

இந்த நடவடிக்கை தொடர் பில் பிரதேசத்தில் இயங்கும் விவ சாய சம்மேளனங்களின் ஊடாக பெயர்ப்பட்டியல்கள் கோரப்பட்டு அவை யாழ்ப் பாண கமநல சேவை அபி விருத்தி திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நீர் இறைக்கும் இயந்திரம் தெளி கருவிகள், மின் மோட்டர்கள் ஆகியவையே விவசாயிகளுக்கு வழங் கப்படவுள்ளதாக கூறப்பட் டது.

அவை மானிய விலையில் வழங்கப்படவுள்ளதாகவும் இது போன்று குடாநாட் டில் சகல கமநல சேவை நிலை யங்கள் ஊடாக விவசாயி களுக்கு இந்த விவசாய உப கரணங்கள் வழங்கப்பட வுள்ளதாகவும் கூறப் பட்டது. (வ–122)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

**அமரர் சின்னத்துரை பொன்னுத்துரை**

**தோற்றம் 05.10.1937** **மறைவு 23.11.2014**

எம் தந்தை குடும்பத்தின் ஒளி விளக்காய் எம் குடும்பத்தில் இருளைப் போக்கினாய் எம் தந்தையே! தந்தைக்குத் தந்தையாக இறைவனுக்கு இறைவனாகத் தலைவனுக்கு தலைவனாக தந்தைக்கு உதாரணபுருசராக மகத்தான அப்பாவாக உறவு சொல்லும் உறவினராக சிரித்த முகத்தைக் கொண்ட கள்ளம் கபடமற்ற இனிய நண்பனாக ஊரார் போற்றும் உத்தமனாக எமை வளர்த்த எம் அன்பு மிகு பாசத் தந்தைக்கு பாசமிகு அன்புப் பிள்ளைகளின் இதயத்தால் உருகும் ஒரு மாத நினைவு அஞ்சலியும் உங்கள் ஆத்மா இறைவனோடு இரண்டறக்கலக்க அன்புப் பிள்ளைகளின் இதயம் கனிந்த கண்ணீர் மடல்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இன்று 23.12.2014 செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். (அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.)

**2 ஆம் வட்டாரம், நயினாதீவு.**

(55175)(4.6.3)

**குடும்பத்தினர்.**

## மூன்றில் இரண்டை

அதன் தொடர்ச்சியாக அது, தனது மூன்றில் இரண்டுபெரும்பான்மையைநாடாளுமன்றில் இழந்துள்ளது. அரசில் இருந்து வெளியேறுவதாக அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்ததை அடுத்தே அரசின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆட்டம் கண்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக் கொள்வதற்கு 150 ஆசனங்கள் தேவை. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக அரசு 161 ஆசனங்களுடன் மூன்றில் இரண்டு பெரும் பான்மைப் பலத்துடன் இருந்தது. ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதுமே, பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபாலசிறிசேனஉள்ளிட்ட அமைச்சர்கள் அரசிலிருந்து வெளியேறத்தொடங்கினர். தொடர்ச்சியாக அரசிலிருந்து அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் வெளியேறத் தொடங்கியதை அடுத்து அரசின் மூன்றில் இரண்டு பலம் கேள்விக் குறியாகவே இருந்தது. இந்த நிலையில், பொது எதிரணியிலிருந்து, ஐ.தே.க செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சியிலிருந்து ஜெயந்த ஆகியோரை அரசு தம் பக்கம் இழுத்திருந்தது.

அதனூடாக மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை தக்க வைத்திருந்தது. இந்த நிலையில் நேற்றைய தினம், ஆளும் கூட்டணியிலிருந்து அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் வெளியேறியது. அமைச்சர் ரிசாத் பதியுதீன் மற்றும் நடாளுமன்ற உறுப்பினர் அமீர்அலி ஆகியோர் வெளியேறினர். அதனால் மேலும் இரு நாடாளுமன்ற உறுப்பினர்களை இழந்த அரசு தற்போது 148 நாடாளுமன்ற உறுப்பினர்களை மாத்திரம் கொண்டுள்ளது.

தேர்தல் அறிவிக்கப்பட்டபின்னர் இதுவரையில் பொது எதிரணிக்கு 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாவியுள்ளனர். (ந-5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னப்பிள்ளை கந்தையா



ஐயனார் கோவிலடி கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் மிருசுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னப்பிள்ளை கந்தையா நேற்று (22.12.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் ஐயாத்தம்பி-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், பூமணி, காலஞ்சென்ற நாகமணி, கனகமணி, சரஸ்வதி, கணேசு, கந்தசாமி, சுந்தரம், காலஞ்சென்ற ராஜன், கனகசிங்கம் ஆகியோரின் அன்புத் தாயும், செல்வரத்தினம், மலர் அசெல்வராஷா, காலஞ்சென்ற நடேசு, நிதி, மங்களேஸ் சின்னாச்சி றஞ்சி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2014) செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொடிகாமம் வேவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

(55187) (10)

தகவல்: **பிள்ளைகள்.**

### நடராஜா இந்திரகுமார்

(முன்னாள் இலங்கை வங்கி முகாமையாளர்)



கதிரிப்பாயைப் பிறப்பிடமாக வும், வதிவிடமாகவும் கொண்ட நட ராஜா இந்திரகுமார் (முன்னாள் இலங்கை வங்கி முகாமையாளர்) நேற்று (22.12.2014) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், சரோஜாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மோகனதாஸின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பொன்னம் பலம்-நாகம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சண்முக ராஜா (ஆசிரியர்), சக்தி வேல் (நியூசிலாந்து), சுந்தரலிங்கம் (பிரான்ஸ்), உருத்திர குமார் (பிரான்ஸ்), மகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோ தரனும், திருயோகசெல்வராணி, குமுதாலட்சுமி, ஜெயந்தி, ராஜனி, சுமதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P: 077 316 7421
077 088 9334

(C/18300) (10)

தகவல்: **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இரத்தினம் கிருஷ்ணபிள்ளை



மல்லாகம் காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் கிருஷ்ணபிள்ளை 19.12.2014 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராமர்-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-தெய்வானை தம்பதியரின் மருமகளும்,காலஞ்சென்ற விமலாதேவி மற்றும் விக்னராஜா, சீதாதேவி, பத்மாதேவி, சுபத்திராதேவி, இராஜினிதேவி, வரதராஜா, குமாரராஜா, விஜியராஜா, காலஞ்சென்ற ரகுராஜா ஆகியோரின் அன்பு தாயும், சபாரட்ணம், காலஞ் சென்றவர்களான மல்லிகாதேவி, சுந்தரலிங்கம் மற்றும் குலசிங்கம், பாலகாந்தன், விமலசோதி, கலைமதி, கேதீஸ்வரி, பிரதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.12.2014) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காளிகோயிலடி, மல்லாகம்.**
**T.P: 021 224 1002**

(55182) (10)

தகவல்: **குடும்பத்தினர்.**

### சிவசோதி இராசேந்திரன் (இந்திரன்)



காரைநகர் கோவளத்தைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசோதி இராசேந்திரன் (இந்திரன்) லண்டனில் (21.12.2014) ஞாயிறு கால மானார்.

அன்னார் கோவளம் சிவசோதி- சரஸ்வதி தம்பதியரின் புதல்வரும், பொன் னம் பலவாணர் (முன்னாள் தபால் ஊழியர்-காரைநகர்) காலஞ்சென்ற சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், நந்தினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற துஷ்யந் தன் மற்றும் துஷ்யந்தி, நிரோஜன் ஆகியோ ரின் அன்புத் தந்தையும், றவீந்திரன் (றவி) பாலேந்திரன் (பாலன்-லண்டன்) ஆகியோரின் சகோதரனும், லோகதாசன் (லண்டன்), லோகராணி (லண்டன்), லோகரஞ்சினி, வனஜா (கனடா), வதனா, சிறிஸ்கந்தவேல் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துன ரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வேம்படி, காரைநகர்.**

(55182) (10)

தகவல்: **நந்தினி (மனைவி )**

# மரண அறிவித்தல்



### திருமதி தங்கம்மா சின்னத்தம்பி

**தோற்றம்: 08.11.1917** **மறைவு: 21.12.2014**

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், வவுனியா பண்டாரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா சின்னத்தம்பி 21.12.2014 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை-எள்ளுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பொன்னுப்பிள்ளை ( மலேசியா), சுப்பிரமணியம், சங்கரப்பிள்ளை, தையல்நாயகி, காலஞ்சென்ற செல்லம்மா சின்னத்துரை, பரமகுரு, கந்தசாமி (பைனா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி, இளையதம்பி (மலேசியா), மூத்தபிள்ளை, தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும், கந்தையா, கனகம்மா, கனகேஸ்வரி (கனடா), இராசம்மா, காலஞ்சென்ற சுப்பிரமணியம், அன்னலட்சுமி, காசிநாதன் (பட்டு), ரேவதி (பிரான்ஸ்), கருணாநிதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சின்னத்தம்பு, செல்லத்துரை மற்றும் திருநாவுக்கரசு, குலநாயகம், தங்கரத்தினம், தேவிகராணி, காலஞ்சென்ற பூமணி, சகுந்தலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், கருணை ரஞ்சனி (ஜேர்மனி), கருணைராஜினி (ஜேர்மனி), கருணை மலர், மஞ்சுளா (சுவிஸ்), கருணை தேவாஜினி (பிரான்ஸ்), அதா (பிரான்ஸ்), கோகிலா (பிரான்ஸ்), மகாலட்சுமி, ஜெயலட்சுமி, ரஞ்சன், ராஜேந்திரன் (பிரான்ஸ்), ராசலக்ஷ்மி (கனடா), ஏராஜ்குமார் (ஆஸ்திரேலியா), நாகேந்திரன் (பிரான்ஸ்), ரவிக்குமார் (கனடா), ராஜரூபன் (கனடா), காலஞ்சென்ற நிர்மலகாந்தன், நிர்மலா, நிர்மலராசன், நிர்மலராஜினி (லண்டன்) நிர்மலரூபினி (பிரான்ஸ்), ரவிச்சந்திரன் ரஜனி, ராஜினி, சுகந்தினி (சுவிஸ்), ரவிந்திரன் (லண்டன்), அமுதினி (சுவிஸ்), சிவாகரன் (பிரான்ஸ்), சுபேந்திரன், காலஞ்சென்ற சுமித்திரன், சுரேந்திரன், பகிரதன் (பிரான்ஸ்), கீதா (பிரான்ஸ்), சீதா (பிரான்ஸ்), இந்துஜன் (பிரான்ஸ்), ஜனார்த்தன் (பிரான்ஸ்), ஸ்ரீபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.12.2014 வியாழக்கிழமை தச்சானாங்குளம் இந்து மயானத்தில் பி.ப 2.00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 3768173

(54123) (10)

தகவல்: **காசிநாதன்**

## வலி.கிழக்கு நடமாடும் சேவையில் 292 விண்ணப்பங்கள் ஏற்பு

அச்சுவேலி,டிசெ.23

தேர்தலில் வாக்களிப்பதற்கு வசதியாக தேசிய அடையாள அட்டை வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் வலி.கிழக்கு பிரதேச செயலகத்தில் கடந்த 17ஆம் திகதி நடைபெற்ற நடமாடும் சேவையில் 292 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.


தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் ஆள்பதிவுத் திணைக்களம், தேர்தல் திணைக்களம் ஆகியவை இணைந்து நடமாடும் சேவையை நடத்தின.

தேசிய அடையாள அட்டை வழங்கும் நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டையை தொலைத்தவர்கள் என்ற வகையில் 104 விண்ணப்பங்களும், தேசிய அடையாள அட்டையில் பெயர் மாற்றம் செய்தல், திருத்தங்கள் மேற்கொள்ளல் என்ற வகையில் 141 விண்ணப்பங்களும், தேசிய அடையாள அட்டையை புதிதாகப் பெற்றுக்கொள்வதற்கு 47 விண்ணப்பங்களுமாக 292 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என்று உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(வ–11)

---

## நெஞ்சை விட்டகலாத ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் சின்னத்துரை பத்மரூபன் (ரூபன்)**

தோற்றம் 07.02.1980

மறைவு 02.01.2010

திதி: அபரபக்க துதியை (23.12.2014)

மனமென்ற சிறையில்
குடிகொண்ட நினைவாய்
வாழும் காலமெல்லாம்
அழியாத நினைவாய்
ஐந்தாண்டுகள் போனதுவோ
கனக்கின்ற நெஞ்சோடு
நினைவு கூருகின்றோம் இன்று

**குடும்பத்தினர்.**

புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

(55023)(4.3.6)

---

## ஆண்டு 8 இன் நினைவுகள்



**திருமதி நடராசா அழகம்மா**

மண்ணில் 02.06.1926 மறைவு 22.12.2006

திதி: வளர்பிறை துதியை

மண்ணுலக மாந்தர் அனைவரும்
–ஒரு நாள்
விண்ணுலகம் செல்வது இறை நியதி

எம் அன்புத் தெய்வம் எமை விட்டு விண்ணுலகம் சென்றாலும்
என்றும் எப்போதும் நீங்கா நினைவுகளாய் எம் மனதில்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

10/2, Ampakar Lane,
Kokuvil East, Kokuvil.

குடும்பத்தினர்.

(55186)(4.3.6)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



தோற்றம் 03 . 03 . 1944

மறைவு 23 . 11 . 2014

**திருமதி சரஸ்வதி வைரமுத்து**

சரசாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எமது தாயாராகிய திருமதி சரஸ்வதி வைரமுத்து அவர்கள் அமரத்துவம் அடைந்ததைக் கேள்வியுற்று நேரில் வந்தும், தொலைபேசி மூலமும் அனுதாபங்களைப் பகிர்ந்து ஆறுதல் கூறி இறுதிச்சடங்கிலும் கலந்து கொண்ட மற்றும் பல வழிகளிலும் எமக்கு உறுதுணையாக நின்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஆறாத்துயரின் மத்தியில் நன்றி நவில்கின்றோம். அத்துடன் இன்று (23.12.2014) செவ்வாய்க் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

சரசாலை மத்தி,
சாவகச்சேரி.

தகவல்:
மகன்-வை.பிரபா

(55049)(4.3.6)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**அமரர் பொன்னுத்துரை (மாணிக்கம்) யோகராசா**

(முன்னாள் சரிதா நகைமாட உரிமையாளர்)



தோற்றம் 16 . 06 . 1956

மறைவு 23 . 11 . 2014

உள்ளே நோய் வளர்த்து உறவுகளைச் சிரிக்க வைத்து
காலனுக்கு விருந்து வைக்க விரைந்துதான் போனீரோ!
காலனுந்தான் கயவனோ எம் கலகலப்பை
கவர்ந்து சென்று விட்டான்
எங்கள் உறவுப் பாலத்தை அறுத்து விட்டான்
தாங்க முடியாத துயரத்தில் தவிக்குதப்பா எம் நெஞ்சு
அமைதியாய்த் துயிலும் தங்கள் ஆன்மா இறைபதம் சேர
இறைவனை இறைஞ்சுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


முகவரி: இல.32, சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

**மனைவி, பிள்ளைகள்.**

(55163)(4.3.6)

---

## கண்ணீர் அஞ்சலி



இறப்பு 19 . 12 . 2014

**சோமலிங்கம் ஞானப்பிரகாசம் (ஜேர்மனி)**


கருமுகில்கள் வானமதைச்
சூழ்ந்ததுவோ
கண்களதும் கண்ணீரைச்
சொரிந்ததுவோ
கூடி நின்ற உறவுகளோ
கூக்குரல் இட்டிடவே
கூடுவிட்டுச் சென்றனையோ
ஞானமாய் வந்தவனே
வாடுகின்றோம் தேடுகின்றோம்
உன் வழித்தடங்களை தங்கள் ஆத்மா
சாந்திக்காக இறைவனை
வேண்டுகின்றோம்.

மகாலிங்கம் (குனாளம்) குடும்பம்,
கமல் (லண்டன்),
சிறிதரன், யஸ்ரீனியன்,
இந்திரா (சுவிஸ்) குடும்பத்தினர்.

(55171) (4.6.3)

---

## மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் முருகேசு பாக்கியநாதன் (சொக்கர்)**

மலர்வு 22.07..1948 (உரிமையாளர்- விநாயகர் ரேனிங்வேக்ஸ்) உதிர்வு 23.12.2011

பொன் மலர்ந்த முகமும் புன் சிரிப்பும் கொண்டவரே!
மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ!
நாடிவரும் அனைவருக்கும் யாமிருக்க பயமென்ன
உதவிக்கரம் நீட்டிய எங்கள் அப்பாவே!
புன்னகையால் வெல்லுவோம் என புதுவேதம் படைத்தவரே!
உங்கள் முகத்தைக் காணாது தவிப்பது
இறைவன் அளித்த தண்டனையா?
எம்மை விட இறைவன் உம்மை நேசித்தாரோ

**என்றும் உங்கள் உயிருடன் கலந்திருக்கும்**
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
**ஞானப்பிரகாசர் வீதி, மல்வம், உடுவில்.**

(54890)(4.3.6)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் ★ 27 . 05 . 1943



மறைவு ★ 23 . 12 . 2011

### திருமதி பரமேஸ்வரி நல்லதம்பி

(2ஆம் வட்டாரம் நயினாதீவு)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்கள்
வானுயரும் தெய்வத்துள் வைக்கப்படுவர்.


இல.24, நாமகள் லேன்,
கொக்குவில் கிழக்கு.

Dr.அரவிந்தன் (மகன்)

(55177)(10.3)

## மரண அறிவித்தல்

### முத்தர் செல்லையா



மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தர் செல்லையா நேற்று (22.12.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தர் சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வல்லி-ஆச்சிக்குட்டி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற தெய்வானையின் அன்புக் கணவரும், அருந்தவச்செல்வம் (சரோ), இராஜமோகன் (சுவிஸ்) ஆகியோரின் தந்தையும், சிவராசா, மாலினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், லோசிதா (ஆஸ்தி ரேலியா), அகல்யன், அனுக்ஷன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2014) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
மீசாலை.

(55180)
(10)

தகவல்:
சிவராசா (மருமகன்)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### திருமதி அன்னலட்சுமி சிவநேசன்

(சட்டத்தரணி சிவநேசன் அவர்களின் மனைவி)

மலர்வு 24.06.1951

உதிர்வு 26.11.2014

கடந்த 26.11.2014 புதன்கிழமை சிவபதமடைந்த குலவிளக்கு திருமதி அன்னலட்சுமி சிவநேசன் அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் இன்று (23.12.2014) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தங்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 25.12.2014 வியாழக்கிழமை அவரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவியின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து உதவியவர்களுக்கும் மற்றும் உறவினர்களுக்கும் அயலவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் நேரில் வந்து அனுதாபங்களைத் தெரிவித்து ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தவிர்க்க முடியாத காரணத்தால் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.
T.P: 021 321 9848 077 031 7614

சிவநேசன் (சட்டத்தரணி)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி விஜயலட்சுமி (விஜயம்) ஸ்ரீவிக்கிரமராசசிங்கம்



விடத்தற்பளை மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி (விஜயம்) ஸ்ரீவிக்கிரமராசசிங்கம் நேற்று (22.12. 2014) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம்-முத்துபிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான பரராசசேகரம்- அன்னமுத்து தம்பதியரின் மருமகளும், ஸ்ரீவிக்கிரமராசசிங்கத்தின் அன்பு மனைவியும், சசிகலா (பிரான்ஸ்), சந்திரிக்கா, சசியந்தன் (லண்டன்), சரிதா, சதீசன் (பிரான்ஸ்) ஆகியோரின் தாயும், பிரபாகரன், ரொபின்சன், உதயசுதா, பிரேமதிலி ஆகியோரின் அன்பு மாமியும், பிரணுஜன், மிதுஷா, மிதுனா, மிதுஷன், தேணிகா, ராணியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2014) செவ்வாய்க்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விடத்தற்பளை சம்பாவெளி இந்த மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விடத்தற்பளை,
மிருசுவில்.

(55184)
(10)

தகவல்:
குடும்பத்தினர்.

### கார்த்திகேசு குணரட்ணம்



மண்டைதீவு 08ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு குணரட்ணம் நேற்று (22.12.2014) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-அன்னமுத்து தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், தேவகுமார், காலஞ்சென்ற குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும்,கௌரிமலரின் அன்பு மாமனும், கணபதிப்பிள்ளையின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2014) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8ஆம் வட்டாரம், மண்டைதீவு.
T.P: 077 927 4912

(55178)
(10.3)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி குமரேசன் சரஸ்வதி



கொட்டடியைப் பிறப்பிடமாகவும், மூளாய் கிழக்கை வசிப் பிடமாகவும் கொண்ட குமரேசன் சரஸ்வதி 20-12-2014 சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை-ஆச்சிமுத்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு -தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், ரவீந்திரன், பிரேமாவதி, காந்திமதி, இந்துமதி, இரஞ்சிதமலர், கோகுலவாணி, மோகனதாசன், பாலமுரளி ஆகியோரின அன்புத் தாயாரும், சாந்தகுமாரி, காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் மயில்வாகனம், கந்தவனம் பிரான்சிஸ், காலம்சென்ற இரவிச்சந்தர் மற்றும் திருமகள் விக்கினேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், நாகராசா, நல்மணி, நவரட்ணம், சித்திரவாணி ஆகியோரின் சகோதரியும், சண்முகத்தின் மைத்துனியும் விமலன், முகுந்தன் காலஞ்சென்ற தீபா மற்றும் ரூபா, அஸ்வினி, காலஞ்சென்ற சங்கீதா மற்றும் சிந்துஷா, அகல்யா, ஆத்மிகா, காலஞ்சென்ற சதீஷன், மற்றும் கிரிஷாந்தி, பாரதி, கீர்த்தனன், தீபன், இலக்கியா, ரவிராம், அபிநயன் ஆகியோரின் பேர்த்தியும், விஷால், விஸ்ணு அமுதா, சியாமளா, தமிழினி, ஸ்ரீராம், அட்சயன், ஆதர்ஷன், ஆர்த்திகா, ஆரதி, ஆதித்தன், ஆர்யா, அகிஷாந், ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2014) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

259/2 மூளாய் கிழக்கு,
சுழிபுரம்.

குடும்பத்தினர்.

## வடக்குக்

என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் யோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்துடன் இணைந்த வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் நூற்றாண்டு விழா நேற்று யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றது. இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டப் பிரதிநிதி ஆ.தீபன் திலீசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாணத்தின் கல்வி நிலை எங்கு போகிறது. ஆசிரியர் சங்கம் என்ற ரீதியில் கல்வி தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு உரிமை உள்ளது. வடமாகாணத்தில் பலாலி ஆசிரியர் கலாசாலை உட்பட 69 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. இவற்றை திறப்பதற்கான செயற்பாடுகள் எதுவும் இல்லை. இராணுவ ஆக்கிரமிப்புடன் தான் இது நடக்கிறது. மீள இவற்றைக் கல்வித் திட்டத்தில் எடுப்பதற்குக் கல்வியை ஜனநாயகமாக்குவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை.

அவ்வாறு இல்லாது போனால் வடமாகாண மாணவர்களின் கல்வியில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். கல்வி சுதந்திரமான செயற்பாடாக இருக்க வேண்டும்.

கல்வியை அச்சுறுத்தலுடன் மேற்கொள்ள முடியாது. இதனை வென்றெடுப்பது தான் தற்போதைய ஆசிரியர் சங்கத்தின் ஒரு சவாலாக உள்ளது. நாட்டில் கல்வி தொடர்பில் பெரிய பிரச்சினை ஒன்று உருவாகியுள்ளது. ஆயிரம் பாடசாலைத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இலங்கையில் 9ஆயிரத்து 662 பாடசாலைகள், 1ஏபி பாடசாலைகள் 748, 1சி பாடசாலைகள் 2ஆயிரத்து 038 உள்ளன. ஆயிரம் பாடசாலைத் திட்டத்தில் இலங்கை அரசால் 1ஏபிபடசாலைகளை உருவாக்கப் போகிறார்கள். இதனால் உயர்தரப் பாடசாலைகள் மூடப்படும். இது போலியான கல்வித் திட்டமாகவே உள்ளது. இலங்கையில் செயற்படும் தொழிற்சங்கங்களில் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்ட தொழிற்சங்கமாக இலங்கை ஆசிரியர் சங்கம் உள்ளது. இன்றும் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைக்காகவே குரல்கொடுத்து வருகின்றோம்-என்றார்.

நிகழ்வில் பேராளன் நூல் வெளியீடும் இடம்பெற்றது. இதில் ஆசிரியர் சங்கத்தைச் சார்ந்தவர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

(த-14)

உதயன்


செய்திகள்

# நாட்டில் தொடர்ந்து சீரற்ற காலநிலை வடக்கு–கிழக்கில் மக்கள் இடம்பெயர்வு

## மழையால் குளங்கள் நிரம்பி உடைப்பெடுக்கும் அபாயம் குடியிருப்புக்கள் வெள்ளத்தில் மூழ்கியதால் மக்கள் அந்தரிப்பு

விரிவு

**❝ நாட்டில் ஏற்பட்டுள்ள சீரரற்ற காலநிலை காரணமாக மக்கள் பலர் இடம்பெயர்ந்து அல்லலுற்றுள்ளனர். கடும் மழை வெள்ளப் பெருக்கு ஆகியவற்றால் வடக்குக் கிழக்கின் பல பிரதேசங்களில் மக்கள் இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் உள்ளனர்.**



### மன்னாரில்

மன்னார்மாவட்டத்தில்தொடர்ச்சியாகப் பெய்து வரும் மழை காரணமாகவும் மல்வத்து ஓயாவின் நீர் மட்டம் உயர்ந்து நீர் வழிந்தோடுவதாலும் பல கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

மடுப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 352 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 188 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். குறிப்பாக மடுப் பிரதேசத்தில் தம்பனைக் குளம் கிராமத்தின் பெரும் பகுதி நீரில் மூழ்கியுள்ளது. இந்தக் கிராம மக்கள் தற்போழுது சின்னப் பண்டிவிருச்சான் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த வெள்ள இடரினால் மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராமங்களில்120 குடும்பங்களைச்சேர்ந்த 497 பேரும், நானாட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராமங்களில் 403 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 500 பேரும், முசலி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 45 பேரும் இடம் பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதன் அடிப்படையில் மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக ஆயிரத்து 357 குடும்பங்களைச் சேந்த 4 ஆயிரத்து 821 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குத் தேவையான உலர் உணவு மற்றும் அடிப்படை வசதிகளை வழங்குவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

### வவுனியாவில்

வவுனியாவில்தொடர்ந்து மூன்று நாள்களாகப்பெய்துவரும்மழையினால் 704 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 698 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்

அவர் மேலும் கூறுகையில்,

தொடர்ச்சியான மழையினால் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ள மக்கள் பீடியா பாம், கந்தசாமிநகர், பாவற்குளம், பெரியகட்டு, கண்ணாட்டி ஆகிய் 5 நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு வேண்டிய உதவிகளை வவுனியா பிரதேச செயலகமும், வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினரும் செய்து வருகின்றனர். சமைத்த உணவு வழங்கி வருகின்றனர்.

பூவரசங்குளம் பாதை, செட்டிக்குளம் பாதை, நெளுக்குளம் – செட்டிக்குளம் பாதை, செட்டிக்குளம் – சின்ன சிற்பிக்குளம் பாதை ஆகியவற்றின் ஊடாகப் பயணிகள் செல்லமுடியாதாறு வெள்ள நீர் பாய்ந்து ஓடுகின்றது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள பல சிறிய குளங்கள் உடைப்பெடுத்துள்ளன.

சமளங்குளம், பூந்தோட்டம் பாதைகளை மேவி வெள்ளநீர் பாய்ந்து ஓடுகிறது

வவுனியா மாவட்டத்தில் 16 வீடுகள் முற்றாகவும், 76 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

### திருகோணமலையில்

திருகோணமலை மாவட்டத்தில் பெய்துவரும் அடை மழை காரணமாக பல இடங்கள் நீரில் மூழ்கியுள்ளதுடன் சிலர் இடம் பெயர்ந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்கியுள்ளனர். குறிப்பாக வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மாவடிச்சேனை கிராமத்தில் சுமார் 30 குடும்பங்கள் மாவடிச் சேனை மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ளனர். இவர்களுக்கான சமைத்த உணவு வெருகல் பிரதேச செயலகம் மூலம்வழங்கப்பட்டுவருகின்றது.



வட்டவான், முட்டுச்சேனை, முகத்துவாரம் ஆகிய பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு உள்ளன. வெருகல்– ஈச்சிலம்பற்று வீதியை மேவி வெள்ளம் பாய்ந்து வருகின்றது.

இதேவேளை, தம்பலகாமத்தில் முள்ளியடி, முன்மாதிரித்திடல், நடுப்பிறப்பன்திடல் ஆகிய பகுதிகளில் உள்ள மக்களில் ஒரு பகுதியினர் இடம்பெயர்ந்து தம்பலகாமம் மகா வித்தியாலயத்தில் தங்கியுள்ளனர். இவர்களுக்கான சமைத்த உணவு தம்பலகாமம் பிரதேச செயலகம் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. ஆலங்கேணியில் ஒரு பகுதி வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளது. பாதிக்கப்பட்ட அப்பகுதிக்கு திருகோணமலை நகரசபைத் தலைவர். க.செல்வராஜா, திருகோணமலை தமிழரசுக் கட்சியின் தொகுதிக்கிளை உறுப்பினர்களான சுரேஸ்குமார், சத்தியசீலராஜா, கௌரிமுகுந்தன் ஆகியோர் நேரில் சென்று உலர் உணவுப் பொருள்கள் வழங்கினர்.

மூதூர் பிரதேசத்தில் இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியுள்ள சம்பூர் மக்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டு உள்ளனர். அகதி முகாம்கள் முற்றாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. அப்பகுதிக்கு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கு.நாகேஸ்வரன் நேரில் சென்று கட்டைபறிச்சான் முகாமில் தங்கியுள்ள 352 குடும்பங்களுக்குச் சமைத்த உணவை வழங்கினார்.

மழை தொடருமாக இருந்தால் முகாம்களில் உள்ள சம்பூர் மக்கள் பேரவலத்தைச் சந்திக்க நேரிடும் என்று கூறப்பட்டது.

### மட்டக்களப்பில்

மட்டக்களப்பு மர்வட்டம் சித்தாண்டியின் பெரும்பாலான



பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. தொடர்ச்சியாகப் பெய்து வந்த மழை மற்றும் உறுகாமம் குளத்தினுடைய வான் கதவுகள் திறக்கப்பட்டமை போன்றவற்றினால் தொடர்ச்சியாக வெள்ள நீர் அதிகரிக்கத் தொடங்கியது.

உதயனமூலை, மதுரங்காட்டு கொலனி ஆகிய பகுதிகள் முற்றாகவெள்ளத்தில்மூழ்கியுள்ளன. மக்கள் இடம்பெயர்ந்து தற்போது பாடசாலை, பொதுச்சந்தை மற்றும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர். சில குடும்பங்கள் தத்தமது வீடுகளில் உள்ள மேல் தளங்களில் அல்லது பரண் அமைத்து தொடர்ந்தும் தமது உறைவிடங்களிலே தங்கியுள்ளனர்.

வீடுகளிலே வளர்க்கப்பட்ட நாய்கள் உறவினர்களால் கொண்டு செல்லப்பட்டவை தவிர ஏனையவை உயிரிழக்கும் நிலையிலும், குளிரில் நடுங்கிய நிலையிலும் காணப்படுவதுடன், ஒரு சில இடங்களில் நாய்கள் உயிரிழந்து மிதப்பதனையும் காண முடிகின்றது.

நலன்புரி முகாம்களில் தங்கியுள்ளமக்களுக்குத்தேவையான உதவிகளை கிராம உத்தியோகத்தர்கள் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 225 கிராம சேவையாளர் பிரிவுகளில் 88ஆயிரத்து 925 குடும்பங்களைச் சேர்ந்த 3லட்சத்து 22 ஆயிரத்து 416 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது. 7ஆயிரத்து 794 குடும்பங்களைச் சேர்ந்த 27ஆயிரத்து 608 பேர் இடம் பெயர்ந்துள்ளனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்தவர்கள் பொதுக் கட்டடங்களில் அமைக்கப்பட்டுள்ள 78 நலம்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நலம்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு உரிய பிரதேச செயலகங்கள் ஊடாகச் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வெள்ள இடர் காரணமாக இதுவரை 2 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 32ஆயிரத்து 299 குடும்பங்களைச் சேர்ந்த 63ஆயிரத்து 978 பேர் மட்டக்களப்பு மாவட்த்தில் வாழ்வாதார ரீதியாகவும் பாத்திப்படைந்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

### மட்டக்களப்பில் அதிக மழை



மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து நேற்றுத் திங்கட்கிழமை காலை. 8.30 மணி வரையான 24மணி நேரத்துக்குள்வாகனேரியில் அதிகளவு மழை வீழ்ச்சியாக 145.2 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மட்டக்களப்பு வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பாளர் கே. சூரியகுமாரன் தெரிவித்தார்.

(த–14–56–402–421–40–32)

# மைத்திரியும் விதிவிலக்கல்ல



கொழும்பு, டிசெ.23

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சோதிட நம்பிக்கை பழக்கம் குறித்து பரவலாக விமர்சிக்கப்பட்டு வரும் நிலையில், பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவும் அதற்கு விதிவிலக்கல்ல என்பது தெரியவந்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில், மைத்திரிபால சிறிசேனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது கையில் வைத்திருப்பது போன்ற தங்கத்திலான வசிய பொருள் ஒன்றை வைத்திருந்ததை காணமுடிந்தது. 'வஜ்ர' என்ற இந்த தங்கத்தால் ஆன வசிய யந்திரம் மூலம் மக்களை தம்வசம் ஈர்க்க முடியும் என நம்பிக்கை உள்ளது.

மைத்திரிபால சிறிசேன சோதிடர்கள் மற்றும் குறி சொல்பவர்கள் மீது தனக்கு நம்பிக்கையில்லை என பகிரங்கமாக கூறியிருந்தார். எனினும் பொது வேட்பாளரும் மந்திர சக்திகளை நம்புகிறார் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது என்று ஆங்கில இணையத்தளம் ஒன்று கூறியுள்ளது. (ற)

# அரசுக்கு தோல்வியே

## அடித்துக் கூறுகின்றார் ஹூனைஸ் பாரூக் எம்.பி.

மன்னார், டிசெ.23

அரசு பணத்தைக் கொடுத்து பரப்புரை செய்தது. அபிவிருத்தியைக் காட்டிப் பரப்புரை செய்தது. ஆனாலும் அவர்களுக்குத் தோல்வி நிச்சயம் என்பது இப்போது தெரிந்துவிட்டது– இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் ஹூனைஸ் பாரூக்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரான ஹூனைஸ் பாரூக் அரசிலிருந்து விலகிய பின்னர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு தெரிவித்து, மன்னாரில் நடத்திய கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேர்தல் முடிவடைந்து 4 மணி நேரத்தின் பின்னர் இலங்கையின் நிலைமையும் மைத்திரிபால சிறிசேனவினுடைய நிலைமையும் என்னவாகும்? கடந்த தேர்தலில் , சரத்பொன்சேகாவுக்கு ஏற்பட்ட நிலைமை ஏற்படுமா? – என்று அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அவர்,

“தற்போது அரசு சார்ந்தவர்கள் இந்த கட்டுக்கதைகளை அவிழ்த்துவிடுகிறார்கள். குறிப்பாக பாமர மக்களுக்கு மட்டுமல்ல, அமைச்சர்களுக்கும் கூட சொல்கிறார்கள். நாங்கள் இந்தமுறை வெல்வோம் என்று.

கடந்த முறை வட மாகாண தேர்தலின்போதும், இதே கதையைத் தான் அரசு கூறியது. ஆனால்



அதற்கு எதிர்மாறாகத் தான் நடந்தது. மைத்திரி வெல்லும் போது இராணுவ ஆட்சி நடைபெறலாம். இதைத்தான் மக்களுக்கும் கூறிப் பயம் காட்டுகிறார்கள். ஆனால் அவ்வாறு இல்லை. எப்போது எதிரணி வெற்றி பெறுமோ அப்போது அரச படைகளும் மாறிவிடும். முன்னைய நிலைமை தற்பொழுது இல்லை– என்று தெரிவித்தார்.

குறித்த கூட்டத்தில், எதிர்வரும் 30ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் பரப்புரைக்காக மன்னார் வரவிருக்கும் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் பரப்புரைக்கான ஏற்பாடுகள் குறித்தும் பேசப்பட்டது. மன்னார் மாவட்டத்தில் பல பகுதிகளில் இருந்தும் வருகை தந்திருந்த ஹூனைஸ் பாரூக்கின் ஆதரவாளர்கள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பலரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். (ற)

# அரசு மீது விரக்தியே

## ஹசன் அலி எம்.பி. கூறுகின்றார்

மன்னார், டிசெ.23

இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் நாம் தொடர்ச்சியாக பல முயற்சிகளை மேற்கொண்டிருந்த போதிலும் அரசு கதவடைத்துவிட்டது. அரசின் செயற்பாடுகள் மீது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விரக்தியுடனேயே உள்ளது. பொது எதிரணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எமக்கான தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.– இவ்வாறு அந்தக் கட்சியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது:–

“அரசைப் பிரதிநிதித்துவப்படுத்திய நாம் அரசின் வெற்றியின் பங்குதாரர்களாக உள்ள போதும் எமது முயற்சிகள் பல வெற்றி பெறாத நிலையில் உள்ளன. இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் நாம் ஆரம்பத்தில் இருந்தே அரசிடம் வலியுறுத்தி வருகின்றோம். முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தெரிவுக்குழுவில் பேச முயன்ற போது அரசின் தெரிவுக் குழுவில் இருந்தே எம்மை நீக்கிவிட்டனர்.

தற்போதும் நாம் அரசின் மீது விரக்தியிலேயே உள்ளோம். பொது எதிரணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு எட்டப்பட வாய்ப்புகள் உள்ளதாக தெரிகின்றது. எனினும் பொது எதிரணி கட்சியின் இறுதித் தீர்மானம் கட்சியின் தலைவரால் மேற்கொள்ளப்படும். அவரது முடிவுக்காக காத்திருக்கின்றோம்”– என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# தமிழ்க் கட்சிகளுடைய ஆதரவு எமக்குண்டு

## சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ.23

தமிழ் அரசியல் கட்சிகள் பல எமக்கு ஆதரவு வழங்கியுள்ளன. குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் அரசுடன் இணைந்து கொண்டுள்ளனர். புளொட், சிறிரெலோ போன்ற கட்சிகளும் எமக்கே ஆதரவு வழங்கியுள்ளன – இவ்வாறு தெரிவித்துள்ளார் சுசில் பிரேம ஜயந்த.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வவுனியா மாவட்டத்துக்கான தேர்தல் அலுவலகம் கடந்த சனிக்கிழமை தேக்கவத்தையில் திறக்கப்பட்டது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

“போரில் இருந்து நாட்டை மீட்டெடுத்து வடபகுதி மக்களை சுதந்திரமாகவாழவைத்தபெருமை மஹிந்த அரசையே சாரும். அதன் காரணமாக வடபகுதியில் எமக்குத் தொடர்ச்சியான ஆதரவு இருக்கும்.

முன்பு தேர்தல் காலங்களில் வேட்பு மனுத்தாக்கல் செய்ய செல்வதென்றால் எவ்வளவு பாதுகாப்புக்களுக்கு மத்தியில் செல்லவேண்டும். ஆனால் இப்போது அப்படியில்லை. சுதந்திரமாகச் சென்று வேட்பு மனுக்களைத்தாக்கல் செய்யமுடிகிறது. இதற்குக் காரணம் போர் முடிவுக்கு வந்தமையே. ஜனாதிபதி போரை முடிவுக்குகொண்டுவந்து சுதந்திரத்தை நிலைநாட்டியுள்ளார். அதை குழப்புவதற்கும் மீண்டும் போரை ஏற்படுத்தவும் சிலர் முயற்சிக்கின்றனர். அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது. வடபகுதி மக்கள் எம்முடன்தான் இருக்கின்றனர். (ற–402)

# கூட்டமைப்பு எடுக்கும் முடிவே புளொட் அமைப்பினது முடிவு

## அதன் தலைவர் சித்தார்த்தன் தெரிவிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்னமுடிவுஎடுக்கிறதோ அதுவே புளொட் அமைப்பின் முடிவாகவும் இருக்கும். எங்கள் கட்சிக்குள் பிளவு எதுவுமில்லை. வெளிநாட்டில் இருந்து வந்த சிறி என்பவரே தாம் புளொட்டில் இருந்து பிரிந்தவர்கள் எனத் தெரிவித்து அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை சந்தித்து ஜனாதிபதி மஹிந்தவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார். – இவ்வாறு தெரிவித்தார் வட மாகாணசபை உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான த.சித்தார்த்தன்.

வவுனியா நகரசபையின் கலாசார மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மக்கள் பிரநிதிகளுடனான சந்திப்பு இடம்பெற்றது. அதில் கலந்துகொண்ட புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தனிடம் “அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தங்களுடைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு புளொட் ஆதரவு அளிக்கிறது என வவுனியாவில் தெரிவித்திருக்கிறாரே புளொட்டின் உண்மையான நிலைப்பாடு என்ன?” – என்று கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த சித்தார்த்தன்,

“சிறி என்பவர் 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் எம்மிடம் வந்து தனக்கு பாதுகாப்புத் தேவை எனத் தெரிவித்து சிறிது காலம் எம்முடன் இருந்தார். அதன் பின்னர் அவர் பிரான்ஸுக்கு சென்றார். மீண்டும் இலங்கைக்கு வந்தவர் அரச சார்பற்ற நிறுவனங்களை நடத்திப் பல பிரச்சினைகளுக்கு உள்ளானார். இப்போது புளொட்டில் இருந்து பிரிந்து நிற்கின்றோம் எனத் தெரிவித்து அமைச்சர் பஸில் ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசியிருக்கிறார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குச் சார்பாக துண்டுப் பிரசுரங்களை வழங்குவதாகவும் தெரிவித்திருக்கிறார். அவற்றையும் வழங்கினார்களா எனத் தெரியவில்லை. அவருடன் எத்தனை பேர் உள்ளனர் என்பதும் தெரியவில்லை. புளொட்டைப் பொறுத்த வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ன முடிவெடுக்கின்றதோ அதுவே புளொட்டின் முடிவாகவும் இருக்கும்.”– என்று தெரிவித்தார். (ற)

## செய்திகள்

# தேர்தலில் தோல்வியுற்றால் அமைதியாக விலகுவேன்

### ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.23

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தோல்வியைத்தழுவினால் தாம் அம்மதியான முறையில் விலகிச் செல்லப் போவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



தேர்தலில் தோல்வியைத்தழுவினால் அமைதியான முறையில் ஆட்சி அதிகாரம் புதிய ஆட்சியாளர்களிடம் ஒப்படைக்கப்படும் என அவர் உறுதியளித்துள்ளார். சர்வதேச ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் தோல்வியைத்தழுவினால் இராணுவ ஆட்சி நடைபெறும் எனவும், பதவி விலகப் போவதில்லை எனவும் வெளியாகும் தகவல்களில் உண்மையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். முதலாவதாக தாம் ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடையப் போவதில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு தோல்வியைத் தழுவினால் மிகவும் அமைதியான முறையில் அதிகாரங்களை ஒப்படைத்துவிட்டு விலகிச் செல்வதாகத் தெரிவித்துள்ளார். எனினும் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தாம் ஒரு போதும் தோற்கப் போவதில்லை என் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் ஏற்கனவே மிகவும் அமைதியான முறையில் அதிகாரங்கள் கைமாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். சில தரப்பினர் குற்றம் சுமத்துவதனைப் போன்று இலங்கை அரசு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறவில்லை எனவும், மனித உரிமை மீறல்களில் ஈடுபடவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் பல வீனமானவை என அவர் தெரிவித்துள்ளார். (ற)

# பரப்புரையில் ஈடுபடாதோர் குறித்த விவரம் ஜனாதிபதிக்கு

கொழும்பு, டிசெ.23

அரசிடம் நிதி பெற்றுக்கொண்ட பின்னர் தேர்தல் பரப்புரைப் பணிகளில் ஈடுபடாமல் உள்ள அமைச்சர்கள் மற்றும் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப் பினர்கள் குறித்து உடனடியாக அறிக்கையொன்றை சமர்ப்பிக்கு மாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியான அனுர சேனநாயக்கவிற்கு உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

அரச புலனாய்வுப் பிரிவால் தேர்தல் பணிகளிலிருந்து விலகியிருக்கும் 46 அமைப்பாளர்களின் பெயர் விவரங்கள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

குறிப்பிட்ட அமைப்பாளர்கள் மற்றும் சந்தேகத்திற்கிடமான முறையில் செயற்படும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கண்காணிப்பதற்காக ஓய்வுபெற்ற பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகளை நியமிக்குமாறும் ஜனாதிபதி பாதுகாப்பு செயலாளருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

குறிப்பிட்ட நபர்கள் தொடர்பான கோப்புகளை தயாராக வைத்திருக்குமாறும், தான் மீண்டும் தெரிவானதும் அவர்களுக்கு எதிரான கடுமையான, பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறும் குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு ஜனாதிபதி உத்தரவொன்றையும் பிறப்பித்துள்ளார் என்றும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# விவாதத்துக்கு தயாரா? நாமலுக்குச் சவால்

### பிரசன்ன சோலங்காரச்சி விடுத்தார்

கொழும்பு, டிசெ.23

பகிரங்க விவாதமொன்றுக்கு வருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு, முல்லேரியா பிரதேச சபையின் தலைவர் பிரசன்ன சோலங்காரச்சி சவால் விடுத்துள்ளார்.



இளைஞர்களுக்கான நாளை (தருனயன்ட ஹெடக்) அமைப்பின் செயற்பாடுகள் குறித்து விவாதம் நடத்த தயார் எனவும், அதற்கு நாமல் ராஜபக்ஷ தயாரா? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரது தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இளைஞர்களுக்கான நாளை அமைப்பு தேர்தல் காலத்தில் மட்டுமே தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. எனினும், இளைஞர்களுக்கு இந்த அமைப்பு எந்தவிதமான சேவைகளையும் வழங்கவில்லை.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக இந்த விவாதத்தை நடத்தத் தயார். நாமல் ராஜபக்ஷவுக்கு தேவை என்றால் 20 பேரை விவாதத்துக்கு அழைத்து வரலாம். தமது பக்கத்தில் இரண்டு பேர் மட்டுமே விவாதத்தில் பங்கேற்பார்கள்"– என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# ஆட்சி மாற்றம் அவசியம்

### அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.23

நாட்டில்போர்முடிவுக்குக்கொண்டு வரப்பட்ட போதிலும் நாடு அபிவிருத்தி அடையவில்லை என்று தெரிவித்துள்ளார் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க.

நிட்டம்புவ கலகெடிஹென குருந்து வத்த பிரதேசத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"30 ஆண்டு கால போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியதாகும். போர் நிறைவின் பின்னர் நாட்டில் அபிவிருத்தி எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அவ்வாறான அபிவிருத்தி எதுவும் இடம்பெறவில்லை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மக்களை ஏமாற்றி தனது பதவிக் காலத்தை நீடித்துக்கொள்ளவே முயற்சிக்கின்றார். அரசால் அண்மையில்சமர்ப்பிக்கப்பட்ட வரவு–செலவுத் திட்டம் முற்று முழுதாக லஞ்ச வரவு–செலவுத் திட்டமாகும். தேர்தல் காலத்திலேயே எரிபொருள்கள் உள்ளிட்ட பொருள்களின் விலைகள் குறைவடையும்.

போர் நிறைவடைந்துள்ள நிலையில் பாதுகாப்பு அமைச்சிற்கான செலவுகள் அதிகரித்துச் செல்கின்றன. இந்த நிலையில் மாற்றத்தைக் கொண்டு வர ஆட்சி மாற்றமொன்று அவசியம்."– என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# திஸ்ஸவுக்கு எதிராக லஞ்சக் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ.23

சுகாதார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க லஞ்சம் பெற்றுக் கொண்டதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எதிர்க் கட்சியின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் தரப்பால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்னர் சுகாதார அமைச்சுப் பதவியை பெற்றுக் கொண்டு கட்சித் தாவியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவிடம் இது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி முறைப் பாடு செய்துள்ளது.

இந்த முறைப்பாடு தொடர்பிலான விசாரணைகள் விரைவில் நடத்தப்படும் என எதிர்பார்ப்பதாகத் தெரிவிக் கப்படுகிறது. ஆளும் கட்சிக்கு ஆதரவளிப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராபஜக்ஷ, சுகாதார அமைச்சு பதவியை லஞ்சமாக வழங்கியுள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதேவேளை, மைத்திரிபால சிறிசேன சித்த சுயாதீன மற்றவர் என ஆளும் கட்சியினர் சுமத்தி வரும் குற்றச்சாட்டு தொடர்பில் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. (ற)

# ஜெனிவா பிரச்சினைக்கு மைத்திரி தீர்வு காணுவார்

### விஜயதாச ராஜபக்ஷ எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, டிசெ.23

ஜெனிவா மனித உரிமைகள் சபையில் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவால் மட்டுமே தீர்வு வழங்க முடியும் என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் மற்றும் போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் ஜெனிவாவில் எழுப்பப்பட்டு வரும் பிரச்சினைக்கு மைத்திரிபால தீர்வு வழங்குவார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



இம்முறை ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டியது மிகவும் இன்றியமையாதது என்று சுட்டிக்காட்டியுள்ள அவர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்கு மக்கள் முற்றுப் புள்ளி வைக்கத் தவறினால் சில வேளைகளில் நாடு பொருளாதாரத் தடைகளைக் கூட எதிர்நோக்க நேரிடலாம் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டுக்கு எதிராக செயற்பட்டு வரும் வெளிநாட்டு சக்திகளை முறியடிக்கக்கூடிய ஆற்றல் ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபாலவுக்கு காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச நீதிமன்றில் நிறுத்தப்படுவதையும் மைத்திரிபால சிறிசேன தடுத்து நிறுத்துவார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சிகள் புலிகளுடன் தொடர்புகளைப் பேணி வருவதாக தேர்தலுக்காக அரசு பரப்புரை செய்து வருகின்ற போதிலும், போர் நிறைவின் போது போர்க் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்துமாறு ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், வெளிவிவகார அமைச்சும் கோரியிருந்தமை நினைவூட்டத் தக்கது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ற)

# தொடர்ச்சிகள்

## தேர்தல்

ஒக்ரோபர் மாதம் 24 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. நியமனங்களை 169 பேருக்கு வழங்கத் திட்டமிட்டபோதும் அவர்களில் 149 பேருக்கே நேற்று வழங்கப்பட்டன. ஏனைய 20 பேரும் நேற்றுச் சமுகமளிக்கவில்லை என்று வைத்தியசாலைத் தரப்பினரால் கூறப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 6 ஆம் திகதி அவர்களுக்கு நியமனம் வழங்குமாறு சுற்றறிக்கை வெளியிடப்பட்டபோதும் இதுவரை அவற்றை வழங்காது இருந்துவிட்டு இன்று தபால் மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ள நிலையில் நேற்று அமைச்சரால் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் ஊழியர்களுக்கு நியமனக் கடிதத்தை வழங்காது இழுத்தடித்த பின்னர் நேற்று அவ்வாறு வழங்கியது தேர்தல் விதிமுறை மீறலாகவே கூறப்படுகின்றது.

நியமனக் கடிதங்கள் வைத்து வழங்கப்பட்ட அட்டையின் வெளிப்புறத்தில் ஜனாதிபதி மஹிந்த வின் படமும், உள்புறத்தில் அமைச்சர் ஒருவரின் படமும் அச்சிடப்பட்டு அதில் வைத்தே நியமனக் கடி தங்கள் வழங்கப்பட்டுள்ளன. சுகாதார அமைச்சின் நிர்வாகப் பணிப்பாளர் கே.திசாநாயக்க கையெழுத்திட்ட அந்த நியமனக் கடிதத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கினார்.

தேர்தல் விதிமுறைகளுக்கு முரணாக அமைச்சர் அவ்வாறு நடந்து கொண்டமை தொடர்பாக, தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கவுள்ளதாக யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (த–4)

## வடக்கு

வேட்பாளர் மைத்திரி பால சிறிசேனவும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் கையெழுத்திட்டு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவற்றைத் தெரிவித்தார். ஐ.தே.க தலைவர் ரணிலுக்கும், பொது எதிரணி வேட்பாளருக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திலே மேற்படி விடயங்கள் உள்ளன என்று அங்கு அவர் கூறினார்.

"ஜனாதிபதியான 24 மணி நேரத்தில் செய்வது, நூறு நாள்களுக்குள் செய்வது, நாடாளுமன்றத் தேர்தல் நடத்திய 2 வருடங்களுக்குள் செய்வது மூன்று கட்டத்தின் கீழ் வேலைத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இதில் 24 மணி நேரத்தில் மேற்கொள்வதில், ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்தல், பிரதமரின் இணக்கப்பாட்டுடன் அமைச்சரவையை நியமித்தல், முக்கிய 20 அமைச்சுப் பொறுப்புக்களை ஐ.தே.கவுக்கு வழங்குதலும், நூறு நாள் வேலைத் திட்டத்தில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குதல், 19 ஆவது திருத்தத்தை கொண்டுவருதலும், தகவல் அறியும் உரிமையை உறுதிப்படுத்தலும், வடக்கிலிருந்து 50 சதவீத இராணுவத்தை வெளியேற்றலும் குறிப்பிடப்பட்டுள்ளது.– என்று அவர் தெரிவித்தார்.

"நாடாளுமன்ற தேர்தல் நடத்தப்பட்ட இரண்டு வருடங்களுக்குள், உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்கி மக்களை குடியமர்த்துதல், 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் தீர்வு வழங்கல், போர்க் குற்ற விசாரணையை தொடர்ந்து முன்னெடுத்தல் என்பன குறிப்பிடப்பட்டுள்ளது."– என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"அதில் பல்வேறு விடயங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கையின் பிரகாரமே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஒப்பந்தம், கடந்த நவம்பர் மாதம் 1 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டது"– என்றும் திஸ்ஸ குறிப்பிட்டார்.

அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்க அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து ஆளும் தரப்புக்குக் கட்சி மாறியிருந்தார், ஐ.தே.கவில் அவர் பொதுச் செயலர் பதவியை வகித்திருந்தார். அதேவேளை, பொது எதிரணி வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன நவம்பர் மாதம் 21 ஆம் திகதியே அறிவிக்கப்பட்டார்.

இவை ஒருபுறமிருக்க, இலங்கை அரசால் இவ்வாறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள போதிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் நேற்று மதியம் சுமார் இரு மணி நேரம் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. அதில் எந்த முடிவும் எட்டப்படவில்லை என்று அறியமுடிகின்றது. (ற–5)

## மஹிந்த

இதுகுறித்து அந்த அமைப்பு தேர்தல்கள் ஆணையாளருக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பி யுள்ளது.

"தேர்தல் அலுவலகம் என்ற போர்வையில் சட்டவிரோத தேர்தல் பரப்புரை நிலையங்கள் இயங்கி வருகின்றது. கடந்த 17 ஆம் திகதி திருகோணமலை கோட்டை இராணுவ முகாமில், 22 ஆவது படையணியின் பிரிகேடியர் ரோஹித தர்மசிரியின் தலைமையில் கடமையிலுள்ள இராணுவ வீரர்களுக்கான கூட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது.

அதில் படையணியின் தளபதி மீண்டும் போர் ஏற்படாதிருக்க வேண்டுமானால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று இராணுவ வீரர்களிடம் தெரிவித்துள்ளார். திருகோணமலை இராணுவ முகாமில் இரண்டாவது கஜபா படையணியின் கட்டளையிடும் அதிகாரி மேஜர் மகேஷ், இரண்டாவது கட்டளையிடும் அதிகாரி மேஜர் அஜித் ஆகிய இருவரும் படையணியின் குடும்பங்களை அழைத்து கடந்த 17 ஆம் திகதி ஊடக சந்திப்பு நடத்தியுள்ளனர்"– என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"ஸ்ரீலங்கா சுதந்திர தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் நிமல் அபேசிரியின் கையொப்பத்துடன், இ.போ.ச நிறைவேற்று அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் தேர்தல் நடவடிக்கைகளுக்கு, போக்குவரத்து சேவையின் பஸ்கள் விடுவிக்கப்படுவது தொடர்பில் இது குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கு மேலாக அரச ஊடகங்களின் ஊழியர்கள் மிரட்டப்பட்டு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக கடந்த 19 ஆம் திகதி பரப்புரை நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்."– என்றும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை தொடர்பிலான ஆதாரங்களும் இணைக்கப்பட்டு இந்தக் கடிதம் தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற–5)

## நலிந்தது

எதிரணியை ஆதரிக்கும் தீர்மானத்தை எடுத்ததை அடுத்து மாகாணசபை உறுப்பினர்களும், பொது எதிரணியில் நேற்று இணைந்து கொண்டனர்.

இதுவரை வடக்கு மாகாண சபையில் ஆளுங்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் 30 பேரும், எதிரணியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் 8 பேரும் இருந்தனர். எதிர ணியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில், மன்னார் மாவட்ட உறுப்பினர் ரிப்கான் பதியுதீன், முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் ஜவாஹிர் ஆகியோர் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸை பிரதிநித்துவப் படுத்தியிருந்தனர்.

இந்தநிலையில் அவர்கள் தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து விலகியுள்ளனர். அதனால் வடக்கு மாகாண சபையில் எதிரணியின் பலம் 6 ஆக குறைவடைந்துள்ளது. (ற–5)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

### தேவை

அப்பம், றொட்டி, பிறைட்றைஸ் வேலை தெரிந்தவர்கள் உடன் தேவை.
தொடர்பு:076 655 8373 (55179)(4,3,7)

### கடைகள் வாடகைக்கு

யாழ். இந்துக் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை ஆகிய வற்றுக்கு அருகில் நான்கு கடைகள் (கீழ், மேல் தளங்கள்) வாடகைக்கு விடப்படும்.
தொடர்புகளுக்கு:
072 810 5930 0777 323156

### கேள்விப் பத்திர விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிற்றுண்டி நிலையம் 2015ஆம் ஆண்டு நடத்துவதற்கு கேள்விப் பத்திர விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. கேள்வித் தொகையின் ஆகக் குறைந்த கட்டணம் .மாதம் ரூபா 25,000/= கேள்விப் பத்திர விண்ணப் பங்களை வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சைப் பிரி வில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

**படிவக் கட்டணம்** ரூபா 100.00
**மீளளிக்கும் கட்டணம்** ரூபா 500.00

விண்ணப்பதாரர் இரண்டு கட்டணங்களையும் செலுத்தி விண்ணப்பத்தைப் பெற்று எதிர்வரும் 05.01.2015 ஆம் திகதிக்கு முன்பதாக **தலைவர், நோயாளர் நலன்புரி சங்கம், ஆதார வைத்திய சாலை சாவகச்சேரி** என்ற விலாசத்துக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்க வேண்டும்.

இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் நோயாளர் நலன்புரி சங்கத்துக்கே உண்டு.

**22.12.2014** (C/18294) (10) **செயலாளர்.**




**யாழ். மாவட்ட
பட்டதாரிகளுக்கான மாநாடும்
வேலையற்ற பட்டதாரிகளுக்கான
நிர்வாகத் தெரிவும்**

கௌரவ மாகாணசபை உறுப்பினர், சிறிலங்கா சுதந்திரக்கட்சி பிரதான அமைப்பாளர் **அங்கஜன் இராமநாதனின்** ஏற்பாட்டில் பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும்பொருட்டு மாநாடும் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறவுள்ளது

**இடம்** : கிறீன் கிறாஸ் விடுதி (*Hotel*)
**காலம்** : 24.12.2014
**நேரம்** : காலை 9.00 மணி

அனைத்து பட்டதாரிகள், வேலையற்ற பட்டதாரி மாணவர்களும் கலந்து கொள்ளவும்.

**அங்கஜன் இராமநாதன்**
மாகாணசபை உறுப்பினர், சிறிலங்கா சுதந்திர கட்சி
யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர்.

### இளைஞர் மாநாடு




சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர் **அங்கஜன் இராமநாதன்** தலைமையில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் **நாமல் ராஜபக்ஷ** அவர்களின் **நில செயலணியுடன்** அங்கஜன் இராமநாதனின் இளைஞர் அணியும் இணைந்து கிராமங்கள் தோறும் சேவையினை மேற்கொள்ளவுள்ளது.

எனவே இச் செயலணியுடன் இணைய விரும்பும் 18 வயது முதல் 35 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர் யுவதிகள் தொகுதி வாரியாக நடைபெறுகின்ற அறிமுக நிகழ்வில் பங்கு கொள்ளவும்.


இடம் : Green Grass Hotel
கிறீன் கிறாஸ் ஹொட்டேல்

| திகதி | தொகுதி | நேரம் |
|---|---|---|
| 23.12.2014 | யாழ்ப்பாணம், நல்லூர். | காலை 9.00 மணி |
| | கோப்பாய், மானிப்பாய் | மாலை 2.00 மணி |
| 24.12.2014 | வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை | மாலை 2.00 மணி |
| 26.12.2014 | சாவகச்சேரி, ஊர்காவற்றுறை | காலை 9.00 மணி |
| | உடுப்பிட்டி, பருத்தித்துறை | மாலை 2.00 மணி |

**அங்கஜன் இராமநாதன்**
மாகாணசபை உறுப்பினர், சிறிலங்கா சுதந்திர கட்சி
யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர்.

# செய்திகள்

## ரியல் மட்ரிட் அணி சம்பியன்



கழகங்களுக்கிடையிலான 'பிபா' உலகக் கிண்ண உதைபந்து தொடரில் ரியல் மட்ரிட் அணி சம்பியன் பட்டம் வென்றது.

இந்தப் போட்டித்தொடரின் இறுதிப்போட்டியில் ஸ்பெயினின் ரியல் மட்ரிட் அணி, ஆர்ஜென்ரீனாவின் சான் லாரன்சோ அணிகள் மோதின.

அபாரமாக ஆடிய ரியல் மட்ரிட் அணி 2–0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ரியல் மட்ரிட் அணி சார்பில் ரமோஸ் (37ஆவது நிமிடம்), பாலே (51ஆவது நிமிடம்) தலா ஒரு கோல் அடித்தனர்.

இதன்மூலம் ரியல் மட்ரிட் அணி, கழக அணிகளுக்கு இடையிலான உலகக்கிண்ணத் தொடரில் முதன்முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

தவிர, இத்தொடரில் கிண்ணம் வென்ற 9ஆவது அணி என்ற பெருமை பெற்றது.

இத்தொடரில் ஸ்பெயினின் பார்சிலோனா (2009, 11), பிரேஸிலின் கோரின்தியன்ஸ் (2000, 12) அணிகள் தலா 2 முறை கிண்ணம் வென்றுள்ளன.

சாவ் பாலோ (2005), இன்டர்னாசியோனல் (2006), மிலன் (2007), மான்செஸ்டர் யுனைடெட் (2008), இன்டர்னாஜியோனல் (2010), பேயர்ன் முனிக் (2013) தலா ஒரு முறை கிண்ணத்தை வென்றுள்ளன.

கழக அணிகளுக்கு இடையிலான 11 ஆவது 'பிபா' உலகக்கிண்ண கால்பந்து தொடர் மொராக்கோவில் நடந்தது. (த)



## மேற்கிந்தியத் தீவுகள் தலைவராக ஜேஸன்

மேற்கிந்தியத் தீவுகள் ஒருநாள் போட்டிகளுக்கான அணித் தலைவ ராக ஜேஸன் ஹோல்டர் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனவரி 6ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள தென்னாபிரிக்க அணிக்கெதிரான ஒருநாள் போட்டித் தொடரிலிருந்து இவர் அணித் தலைவராக செயற்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டே இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிளைவ் லொய்ட் தலைமையிலான தேர்வுக்குழு தெரிவித்துள்ளது. டரன் சமிக்குப் பின்னர் அணித் தலைமைப் பொறுப்புக்கு வந்த டுவைன் பிராவோ, அதன்பின்னர் மே.இ.தீவுகள் விளையாடிய 27 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 12 இல் வெற்றியை ஈட்டிக்கொடுத் திருந்தார்.

டுவைன் பிராவோவிடமிருந்து அணித் தலைமைப் பொறுப்பு மாற்றப்பட்டமைக்கு மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் எதிர் காலம் மட்டுமே காரணமாக இருக்கமுடியாது என்பதும், அண்மையில் இந்தியாவுக்கான கிரிக்கெட் சுற்றுப் பயணத்தை இடைநடுவில் கைவிட்டு, வீரர்கள் நாடு திரும்பியமையே இந்தத் தீர்மானத்துக்கான முக்கிய காரணமாக இருக்கலாம் என்பதும் பரவலான கருத்தாக உள்ளது.

23 வயதான ஜேஸன் ஹோல்டர், மிதவேகப் பந்துவீச்சாளர். இவர், இதுவரை 21 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடி 29 இலக்குகளைக் கைப்பற்றியுள்ளார். (த)

## சர்மாவுக்கு அபராதம்



பிரிஸ்பேன் டெஸ்டில் விளையாடிய இஷாந்த்சர்மா, மற்றும் சுமித்துக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பிரிஸ்பேனில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா 4 இலக்குகள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 2–0 என தொடரில் முன்னிலை வகிக்கிறது.

இந்த டெஸ்ட்டில் ஆஸ்திரேலிய பந்து வீச்சாளர்கள் குறிப்பிட்ட நேரத்திற்குள் பந்து வீசாமல் மெதுவாக பந்து வீசியது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனால் ஆஸ்திரேலிய வீரர்களுக்கு 30 சதவீத அபராதமும், அணித் தலைவராக செயல்பட்ட சுமித்துக்கு 60 சதவீத அபராதமும் விதித்து ஐ.சி.சி. உத்தரவிட்டுள்ளது.

மேலும், சுமித் இன்னும் ஒரு வருடத்துக்குள் மீண்டும் ஒரு முறை இவ்வாறு செய்தால் அவருக்கு ஒரு போட்டியில் விளையாட தடை விதிக்கப்படும்.

போட்டியின்போது ஒவ்வொரு பந்துப்பரிமாற்றத்தையும் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் பந்து வீச்சாளர்கள் வீசத் தவறினால் அவர்களுக்கு 10 சதவீதம் அபராதம் விதிக்கப்படும்.

அணித் தலைவருக்கு அது இரண்டு மடங்காகும் என்பது ஐ.சி.சி. விதிமுறையாகும். அதேபோல், முதல் இன்னிங்ஸில் இந்திய வீரர் இஷாந்த் சர்மா வீசிய பந்தில் சுமித் கிளீன் போல்டானார்.

அப்போது, சுமித்துக்கு எதிராக சில வார்த்தைகளை இஷாந்த் பேசியது காணொலியில் பதிவாகியிருந்தது.

இந்த பேச்சு ஐ.சி.சி. விதிமுறைக்கு எதிரானது என அவருக்கு 15 சதவீத அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (த)

## தொடர்ச்சிகள்

### இரணைமடு

31 அடி 5 அங்குலமாக உயர்ந்ததை அடுத்து 7 வான் கதவுகள் 6 அங்குலம் திறக்கப்பட்டன.

முற்பகல் 10 மணியளவில் குளத்தின் நீர் மட்டம் 31 அடி 7 அங்குலமாக உயர்ந்தது. அதையடுத்து ஏனைய வான் கதவுகளும் திறக்கப்பட்டன. 10 வான்கதவுகளும் 8 அங்குலம் திறக்கப்பட்டன. குளத்தில் 11 வான் கதவுகள் காணப்படுகின்றபோதும், அவற்றில் ஒன்று சற்றுப் பழுதடைந்துள்ளதை அடுத்து திறக்க முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இரணைமடுத் திட்ட விவசாய சம்மேளனத்தின் செயலாளர் மு.சிவமோகன் இதுகுறித்துக் கருத்துத்தெரிவித்தபோது, "மழை தொடர்ச்சியாகப்பெய்து தொடர்ந்தும் இரணைமடுக் குளத்துக்கு நீர்வரத்து அதிகரித்து வான்கதவுகள் திறக்கப்பட்டிருக்குமானால் குளம் வான்பாயும் பகுதியில் 15 ஏக்கர் வரையிலான நெல் வயல்கள் பாதிப்பு ஏற்படக்கூடிய நிலை ஏற்படும் அதிலும் 4 நாள்களுக்கு மேல் தொடர்ச்சியாக வான்பாயுமாக இருந்தால் 5 ஏக்கர் முதல் 8 ஏக்கர் வரையிலான வயல்கள் வெள்ளத்தினால் அழிவைச் சந்திக்க நேரிடும். இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தான் தொடர்ந்தும் பாதிப்புக்களை எதிர்நோக்க நேரிடும்"– என்று தெரிவித்தார்.

குளம் வான் பாய்வதால் நீர்வரத்து வேகம் அதிகரித்துக்காணப்படும். பன்னாங்கண்டி, மருதநகர், முரசுமோட்டை, கண்டாவளை, ஊரியான் போன்ற கிராமங்களில் வசிக்கின்ற மக்கள் அவதானமாக இருப்பதுடன் ஆடு, மாடு போன்ற கால்நடைகளையும் மேட்டு நிலப் பகுதிகளுக்கு அப்புறப்படுத்துவது சிறந்தது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குளத்தின் வான்கதவுகள் திறக்கப்படும் சமயம், வடமாகாண நீர்ப்பாசன விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் ஆகியோர் அங்கு நின்றிருந்தனர். (ற–426)

### மஹிந்த

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் அங்கம் வகித்த அமைச்சர் ரிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் அரசிலிருந்து நேற்று வெளியேறுவதாக அறிவித்தது. அத்துடன் ஜனாதிபதி தேர்தலில் எதிரணிகளின் பொது வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்க அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது.

அமைச்சர் ரிசாத் பதியுதீன் மற்றும் அந்தக் கட்சியின் சார்பில் அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்ற அமீர் அலி ஆகியோர் நேற்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டனர். அங்கு கருத்துத் தெரிவிக்கும்போதே ரிசாத் பதியுதீன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த சந்திப்பில் எதிரணிகளின் பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அரச தரப்பினருக்கும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸுக்குமிடையில் நடைபெற்ற பேச்சின் பலனாக, இம்மாத ஆரம்பத்தில் அரச கூட்டணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான எச்.எம். அஸ்வர் தனது பதவியிலிருந்து விலகியிருந்தார். அந்த வெற்றிடத்துக்கு எஸ்.எச். அமீர் அலிக்கு நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

அதேவேளை, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினரான பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தனது ஆதரவை வழங்கி வருகின்றார். (ற–5)

# விளையாட்டு

## வாய்ப்பு இருந்தபோதும் நழுவிப் போன வெற்றி

பிரிஸ்பேனில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்தியாவுக்கான வெற்றி வாய்ப்பு இருந்தும் அது கடைசியில் கைநழுவிப் போனது.

ஜோன்சன் அடித்த 88 ஓட்டங்கள் ஆஸ்திரேலியா 505 ஓட்டங்கள் குவிக்க வழி வகுத்தது. அத்துடன் இந்தியாவின் முக்கியமான வீரர்களை வீழ்த்தி வெற்றிக்கும் வித்திட்டார்.

இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இந்தியா 3ஆவது நாள் ஆட்ட முடிவில் ஒரு இலக்கு இழப்புக்கு 71 ஓட்டங்கள் எடுத்திருந்தது. தவான் 26 ஓட்டங்களுடனும், புஜாரா 15 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

வலை பயிற்சியின்போது தவானுக்கு காயம் ஏற்பட்டது. இதனால் கோஹ்லி களம் இறக்கப்பட்டார். அவர் ஓர் ஓட்டத்தில் ஆட்டமிழந்தார். அதன்பின் வந்த ரகானே (10), ரோகித்சர்மா (0), டோனி (0) ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் ஆட்டம் இழந்தனர். அதன்பின் வந்த தவான் 81 ஓட்டங்கள் அடித்தார். எனவே, தவான் முன்கூட்டியே இறங்கியிருந்தால் இந்தியா கூடுதல் ஓட்டங்கள் சேர்த்திருக்கலாம் என்று கூறப்பட்டது.



இது குறித்து டோனி கூறும்போது, நாங்கள் வலைப் பயிற்சியில் ஈடுபட்டபோது பயிற்சிக்காக அமைக்கப்பட்ட ஆடுகளம் நன்றாக இல்லை. பயிற்சியின்போது தவானை பந்து தாக்கியது.

காயத்திற்காக எந்த அறிகுறியும் தவானிடம் இருந்து வரவில்லை. அதனால் அவர் சிறப்பாக துடுப்பாட்டம் செய்வார் என்று நினைத்தோம். போட்டி தொடங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன் அவர் அதிகமாக வலி இருப்பதால், தன்னால் துடுப்பாட்டம் செய்ய முடியவில்லை என்றார்.

அதனால், விராட் கோஹ்லியை தயார்படுத்துவதற்கு அவருக்கு 5 முதல் 7 நிமிடங்கள் மட்டுமே வாய்ப்புக் கொடுக்க முடிந்தது.

அதேசமயம் தவானை துடுப்பெடுத்தாட அனுப்புவதா? அல்லது கோஹ்லியை அனுப்புவதா? என்பது தொடர்பாக வீரர்கள் அறையில் தொடர்பு கொள்ள இயலாததால், சூழ்நிலையை கையாள முடியவில்லை. இதனால், வீரர்கள் அறையில் பதட்டமாக காணப்பட்டது. மதிய உணவு இடைவேளைக்கு முன்பான ஆட்டம் எங்களுக்கு பெரும் சங்கடமாகவும் இருந்தது.

ஜோன்சன் அருமையாக துடுப்பெடுத்தாடினார். இந்திய பந்து வீச்சாளர்கள் புதிய பந்தை எடுக்குமபோது பந்து மென்மையாகவும், அதே சமயத்தில் பந்து வீச்சாளர்கள் சோர்வாகவும் இருந்தார்கள். இதனால் ஜோன்சன் அடித்து விளையாடினார்.

மேலும், அவருக்கு அதிர்ஷ்டமும் இருந்தது. இதனால் அவர் அடித்த பந்து களத்தடுப்பாளர்களிடம் செல்லவில்லை, அவர் ஓட்டங்கள் குவித்தார்.

3 ஆவது போட்டி மெல்போர்னில் சிறப்பான நாளில் தொடங்குகிறது. அதிக அளவு ரசிகர்கள் மத்தியில் விளையாடுவது சந்தோஷம். எங்களுக்கு மெல்போர்ன் சிறப்பாக அமையும் என நம்புகிறோம் என்று கூறியுள்ளார். (த)

## களமிறங்கும் மலிங்க



இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் மலிங்க நியூஸிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் போட்டியில் களமிறங்குவார் என பயிற்சியாளர் அத்தப்பத்து உறுதியளித்துள்ளார்.

இடது கணுக்காலில் ஏற்பட்ட பாதிப்பால் மலிங்கவுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. தற்பொழுது அவர் ஓய்வு பெற்று வருகிறார். இதன் காரணமாக இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு எதிராக இலங்கை அணி விளையாடிய தொடர்களிலும் விளையாடவில்லை.

இந்நிலையில் மலிங்க மீண்டும் இலங்கை அணியில் இணையவுள்ளார் என அணியின் பயிற்சியாளர் அத்தப்பத்து தெரிவித்துள்ளார்.

மேலும், இது குறித்து அவர் கூறுகையில், தற்போது மலிங்க ஓய்வு பெற்று வருகிறார். எல்லாம் திட்டமிட்டபடி நடந்து வருகிறது.இதனையடுத்து நியூஸிலாந்து அணிக்கு எதிராக கடைசி 2 ஒருநாள் போட்டிகளில் மட்டும் அவர் விளையாடவிருக்கிறார்.

மலிங்க, நுவன் குலசேகர ஆகிய இருவரும் உலகக்கிண்ண அணியில் இருப்பது அணிக்கு பலம் சேர்க்கும் என்று கூறியுள்ளார். (த)

## உலகக்கிண்ண தூதராக டெண்டுல்கர் நியமனம்



உலகக்கிண்ணப் போட்டிக்கான தூதராக இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கரை சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

11ஆவது உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகள் ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய நாடுகளில் நடைபெறவுள்ளது. இரு நாடுகளிலும் 14 இடங்களில் மொத்தம் 49 போட்டிகள் நடை பெற உள்ளன்.

இப்போட்டிகள் வரும் பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி தொடங்கி மார்ச் மாதம் 29ஆம் திகதி வரை நடக்கவுள்ளது. இப்போட்டிகளுக்கு தூதராக சச்சின்டெண்டுல்கரை நியமித்த ஐ.சி.சி. இதற் கான அறிவிப்பை இன்று வெளியிட்டது.

சச்சின் டெண்டுல்கா இரண்டாவது முறையாக இந்தப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 2011ஆம் ஆண்டு இந்தியா, வங்கதேசம், இலங்கை ஆகிய நாடுகள் நடத்திய உலகக் கிண்ணப் போட்டியில் தூதுவராக இருந்தார்.

## காதலிகளுக்கு அனுமதியில்லை



ஆஸ்திரேலியா சென்றுள்ள இந்திய வீரர்கள் தங்கள் மனைவிகளுடன் தங்கிக் கொள்ள இந்திய கிரிக்கெட் சபை அனுமதி வழங்கியுள்ளது.

அதேசமயம் வீரர்கள் தங்கள் காதலியுடன் தங்கிக் கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

4 டெஸ்ட் மற்றும் 3 நாடுகள் பங்கேற்கும் ஒருநாள் போட்டியில் விளையாடுவதற்காக கடந்த மாதம் இந்திய அணி ஆஸ்திரேலியா சென்றது. இந்த டெஸ்ட் தொடர் ஜனவரி 10ஆம் திகதியுடன் முடிகிறது.

இதைத் தொடர்ந்து 3 நாடுகள் பங்கேற்கும் ஒருநாள் போட்டி ஜனவரி 16ஆம் திகதி முதல் பெப்ரவரி 1ஆம் திகதி வரை நடக்கிறது.

மேலும் உலகக்கிண்ணப் போட்டி பெப்ரவரி 14ஆம் திகதி முதல் மார்ச் 29ஆம் திகதி வரை ஆஸ்திரேலியா, நியூஸிலாந்தில் நடக்கிறது. அதனால் உலகக்கிண்ண தொடர் வரை இந்திய அணி ஆஸ்திரேலியாவில் தங்கி இருக்கும்.

இந்திய வீரர்கள் ஆஸ்திரேலியாவில் 4 மாதங்கள் வரை இருப்பதால் இந்திய வீரர்கள் தங்கள் மனைவிகளுடன் இருக்க கிரிக்கெட் சபை அனுமதி வழங்கியுள்ளது.

இந்நிலையில் மெல்போர்னில் நடைபெறும் 3 ஆவது டெஸ்ட் போட்டியின்போது வீரர்களின் மனைவிகள் ஆஸ்திரேலியா சென்றடைவார்கள்.

அதன்படி அணித் தலைவர் டோனி, தவான், புஜாரா, முரளிவிஜய், அஸ்வின், உமேஷ் யாதவ் ஆகிய வீரர்களின் மனைவிகள் அவுஸ்திரேலியா செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் வீரர்களின் காதலிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. வீரர்களுடன் தங்கி இருக்க ஏற்கனவே கிரிக்கெட் சபை தடை விதித்து இருந்தது. அதன்படி இந்த தடை தொடர்ந்து நீடிக்கிறது. இங்கிலாந்து சுற்றுப்பயணத்தின் போது விராட் கோஹ்லி தனது காதலி அனுஷ்கா சர்மாவுடன் பல்வேறு இடங்களில் சுற்றித் திரிந்தார். ஆனால் தற்போது உள்ள தடையால் அனுஷ்கா சர்மாவுடன் கோஹ்லி இணைந்து இருக்க முடியாது. (த)

# செய்திகள்

NEC
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
ஆரம்பம் 03.01.2015
சனி காலை 8.00 மணி
A/L 2017
கலை வர்த்தகம்
கணிதம் உயிரியல்
தொழில் நுட்பம்

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## ஒருநாள் கிரிக்கெட்டில் ஓய்வு பெறும் அப்ரிடி

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கு பிறகு ஒரு நாள் போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் அதிரடி ஆட்டக் காரர் ஷகிட் அப்ரிடி அறிவித்துள் ளார்.

இது குறித்து அவர் கூறும்போது,

நல்ல நிலைமையில் இருக்கும்போதே ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்றுவிட வேண்டும் என்று விரும்பினேன். அதற்கு இதுதான் சரியான நேரம் என்று நினைக்கிறேன். அதன்பிறகு 20 பந்துப்பரிமாற்ற கிரிக்கெட் போட்டியில் கவனம் செலுத்துவேன்.

சரியான நேரத்தில் இந்த முடிவை எடுக்கக்கூடிய தைரியம் எனக்கு உண்டானதை எண்ணி நான் மிகழ்சி அடைகிறேன். ஏனென்றால், கடந்த காலங் களில் என்னை விட பெரிய வீரர்களெல்லாம் சரி யான நேரத்தில் இதைப்போன்ற முடிவை எடுக்க முடியாமல் திணறி உள்ளனர்.



அடுத்த 20 பந்துப்பரி மாற்ற உலகக் கிண்ண கிரிக் கெட்போட்டி இந்தி யாவில் நடைபெற இருக் கிறது. இதில் பாகிஸ்தான் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்பதுதான் என் ஆசை.

உலகக் கிண்ணப் போட்டிக்கு பிறகு ஏராளமான 20 பந்துப்பரிமாற்ற போட்டியில் விளையாடுவேன். 2016ம் ஆண்டு நடை பெறும் 20 பந்துப்பரிமாற்ற உலகக்கிண்ண போட்டிக்கு வலுமையான பாகிஸ் தான் அணியை உருவாக்க முயற்சி செய்வேன்.

முறையாக ஓய்வு திகதி அறிவித்து செல்லும் முதல் பாகிஸ்தான் வீரர் நானாகத்தான் இருப்பேன். இதுவே எனக்கு போதும். ஒருநாள் போட்டியில் நான் அதிகளவில் சாதித்து விட்டேன்" என்றார்.

34 வயதாகும் அப்ரிடி 389 போட்டிகளில் விளை யாடி 7870 ஓட்டங்கள் அடித்ததுடன் 391 இலக்கு களும் வீழ்த்தியுள்ளார்.

ஒருநாள் போட்டியில் அதிவேகமாக சதம் அடித்து சாதனை படைத்தவர் அப்ரிடி. இவரது சாதனையை 17 வருடங்கள் கழித்து நியூஸிலாந்து வீரர் கோரி ஆண்டர்சன் முறியடித்தது குறிப்பிடத்தக்கது. (த)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

உதயம் ★ 04 . 07 . 1946

அஸ்தமனம் ★ 13 . 01 . 2013



### அமரர் இராசையா ஆறுமுகம்

(ஓய்வுபெற்ற மருந்தாளர்-வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை)

திதி: வளர்பிறை துதியை (25.12.2014) சிரார்த்ததினம்

கவலை ஏதுமின்றி கனிவான வாழ்வில்
கடமையே கண்ணாகக் கொண்டு
கடமையாற்றி எமக்கு நல்வழிகாட்டிய அன்புத் தெய்வமே

ஆண்டிரண்டுகள் ஆனதுவே
எமைப்பிரிந்து எமதருமை அப்பாவே?
சடுதியாக நீங்கள் பிரிந்தமையால்
கலங்கியே நிற்கின்றோம் இன்றுவரை நாம்
நிஜம் காணத் துடிக்கின்றோம்
மனம் வாடித் தவிக்கின்றோம்
முகம் காண அழைகின்றோம்
முடியாமல் அழுகின்றோம்.

ஈராண்டுகள் என்ன எம் உயிர் உள்ளவரை
உங்களை நினைந்துருகி வாழ்வோம் அப்பா என்றும்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

குனமணிதேவி ஆறுமுகம்
ஆ. சஞ்ஜீவன்
ஆ. மஞ்ஜீவன்

## மரண அறிவித்தல்

### செல்வி சபாரத்தினம் பாக்கியலட்சுமி

(முன்னாள் தட்டெழுத்தாளர் குடிவரவு குடியகல்வு திணைக்களம்)



பூதவராயர் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப் பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி சபா ரத்தினம் பாக்கியலட்சுமி நேற்று (22.12.2014) திங்கட் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (23.12. 2014) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் பி.ப 3 மணியளவில் நடைபெற்று, பி.ப 4 மணியளவில் கொட்டடி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூதவராயர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 911 6196, 077 655 1797

NEW SCIENCE WORLD
Navalar Road - Brown road Junction, Jaffna.
Web : www.physicsocean.com
E-mail : info@physicsocean.com
Telephone : 077 336 4055
G.C.E(A/L) 2017 SCIENCE STREAM
தமிழ்மொழி மூலம்
பௌதிகவியல் — திரு. R. குமரன், திரு. R. குகன்
இரசாயனவியல் — திரு. டயஸ், திரு. T. சிவகுமார்
உயிரியல் — திரு. S. பொன்திவாகரன், திரு. V. உமாசங்கர் (கொழும்பு முன்னணி உயிரியல் ஆசிரியர்)
English Medium
Physics — Mr. R.Kumaran
Chemistry — Mr. Dias
Biology — Mr. V. Umashanger (Leading Biology Teacher- Colombo)
ஆரம்பம் :- 23.12.2014 செவ்வாய் காலை 07.00மணி
வகுப்புக்கள் யாவும் 23.12.2014 இன்று காலை 07.00மணி முதல் நடைபெறுகின்றன.

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
O/L எழுதிய மாணவர்கள், உயர்கல்வி மாணவர்கள், தொழில்புரிவோருக்கானது
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்களும் மூன்று மாதங்களிலேயே சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்.
யாழ்நகரில் சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு 1: 8.00 - 10.00
பிரிவு 2 : 10.00 - 12.00
பிரிவு 3 : 1.00 - 03.00
பிரிவு 4 : 3.00 - 05.00
எமது சங்கானை மற்றும் நெல்லியடி கிளைகளில் புதிய பிரிவுகள் ஆரம்பம் 27.12.2014
நெல்லியடியில்
1. காலை 8.00-10.00
2. காலை 10.00-12.00
3. மாலை 3.00-05.00
சங்கானையில்
1. காலை 8.00-10.00
2. காலை 10.00-12.00
3. மாலை 3.00-05.00
27.12.2014 இற்குமுன் பதிவுசெய்வோருக்கு புத்தகத்திற்கான கட்டணம் அறவிடப்படமாட்டாது.
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்
021 320 3313
077 621 4567

Beacon Study Center
Vathiry, Karaveddy.
தொழில்நுட்பவியல் பாடநெறி
Technology Stream
22.12.2014 ஆரம்பமாகி நடைபெறுகின்றது.
* Bio system Technology/ Engineering Technology
* Science for Technology
தெரிவுப்பாடங்கள்
* Accounts * ICT * Economics
* Geography
செயன்முறையுடன் கூடிய கற்பித்தல்
Paper class ஆரம்பம்
* 2015 A/L - 10.01.2015 (பி.ப 3.00)
* 2016 A/L - 10.01.2015 (பி.ப 4.30)
* 2015 A/L, 2016 A/L தொழில்நுட்பவியல் பிரிவுகள் நடைபெறுகின்றன
* 2017 A/L, கணித, உயிரியல் பிரிவுகளும் 22.12.2014 ஆரம்பமாகி நடைபெறுகின்றன பிரிவுகள்டைபெறுகின்றன
தொடர்புகளுக்கு: 077 6029235 (நிர்வாகி)

கலை, வர்த்தகம் தொழில்நுட்பம்
A/L 2017
ஆரம்பம்
யாழ். நகரில் 8.00 am
சுன்னாகத்தில் 3.00 pm
D.C.M



கபிலா
பாதணியகம்
13, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
பாடசாலை மாணவர்களுக்கான
Bata DSI பாதணிகளைப் பெற்றுக்கொள்ள
பொறுத்த விலையைவிடக் குறைவான விலையில்.... அசத்தலான தள்ளுபடி
கபிலா
காலணியகம்
24, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.